உ

கடவுள் துணை.

ஜாதக ராஜ "பாவ இருவாக்ஷி"

என்னும்

ஆயுள், ஜீவன, களத்திர பாவங்கள்

மலர் 1.

(பாகம் நெ. 2, களத்திர பாவம் என்ற ஏழாம் பாவம்)

(Astrological Dogmas employed mostly Nadi Granthas)

இது நாடிக் கிரந்தங்களில் உபயோகப் படுத்தப்பட்ட
விதிகளின் திரட்டு முதலியன ஆகும்.

இது சென்னை, முத்தியாலுப் பேட்டை ஐஸ்கூலில் சைன்ஸ்
உபாத்தியாயரா யிருந்தவரும், கணித சாஸ்திரத்தில் பி. ஏ.
பட்டம் வகித்தவரும், திருக்சித்த ஆரிய சூரிய சித்தாந்த
வாக்கிய கணிதப் பயிற்சியுள்ளவரும், நாமகள் சுத்த
திருக்கணித பஞ்சாங்கம், தென்னாட்டு வாக்கிய
பஞ்சாங்கம் இவைகளின் கணிதரும், இராஜ
ஜோதிட கணிதம், ஜாதக கணிதம், இவை
களின் ஆசிரியரும், பிருஹத் ஜாதகத்
தின் பதிப்பாசிரியருமாகிய

C. G. ராஜன், B. A., (*Mathematics*)

அவர்களால் எழுதப்பட்டது.

கிடைக்கும் இடம் :—சி. கனகம்மாள் ஆப்
சி. சுப்பிரமண்யம் அண்டு பிரதர் கம்பெனி
31, ஆயலூர் முத்தய்யா முதலி தெருவு, கிருஷ்ணப்ப நாயக்கன்
குளம் சமீபம், சௌகார்பேட்டை போஸ்டு, மதருஸ்.

1948

சென்னை] All rights Reserved [இரண்டாம் பதிப்பு.

முன்னுரை.

—:※:—

இப்புத்தகம் என்னுடைய “ஜாதககணிதம் மூன்றும்பாகம் நான்காம்பாகம் என்னும் ஜாதக ராஜமனோரஞ்சிதம் மலர் 1, மலர் 2” ஜாதக ராஜபாவ இருவாக்ஷி என்னும் ஆயுள், ஜீவன, களத்திர பாவங்கள் மலர் நெ. 1 பாகம் நெ. 1 ஆயுள் பாவம் என்ற மூன்று புத்தகங்களின் துடர்ச்சியாகும். மேலும் இது ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்னும் ஜாதகப் பலாபலன்கள் நிர்ணயம்” என்ற என்னுடைய புத்தகத்தில் ஏழாவது அத்தியாயம் 116-வது அயிட்டமாகிய “துவாதச லக்கின ஜாதக பலன்கள்” என்ற பகுதியின் துடர்ச்சியாகும். இப்போது ஜோதிட கிரந்தங்கள் அனேக கிரந்தங்கள் அச்சிடப்பட் டிருக்கின்றன. அவைகளில் கிரகங்களின் நிலையை மேஷ லக்கினம், ரிஷப லக்கினம் முதலிய துவாதச லக்கினங்கள் ரீதியாய் அனுசரித்துச் சொல்லாமல் அதாவது லக்கினம் இன்ன ராசியிலிருக்கின்றதென்று குறிக்காமல் பொதுவாய் லக்கினத்துக்கு இத்தனையாவது வீட்டில் அல்லது பாவத்தில் அல்லது ராசியில் கிரகம் இருந்தால் இந்த இந்த பலன்கள் நேரிடும் என்று சொல்லி இருக்கின்றது. லக்கினத்தை இன்ன லக்கினம் என்று நிர்ணயித்து விட்டால் கிரகங்கள் ஆதிபத்தியமும் சுபா அசுப குணங்களும் தானகவே நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன; அப்போது கிரகங்சள் தங்கள் தங்களுடைய நிலையையும் பார்வையும் சம்பந்தத்தையும் அனுசரித்துக் கொடுக்கும் பலன்கள் அந்தக் குறித்த லக்கினம் வரையிலும் ஸ்திரமாகவும் துல்லிபமாகவும் அமையப்படுகின்றன. இவ்விதமாக லக்கினம் இன்ன ராசியிலிருக்கின்றது என்பதைக்குறிக்காமல் பொதுவாய்ப் பலன் சொல்லத் துணிவோமானல் கிரகங்களின் ஆதிபத்தியமும் சுபா அசுப குணங்களும் தானகவே நிர்ணயிக்கப்படாமல் போய் விடுவதால் ஜோதிடர்கள் அந்தந்தக் கிரகத்தின் ஆதிபத்தியத்தையும் சுபா அசுப குணங்களையும் தாங்களே நிர்ணயஞ் செய்து அதனல் பலாபலன்களில் ஏற்படும் பேதாபேதங்களைச் சிரமப்பட்டு தாங்களே நிர்ணயஞ் செய்ய வேண்டியதாயிருக்கும். இத்தகைய சிரமத்தை நீக்கும் பொருட்டும், ஜோதிடர்கள் தாங்களே நிர்ணயஞ் செய்வதில் தவறுகள் ஏற்படக்கூடுமாகையால் அத்தவறுகள் கூடியமட்டும் நேரிடாமலிருக்கும் பொருட்டும் நமது மகரிஷிகள்

தங்களுடைய கிரந்தங்களில் லக்கினத்தை நிர்ணயஞ் செய்தும், அப்படி நிர்ணயஞ் செய்வதாலுண்டாகும் கிரகங்களின் ஆதிபத்தியத்தையும் சுபா அசுப குணங்களையும் அனுசரித்தும் பலாபலன்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

(2) இவ்வித பலாபலன்கள் அடங்கியுள்ள கிரந்தங்களின் பெரும்பான்மையான கிரந்தங்கள் அழிந்துபோய் விட்டபடியால் இப்போது அவை ஓலையிலாவது அல்லது காகிதத்திலாவது கிடைப்பது அபூர்வமாக விருக்கின்றது. மேலும் அக்கிரந்தங்களில் தற்காலம் அகப்படக்கூடிய சிற்சில கிரந்தங்கள் ஓலையில் எழுதப்பட்டு சில குடும்பங்களில் தங்களால் மாத்திரம் உபயோகப்படுத்தப்பட்டும் உபயோகப் படுத்தப்படாமல் செல்லுக்கும், பாச்சைக்கும் இறையாக இருப்பதாலும் அவை பொது ஜனங்களுக்குக் கிடைப்பது மிகவும் அரிதாயிருக்கின்றது. அழிந்து போய்விட்ட கிரந்தங்களில் கொடுக்கப்பட்டுள்ள விதிகள் நாடிக் கிரந்தங்களில் மேற்கோளாக அதாவது பிரமாண வாக்கியங்களாக (Authority)க் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வித நாடிகள் "சுக்கிர நாடி, கேரள நாடி, துருவ நாடி, சத்திய சம்ஹித நாடி, யோக நாடி" என பெயரிட்டு வழங்கி வருகின்றன. இந்த நாடிகள்கூட பொது ஜனங்களுக்கு அகப்படாமல் சிலரிடத்திலிருப்பதாலும், இவைகள் சமஸ்கிருத பாஷையில் இருப்பதாலும் அனேகருக்குப் பயன்படாமல் இருக்கின்றன. இந்த நாடிகளில் விவரித்திருக்கும் பலாபலன்களுக்கு ஆதாரமாகச் சில மகரிஷிகளையும் பூர்வீக கிரந்த கர்த்தர்களையும் கிரந்தங்களையும் இந்த நாடிகளில் குறித்திருக்கின்றது. இப்படிக்குறிக்கப்பட்ட மகரிஷிகளும் கிரந்தகர்த்தர்களும் விருத்த வசிஷ்டர், பராசர், நாரதர், காசிபர். ஜெயமுனி, கர்கர், பிருகு, சத்தியாச்சாரி, மனு, விஷ்ணு, ஈசுவரர், யவனர், மயன் முதலானவர்களாவர். இப்படிக் குறிக்கப்பட்ட கிரந்தங்கள் சூரிய நாடி, சந்திர நாடி, குஜ நாடி, புத நாடி, குரு நாடி. சனி நாடி, சாம்பசிவ நாடி, கார்கிய நாடி, ஜம்புநாதீயம், கர்மயோக பலாத்யாயம், லக்கிஞதிபதி நாடி, பாவநாடிகள், காலார்ணவம், தேவ கேரளம் என்ற சந்திரகலா நாடி, சுகர் வாக்கியம் என்ற சுகர் நாடி, பிருஹத் பராசர ஹோரை, நாரதீயம், பார்க்கவ நாடி, யோக நாடி, லக்ஷ்மி நரசிம்ம சம்வாதம் முதலியவைகளாகும், ஆகையால் மேற்சொல்லிய நாடிகளில் ஆதாரமாகக் கொடுக்கப்பட்டுள்ள விதிகள் மேற்

சொல்லிய மகரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டும் கிரந்தகர்த்தர்களால் தங்கள் காலங்களில் தங்களுக்கிடைத்தமட்டும் திரட்டப்பட்டும் உபயோகப்படுத்தப்பட்டும் வந்துள்ள விதிகளாகும். இவ்வித விதிகள் ஏழாம் பாவம். இரண்டாம் பாவம் ரீதியாயும், சில விடங்களில் கூடியமட்டும் லக்கின வாரியாகவும் ஒன்ருய்த் திரட்டிச் சேர்க்கப்பட்டு இப்புத்தகத்தில் என்னுல் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு லக்கினத்திற்கும் அதைச் சார்ந்த விதிகளின் அயிட்டங்களின் நெம்பரையும் சுலபமாய்ப் பார்க்க விஷய அட்டவணையில் கொடுத்திருக்கின்றேன்.

(3) நாடி அம்சங்களைக் கணிக்கும் விதம் எனது "ஜாதக கணிதம் இரண்டாம் பாகமாகிய ஜாதக பலாபலன்கள் நிர்ணயம்" என்ற புத்தகத்தில் ஏழாவது அத்தியாயத்தில் கொடுக்கபட்டிருக்கின்றது. அதையும் வாசிக்கவும். நாடிக்கிரந்தங்களில், லக்கினம் கிரகங்கள் இவைகள் இருக்கும் நாடி அம்சங்களைக்கொண்டு பலாபலன்களைத் துல்லிபமாகச் சொல்லி யிருக்கின்ருர்கள். நாடி அம்சங்களின் உதவியால் பெரும்பாலும் ஜாதகன் பிறந்த இடத்தின் நகரச்சிறப்பு, ஜாதகனுடைய குலத்தின் ஜாதி, ஜாதகன் இத்தனையாவது பிறவி என்பது, ஜாதகனுடைய சகோதர சகோதரியின் சங்கியை முதலிய துல்லிபமான அம்சங்கள் நாடிக் கிரந்தங்களில் சொல்லப் பட்டிருக்கின்றன. நாம் பரிசீலனை செய்யும் ஜாதகத்தின் நாடி அம்சமும் விதிகளில் கொடுக்கப்பட்டுள்ள நாடி அம்சமும் சரிபட்டுவந்தால் ஸ்தூல பலன்களும் (broad details) அதிக விபரமான (minute details) பலன்களும் நாடிக் கிரந்தங்களில் உபயோகப்படுத்தப்பட்டு விதிகளில் சொல்லிபபடி துல்லிபமாயிருக்கும். அப்படி நாடி அம்சம் சரிப்படாவிட்டால் நாடிஅம்சத்தில் ஏற்படும் வித்தியாசத்திற்குத் தகுந்தபடி துல்லிபமான பலாபலன்கள் கொஞ்சம் மாறுதலடையும். ஆயினும் கிரகயோகங்கள்சரியாக அமையப்பட்டு நாடிஅம்சங்கள் மாத்திரம் வித்தியாசப்பட்டால் ஸ்தூல பலாபலன்கள் (i.e. broad details) கூடியமட்டும் சரியாயிருக்கும் என்ற காரணத்தைக்கொண்டே நாடிக் கிரந்தங்களில் உபயோகப்படுத்தப்பட்ட மேற்கோள்களாகிய மூலக்கிரந்தங்களின் விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதிகளில் சொல்லிய கிரகநிலை, கிரகதிருஷ்டி, கிரக சம்மந்தம் முதலியவைகள் பிரகாரமே நாம் பரிசீலனை செய்யும் ஜாதகத்தில்

அமைந்தால் இவ்விதிகளில் சொல்லிய பலாபலன்கள் சரிபட்டு வரும், அப்படிக்கன்றி விதிகளில் சொல்லியதற்கு அதிகமாகக் கிரக சம்பந்தமாகிலும் அல்லது கிரக பார்வையாகிலும் இருந்தால் இந்த அதிக கிரக சம்பந்தத்தாலும் அல்லது அதிக கிரக பார்வையாலும் பலாபலன்களில் உண்டாகும்பேதங்களையும் ஆலோசித்துப் நிர்ணயித்துச் சரிப்படுத்தி, ஒழுங்குபடுத்திப் பலாபலன்களைச் சாமர்த்தியமாயும் திறமையாயும் யூகித்துச் சொல்லவேண்டும். நாம் பரிசீலனை செய்யும் ஜாதகத்திலுள்ள கிரக அமைப்புகள் பல விதிகளில் பொருந்தி சரிபட்டு வருமாகில் அதாவது கிரக அமைப்புகள் ஒரு விதியிலும், இன்னஞ் சிலகிரக அமைப்பு இன்னொரு விதியிலும், இன்னஞ் சிலகிரக அமைப்பு இன்னொரு விதியிலும் பொருந்திச்சரிபட்டு வருமாகில் இந்த மூன்று வித விதிகளில் சொல்லியுள்ள பலாபலன்களை ஒரு காகிதத்தில் குறித்துக்கொண்டு இப்பலாபலன்களை ஒன்றுதட்டி ஒழுங்குபடுத்தி நிகர பலாபலன்களை யூகித்துச் சொல்லத் துணியவேண்டும். இதுதான் ஜோதிடர்களுடைய திறமையாகும்; இதுதான் அவர்களுடைய பெயரைப் பிரகாசப்படுத்தி அவர்களுக்கும் ஜோதிட சாஸ்திரத்திற்கும் புகழையும் கீர்த்தியையும் நல்ல பெயரையும் உண்டாக்கும்.

(4) இப்புத்தகத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள விஷயங்கள் பல கிரந்தங்களில் இருந்து சேகரிக்கப்பட்டு இருக்கின்றன. இக் கிரந்தங்கள் மிகவும் அருமையானதால் இவைகள் எனக்குக் கிடைப்பதற்காகச் சில கனவான்களுடைய சகாயத்தையும், சில ஜோதிடர்களுடைய சகாயத்தையும நான் கோரலாயிற்று. அவர்களில் எனக்கு முக்கியமாகவும், விசேஷமாகவும் கிரந்தங்கள் கிடைக்கும்படியாய் மிக்க அன்புடன் சகாயம் செய்தவர்கள் முறையே (1) கனம் பிரம்மஸ்ரீ R கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் **B.A.** B.L., ரிட்டயர்ட்டு அட்வகேட், மதறாஸ். (2) கனம் பிரம்மஸ்ரீ டாக்டர். C. ஸ்ரீனிவாசமூர்த்தி அவர்கள் B.A.B.L.,M.B. &C.M., Vaidya Ratna, ஆனரெரி டைரெக்டர், அடையார் தியஸாபிகல் லைப்ரரி. (3) கனம் வித்தியாசாகர வித்தியாவாஸஸ்பதி பிரம்மஸ்ரீ P. P. சுப்பிரமண்ய சாஸ்திரியார் அவர்கள் B.A.(Oxon)M.B.Madras, சான்ஸ்கிரிட் புரொப்பெஸர், பிரசிடென்சி காலேஜ், கூரேடர், ஓரியண்டல் லைப்ரரி, சென்னை. எனக்குப் புத்தகங்கள் கிடைக்கும்

படியாய் உதவி செய்ததற்காக இவர்களுக்கும்,மேற்சொல்லிய மற்றவர்கட்கும் நான் என்னுடைய அன்பார்ந்த வந்தனத்தை மிகவும் வணக்கத்துடன் அளிக்கின்றேன். இந்தப் புத்தகத்திற்குத் தேவையான விஷயங்கள் அடங்கிய புத்தகங்களைச் சேகரிப்பதிலும்,எழுத்துப் பிரதி (காப்பி) எடுப்பதிலும், என் திரவியசகாயம் பெற்றுக்கொண்டு எனக்கு உதவிபுரிந்தவர்களில் சிலருக்கும் என்னுடைய வந்தனத்தை அளிக்கின்றேன். அடையார் தியாசாபிக்கல் லைப்ரரி ஸ்டாப் (Staff) உத்தியோகஸ்தர்களுக்கும், ஓரியண்டல் லைப்ரரி ஸ்டாப் (Staff) உத்தியோகஸ்தர்களுக்கும், ஷை லைப்ரரிகளிலுள்ள புத்தகங்களை உபயோகஞ் செய்யும் விஷயத்தில் அவர்களுடைய அன்பிற்காக என்னுடைய வந்தனத்தை அளிக்கின்றேன்.

(5) எழுத்துப்பிழை, சொற்பிழை முதலியவைகளிருந்தால் அவைகளை மன்னித்து இந்தப் புத்தகத்திலுள்ள சாராம்சத்தை ஏற்றுக்கொண்டு இந்தப் புத்தகத்தை ஆமோதிக்கும்படியாய் இதை வாசிக்கும்பெரியோர்களையும் சிறியோர்களையும் மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக்கொள்கின்றேன். இப்புத்தகத்தைப் பலர் படித்துப் பலாபலன்களைச் சொல்ல ஆரம்பிப்பதற்கு முந்தி இப்புத்தகத்தில் கொடுத்துள்ள "பிழை திருத்தம்" என்பவைகளில் உள்ள பிழைகளை முக்கியமாய்த் திருத்திக்கொள்ள வேணுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். மேலும் இப்புத்தகத்தை இன்னம் விருத்தி செய்வதற்காக யாராகிலும் தெரியப்படுத்தும் அபிப்பிராயங்களை மிகுந்த வணக்கத்துடன் அங்கீகாரஞ் செய்வதுடன் அவ்வபிப்பிராயங்களுக் கிணங்க விருத்திகளை அடுத்தப் பதிப்பில் செய்யச் சித்தமா யிருக்கின்றேன்.

(6) சிலர் என் பெயரைச் சொல்லி அதனால் பிரகாசிக்க வேணும் என்று கெட்ட எண்ணங்கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் எனக்குத் தெரியாமல் தாங்கள் சி. ஜி. ராஜன் அவர்களிடம் ஜோதிடத்தில் பழகினவர்கள் என்று தெரிவித்துக்கொண்டால் அதை நம்பவேண்டாம். மேலும் அச்சிட்டு வெளியாகி வந்துவிட்ட சி. ஜி. ராஜனுடைய ஜோதிட புத்தகங்கள் விஷயமாக அவைகள் இப்போது செலவாகிவிட்டன, கிடைக்காது என்று தெரிவித்தாலும் அதையும் நம்பவேண்டாம், அவைகள் எப்போதும் கீழ்க்கண்ட விலாசத்தில் தவக்கமின்றி கிடைக்கும் என்பதையும் தெரிந்துகொள்ளும்படி இதனால் கோரப்படுகின்றது.

நெ. 31, ஆயலூர் முத்தைய்யாமுதலி தெரு,
கிருஷ்ணப்ப நாய்க்கன் குளம் அருகில்,
சௌகார்பேட்டை போஸ்ட், சென்னை.
C. G. ராஜன் B.A.

விஷய அட்டவணை

விஷயங்கள்	பக்கம்.
(1) 1-வது அத்தியாயம் களத்திரபாவம் என்ற ஏழாவது பாவத்தின் பொது விஷயமும், செவ்வாய் தோஷமும்	1
(2) ஏழாம் பாவத்திலிருக்கின்ற கிரக பலன் முதலிய	....
(3) இரண்டாவது பாவம் இரண்டாம் பாவாதிபதி இவைகளை அநுசரித்த பலன் முதலிய	....
(4) உபபதம் என்ற உபபத லக்கினம் ஏழாம் ஆரூட லக்கினம் இவைகளை அநுசரித்த பலன் முதலிய	....
(5) மேஷம் முதல் மீனம் வரையிலும் ஜென்ம லக்கினமானுல் களத்திர பலன்களை விவரமாகத் தெரிவித்தல்	

குறிப்பு:—மு என்பது "முதல்" எனவும் "வ" என்பது வரைக்கும் எனவும் தெரிவிக்கும்.

(1) மேஷ லக்கினம்:—அயிட்டம் நெ. 334, 350 மு 361 வ, 377, 386, 387, 390, 420, 528, 555.

(2) ரிஷப லக்கினம்:—அயிட்டம் நெ. 341, 390, 402, 423, 425 மு 434 வ. 569, 570.

(3) மிதுன லக்கினம்:—அயிட்டம் நெ. 305, 309, 325 மு 328, 378. 390, 407, 415, 416, 421, 435 மு 447 வ, 562.

(4) கடக லக்கினம்:—அயிட்டம் நெ, 382, 383, 272, 282, 292, 310, 323, 380 மு 383 வ, 410, 411, 448 மு 451 வ, 527, 534, 546, 557, 559 மு 561.

(5) சிம்ம லக்கினம்:—அயிட்டம் நெ. 267, 323, 342,343, 368, 379, 389, 393, 304, 408, 452 மு 461 வ, 523, 529, 536, 547, 553, 568.

(6) கன்னியா லக்கினம்:—அயிட்டம் நெ. 100, 333, 337, 344, 390, 401, 412. 417, 462 மு 470, 533, 537, 538, 548, 551, 554, 566, 567.

(7) துலா லக்கினம் :—அயிட்டம் நெ. 289, 293, 294, 390, 470-a மு 487, 524, 532, 539, 558.

(8) விருச்சிக லக்கினம் :—அயிட்டம் நெ, 306, 388, 390, 399, 409, 411-a, 422, 424, 488 மு 495 வ, 540.

(9) தனுசு லக்கினம்:— அயிட்டம் நெ. 276, 277, 280, 290, 386, 390, 405, 418, 419, 496 மு 506, 544, 549, 563, 565.

(10) மகர லக்கினம் :—அயிட்டம் நெ. 273, 274, 283, 331, 339, 346, 347 ,390, 400, 403, 413, 507 மு 510 வ, 531, 535, 543, 552 ,

(11) கும்ப லக்கினம் :—அயிட்டம் நெ. 291, 332, 369, 376, 384, 390, 392, 396, 398, 411, 511 மு 513 வ, 542; 545, 565.

(12) மீன லக்கினம் :—அயிட்டம் நெ. 285 மு 288 வ், 336 338, 390, 395, 397, 514.

கடவுள் துணே.

ஜாதக ராஜ "பாவ இருவாக்ஷி"

என்னும்

ஆயுள், ஜீவன, களத்திர பாவங்கள்

மலர் 1.

(பாகம் நெ. 2—களத்திர பாவம் என்ற ஏழாம் பாவம்)

—:(✿):—

I-வது அத்தியாயம்

(1) உலகில் முக்கியமாய் மானிட ஜென்ம விருத்திக்காகக் கடவுள் ஸ்திரீகளைப் படைத்திருக்கின்ருர். மேலும் (குடும்பங்களில்) ஒவ்வொருவருடைய குடும்ப விஷயத்தை நன்ருய் நடத்தி இல்லற தர்மத்தைக் குறைவில்லாமல் அநுசரித்துக் கடவுளை வழிப்பட்டுப் பரமாத்மாவாகிய கடவுளுடன் போய்சேருவதற்காகவும் ஸ்தீரீகள் மிகவும் அவசியமானவர்கள் ஆகும். அப்படிப்பட்ட ஸ்திரீகளின் விஷயமாகச் சிலவற்றை ஜாதகம் என்ற ஒரு முகாந்தரமான கருவியினுல் விளக்கிச் சொல்லுவோம்.

(2) ஒவ்வொரு குடும்பத்தையும் நடத்துவதில் வீட்டிற்குடைய ஸ்திரீ "கிரக லக்ஷ்மி" எனப்படும். மனிதர்களுக்கு பாலிய விவாகமும், பின்னும் சிலருக்கு யுக்த காலத்தில் விவாகமும், இன்னஞ் சிலருக்குக் காலங்கடந்து விவாகமும், இன்னஞ் சிலருக்கு விவாகமில்லாமல் அபிமான ஸ்தீரீயை வைத்துக் கொண்டிருத்தலும், இன்னஞ் சிலர் விவாகம் செய்துகொண்டு சதிபதிகள் பிறகு ஒற்றுமையாய் வாழாதிருப்பதும், இன்னஞ் சிலர் வெகு ஒற்றுமையுடனிருப்பதும், பின்னுஞ் சிலர் பல விவாகமடைவதும், வேறு சிலர் விவாகமேயின்றிப் பிரம்மசாரிகளாயிருப்பதும், பின்னுஞ் சிலர் விவாகம்செய்த மனைவி யிருந்தும் அன்னிய ஸ்திரீ சேர்க்கையுட னிருத்தலும், வேறு சிலர் பல ஸ்திரீ சேர்க்கை செய்து கொள்வதும், சிலர் மனைவி யிருந்தும் மனைவி யிறந்தும் வேறு ஒன்று, இரண்டு, மூன்று முதலாக ஏழு

பேர் வரையிலும் அதற்கு அதிகமாகவும் விவாகம் செய்துகொள்ளுதலும், செய்து கொண்டு சஞ்சலப்படுவதும், சுகமாக வாழ்வதும், விதவைகளும் மறுமணம் செய்துகொள்வதும், விதவைகளை மணப்பதும், பின்னும் சிலர் மனைவி யிறந்தபின் விவாகமின்றி யிருப்பதும் இவ்விதமாகப் பலவிதமாக யிருப்பதை நாம் நம் அனுபவத்தில் காண்கின்றோம். ஆதலால் இவற்றிற்குரிய காரணங்களாகிய கிரக வரிசைகள் முதலியவைகளும், அதனதன் காலங்களும் லக்கின வாரியாகவும், கிரகங்கள் மூலமாகவும் பல நாடிக் கிரந்தங்கள், பல ஜோதிடக் கிரந்தங்கள் ஆகிய இவைகளின் ஆராய்ச்சியால் இனி சொல்லப்படும்.

ஒரு மனிதனுக்கு விவாகமாகும் காலமும், தாரம் அல்லது தாரங்கள் நேரிடுவதும், தாரத்தின் மரணமும், மறுமணமுண்டானால் அதன் காரணமும் காலமும், தாரங்களின் எண்ணிக்கையும் விபரமாக சொல்லப்படுவதால் அதன்படி நடந்துகொள்வது உசிதமாகும். மேலும் ஜாதகங்களில் உலகில், அங்காரகத் தோஷமென்பது கிடையாதென்று சிலர் கொள்கை, இது உண்டென்பது பலர் கொள்கை. இது உண்டென்பது உண்மை தானா, அதனாலேயே பல தாரங்கள் உண்டாவது என்பது சரிதானா, அப்படியாயின் மேற்படி தோஷமாகிய அங்காரக தோஷம் என்பது மட்டும் தார நாசத்தைச் செய்வதற்கோ, அல்லது செய்யாமல் நிறுத்துவதற்கோ சக்தி உள்ளதா, சக்தியற்றதா என்பதையும் அதன் ஸ்திதிதான் என்ன என்பதையும் யறியாமல் பலன் சொல்வதும் தவறு. அதனால் நேரிடுவது என்னதான் என்பதையும் மற்றவைகளையும் சந்தேகமற தெளிவாக்குவது நமது கடமையாகும். ஆதலால் நாம் அதைப்பற்றி முதலில் சில சந்தேகங்களை நிவர்த்தி செய்துவிட்டுப் பிறகு ஸப்தம பாவத்தில் தார விஷயத்தை மட்டும் விஸ்தரிப்போம்.

இந்தச் சப்தம பாவ பலன் விஷயத்தை ஜோதிடர்கள் ஜாதகங்கள் கணித்துக்கொண்டு பலன் கேழ்ப்பவர்கள் விஷயமாகப் பலன் சொல்லவும். அல்லது ஒவ்வொருவரும் தாம் தாமே தங்கள் ஜாதகங்களை வைத்துக்கொண்டுத் தாமே பிறருடைய உதவியின்றி இப் புத்தகத்தினுதவியால் நன்கு தெரிந்து கொள்ளுவதற்காக இப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

(3) ஜென்ம லக்கினம் என்பது ஜெனகாலத்தில் உதய லக்கினம் ஆகும். அதுவே ஓராவது ஸ்தானம் ஓராமிடம் அல்லது ஓராம்பாவம் என்று சொல்லப்படும். இவ்வித லக்கினத்தைக்கொண்டே பலனறிய வேண்டும் என்றும், இன்னம் சில க்கிரந்தங்களில் ஜென்ம லக்கினத்திற்குப் பார்ப்பதுபோலவே சந்திரன், சுக்கிரன் இந்த இரண்டு கிரகங்களையும் ஆதியாகக்கொண்டும் பலன் ஜென்ம லக்கினத்திற்கு அறிவதுபோல அறிய வேண்டுமென்றும் சொல்லப்பட் டிருக்கிறது, ஆதலால் இவற்றை யெல்லாம் ஒழுங்காக நமக்கு இதுவரையிலும் விஷயங்கள் கிடைத்த வரையில் ஒன்றுகத்திரட்டி இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. ஜாதக விஷயங்களில் வெகுவாக ஒவ்வொரு பாவங்களையும் நன்றாய் ஆராய்ந்தும், யோசித்தும், நல்ல தீர்மான சக்தியுடனும் பலன்களைச் சொல்லவேண்டியதா யிருப்பவைகளில், மிக்க சிரமமாகவுள்ளவை (1) ஆயுள் என்ற எட்டாம் பாவம், (2) தொழில், என்ற ஜீவனம் என்ற பத்தாம் பாவம், (3) களத்திரம் என்ற ஏழாம் பாவம், (4) சந்ததி என்ற ஐந்தாம் பாவம், (5) சகோதரம் என்ற மூன்றும் பாவம் ஆகிய இவ்வைந்து பாவங்களும் மிக்கச் சிரமப்படுவதற்குரிய பாவங்களாகும், இவ்வைந்தையும் வெகு எளிதாக எந்த ஒரே கிரந்தத்திலும் அறிய முடியவில்லை. வீஷயங்களைத் தாமே தெரிந்துகொள்ள விருப்பமுள்ள ஆண், பெண், இருபாலரும் தாங்களாகவே தெரிந்து கொள்ளக்கூடிய அவ்வளவு சுலப வழியாக இந்தப் புத்தகத்தை எழுதி இருக்கிறது, ஏனெனில், இந்த சப்தம பாவமானது வெகு தூரம் ஆலோசனை செய்ய இடந்தருகிறது. ஒரு ஸ்திரீயின் அல்லது ஒரு புருஷனின் சதிபதிகளின் வெகு கால குடும்ப வாழ்கையைச் சந்தோஷத்துடன் வாழச் செய்யவோ அல்லது மீளாத்துயரத்தில் ஆழ்த்தவோ இது சக்தியுள்ளதாகும். அப்படிப்பட்ட இந்த சப்தம பாவத்தைச் சிரமம் பாராமல் விசாரிப்பது நன்மையைத் தரும்.

மேலும் இந்த ஏழாவது மாவமானது மாகஸ்தானம் என்றும் மருமகன் ஸ்தானமென்றும் இன்னம் சில பெயராலும் மகரிஷிகளால் குறிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்த சப்த்தம பாவத்தினுல் ஸ்திரீ, புருஷர்களின் (சதிபதிகளின்) ஒற்றுமை அல்லது பிரிவு, யாத்திரை, விவாகதடங்கல் பத்தினியின் ரோகம் ஆகிய இவைகளை அறியலாம்.

செவ்வாய் தோஷம்.

(4) மேற்சொல்லிய "அங்காரக" தோஷம் அல்லது "செவ்வாய் தோஷம்" என்பது என்னவெனில் ஜென்ம காலத்தில் ஆண் பெண் ஆகிய இரு பாலர்களுடைய ஜாதகங்களில் ஒன்றில் (1), இரண்டு (2), நான்கு (4), ஏழு (7), எட்டு (8), பன்னிரண்டு (12) ஆகிய ஸ்தானங்களில் செவ்வாயிருந்தால் அது தோஷமென்றும் அதனால் புருஷன் அல்லது பத்தினி மரண மேற்படும் என்றும் ஆதலால் அப்படியுள்ள தோஷமான இரண்டு ஜாதகங்களுக்குரிய சதிபதிகளையே ஒன்றாக விவாகத்தினால் சேர்க்கவேண்டும் என்றும் பலர் பலவிதமாக அபிப்ராயப்படுகிறது அனுபவ பூர்வமாயுள்ளது. அப்படிப்பட்ட தோஷமென்பது உண்மையுடனிருந்தால் அந்தந்த தோஷங்களுக்கு ஸ்தான தோஷம் உண்டா, உண்டானால் எந்த ஸ்தானத்தில் எந்த ஜாதகத்தில் இருக்கலாம், எந்த ஸ்தானத்தில் இருக்கக்கூடாது, எங்கிருந்தால் எந்த ஜாதகத்தில் இருக்கலாம் எந்த ஸ்தானத்தில் இருக்கக்கூடாது, எங்கிருந்தால் எந்த ஜாதகத்திற்குப் பொருந்தும் எங்கெங்கிருந்தால் எந்த எந்த ஜாதகங்களுக்குப் பொருந்தாது, அப்படிப் பொருந்துமானால் ஸ்திரீ ஜாதகத்தில் தோஷமென்று சொல்லப்படும் ஸ்தானத்தில் புருஷ ஜாதகத்தில் மேற்படி கிரகம் இருந்தால் அது தோஷமாகுமா, அல்லது தோஷமாகாதா, ஸ்திரீ ஜாதகத்தில் தோஷமிருக்கும் ஸ்தானத்தில் புருஷனுடைய ஜாதகத்தில் இல்லாதிருந்து புருஷனுடைய ஜாதகத்தில் தோஷ மிருந்து அது மேற்சொல்லப்பட்ட ஸ்தானங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாசமான ஸ்தானங்களில் இருந்தால் பொருந்துமா, அப்படியானால் ஸ்திரி ஜாதகத்தில் எந்த இடத்தில் இருந்தால் புருஷ ஜாதகத்தில் எந்த இடத்தில் இருக்கவேண்டும், எப்படி இருந்தால் அவை பொருந்தும் எப்படி யிருந்தால் பொருந்தாது அப்படிப் பொருந்தாவிட்டால் அதனால் நேரிடக்கூடியது கேவலம் தாரநாசம், புருஷநாசம் இவைகள் மட்டும்தானா, இன்னம் ஏதாவது அதிக தோஷங்கள் அல்லது பலன்கள் உண்டா, அல்லது மேற்சொல்லப்பட்ட ஸ்தானங்கள் எல்லாவற்றிற்கும் ஒரேமாதிரி பலன்தானா, அல்லது ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் வெவ்வேறு பலன் உண்டா. அப்படி உண்டானால் எந்த எந்த ஸ்தானத்திற்கு என்ன, என்ன பலன் நேரிடும், அப்படி நேரிடுவது எப்போது, அது அவசியம் நடந்தே தீருமா, ஜாதகத்தில் தோஷம் மட்டும் இருந்து அனுபவ உண்மையில்

தோஷம் செய்யாமல் நின்றுவிடுமா என்ற இவைகளை எல்லாம் ஆலோசிக்காமல் பலன் சொல்வது பிசகாகும், ஆதலால் பெரும் பாலும் பல ஜோதிடக் கிரந்தங்களையும் ஆராய்ந்தும், அனுபவத்தையும் கூட அனுசரித்துக்கொண்டே பலனை நிர்ணயித்துச் சொல்லவேண்டும். ஆதலால் அக்கிரந்தங்களை நன்றாய்க் கற்றுணர்ந்தவர்கள் தவிர மற்றவர்கள் கூட சுலபமாயறிய இந்தப் புத்தகம் மிகவும் உபயோகப்படும்.

(5) செவ்வாய் (1) மேஷ விருச்சிகங்களுக்கு நாலிலும், விருஷபம், துலாம் இவைகளுக்கு எட்டிலும், கன்னி, மிதுனமிவைகளுக்குப் பன்னிரண்டிலும், தனுசு, மீனங்களுக்கு இரண்டிலும், மகர, கும்பங்களுக்கு ஏழிலும், கடக, சிம்மங்களுக்கு எல்லா ராசியிலும், இருந்தாலும் தோஷமில்லை யென்று ஒரு கிரந்தத்திலும், (2) ஸ்திரீ ஜாதகத்தில் ஜெனன காலத்தில் இரண்டு, ஏழில் இருந்தாலும், புருஷ ஜாதகத்தில் 4-8-ல் இருந்தாலும் அது ஒரு தோஷமாகாது என்று வேறு கிரந்தத்திலும், (3) ஜெனன காலத்தில் ஒரு ஜாதகத்தில் பன்னிரண்டாமிடத்தில் செவ்வாயிருந்து சுய தோஷத்துடன் கூடியிருந்தாலும், இருவர் ஜாதகங்களிலும் பன்னிரண்டில் இருந்தால் தோஷமாகாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது, (4) வேறொரு கிரந்தத்தில் செவ்வாய் எட்டில் இருந்தால் அது விவாகத்தடை யென்றும், தோஷமாகாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறாக பலவிதமாக உள்ள அபிப்பிராய பேதங்களை ஆராய்ந்து பார்த்தால் உண்மையில் இந்தச் செவ்வாய் தோஷம் என்ற ஒரு அம்சத்தைக் கொண்டே செவ்வாய் தோஷமிருக்கிறதென்றும் அதனால் சதிபதிகளுக்கு பிரமாதமான ஆபத்து உண்டாகும் என்று சொல்லுவது உசிதமாகாதென்றும் சொல்லுகிறார்கள். தாரம் பல ஏற்படக் கூடிய காரணங்கள் பல உள. அவைகள் பலவித தோஷங்கள் ஆகும். கிரகங்களாலும் லக்கினம், ஸ்தானம், ஆதிபத்தியம், கிரக குணதிகள் ஆகிய இவைகளால் களத்திர தோஷம் அறிய வேண்டும். செவ்வாய் எந்த ஆண் ஜாதகத்தில் இரண்டில் இருந்தால் ஜாதகன் களத்திர ஹீனனாவான் என்றும், அதாவது தன் மரணத்திற்கு முன்னதாக களத்திர மரணம் நேரிடுமென்றும், நான்கில் இருக்தால தனக்கே மரணம் நேரிடச்கூடுமென்றும் (இதை பாலாரிஷ்ட விஷயத்திலும் காணலாம்) ஏழில் இருந்தால் சகல பயமும், எட்டில் இருந்தால் புத்திர நாசமுண்டாகு மென்றும், சொல்லப்படுவதாலும் கெடுதியை உண்டுபண்ணக்கூடிய பல

அம்சங்களில் அங்காரக தோஷமும் ஒரு அம்சமாகுமே ஒழிய எப்போதும் எல்லாம்வல்ல பிரமாதமான தோஷமாகா தென்றும், அது இதர தோஷங்களுடன் சேர்ந்து தன் தன் வீசுரத்தைக் காட்டும் என்றும் தோற்றுகிறது. சிலக்கிரந்தங்களில் செவ்வாய் தோஷம் சொல்லிப் பரிகாரம் கூடச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் ஷெ தோஷம் எப்போதும் எல்லா ஜாதகத்திலும் பிரமாதமானது என்று சாதனை செய்வது ஆக்ஷேபிக்கக் கூடியதேயாகும் என்று பெரும்பாலும் தோற்றுகிறது. இதனுல் நின்று விடுவதில்லை, ஆதலால் அப்படிப்பட்ட தோஷமானது ஏற்கத்தக்கதல்லவென்றும் அவற்றிற்கெல்லாம் மற்ற இதர தோஷங்களே காரணமாகுமென்றும் அறிய வேண்டும். செவ்வாய் தோஷ விஷயமாக 22, 23, 24-வது அயிட்டங்களையும் மற்ற அயிட்டங்களையும் வாசிக்கவும், 38, 39, 40-வரையுள்ள அயிட்டங்களையும் படிக்கவும்.

(6) இனி இதர விஷயங்களைப்பற்றி சொல்வோம். ஜாதகங்களில் (1) களத்திர ஸ்தானுதிபதியாகிய சப்தமாதிபதி, (2) களத்திரக் காரகனுகிய சுக்கிரன், (3) குடும்பாதிபதியாகிய இரண்டாம் பாவாதிபதி இவர்களையும், (4) புத்திர ஸ்தானுதிபதியாகிய ஐந்தாம் பாவாதிபதி (5) லக்கினுதிபதி ஆகிய இவர்களையும், (6) சந்திரனையும் கொண்டே களத்திர விஷயம் அறிய வேண்டியது, இவர்களில் ஜென்ம லக்கினத்திற்கும், சந்திர லக்கினத்திற்கும் களத்திர ஸ்தானுதிபதி, சுக்கிரன், குடும்பாதிபதி ஆகிய இம்மூவர்களே பிரதானமாகக் கொள்ளக்கூடியவர்கள் ஆகும்.

(7) ஒவ்வொரு ஜாதகத்திலும் ஜென்ம லக்கினத்திற்கும் சந்திரா லக்கினத்திற்கும் சப்தமாதிபதி, குடும்பாதிபதி, சுக்கிரன் இவர்கள் சுப க்ஷேத்திரம், சுய க்ஷேத்திரம், உச்சம், உச்சாம்சம், சுப சம்பந்தம், சுப திருஷ்டி, ஆகிய இவற்றையடைந்து சுபரின் பார்வை யடையாதிருப்பின் சுப பலனுண்டாகும், தார சுகமுண்டாகும், இவ்விதமில்லாமல் இவர்கள் பாபக்ஷேத்திரம், பாப சம்பநதம், நீச்சக்கிரக சம்பந்தம், நீச்சம், மூடமென்ற அஸ்தமனம், நீச்சாம்சம், சத்துரு க்ஷேத்திரம், சத்துரு சம்பந்தம் துஸ்தானம் என்ற ஆறு, எட்டு, பன்னிரண்டா மிடங்கள் ஆகிய இவைகளை அடைந்திருந்தால் தார சுகமின்மையும், தார நாசமும், தாரத்துவேஷமும், தார மாரகமும் நடந்து விடும். அல்லது

இக்கிரகங்கள் சதிபதிகளின் ஒற்றுமையைக் குலைத்தோ அல்லது சதிபதிகளைப் பிரித்தோ அல்லது வேறு எவ்விதத்திலாவது கெடுதல்களையே செய்யும், ஆதலால் இவர்களை நன்றாய் ஆலோசிக்க வேண்டும்.

(8) சுக்கிரன் சுய க்ஷேத்திர, மூலத் திரிகோணத்தில் 7-ல் அல்லது 8-11-ல் இருந்தாலும்; 5, 9-ல் இருந்தாலும் சுய க்ஷேத்திர சுய நவாம்சத்திலும் அதிமித்திராம்சத்திலும் அல்லது சுய க்ஷேத்திர கேந்திரத்தில் இருந்தாலும் நற் களத்திரமுண்டாகும்.

(9) சுக்கிரன் 7-ல் சர ராசியிலல்லது சர நவாம்சையில் இருந்தாலும் சுபருடன் கூடிச் சுபாம்சத்தி லிருந்தாலும் இரண்டு தார மேற்படும்.

(10) கடகத்தில் சுக்கிரனிருந்து ஏழில் சந்திரனிருந்தாலும் அல்லது 7-லுள்ள சந்திரனுடன் கூடி சுக்கிரனிருந்தாலும் இரு தரமுண்டாகும்.

(11) ஏழில் சுக்கிரனிருந்து இவர் சூரியன் புதனிவர்களுடன் கூடி யிருந்தாலும் மூடத்தில் பாப வர்க்கத்தில் மேற்படிச் சுக்கிரனிருந்தாலும் பர ஸ்திரீ சங்கமம் நேரிடும்.

(11) (a) ஏழில் சுக்கிரனிருந்து நீச்ச, மூடக் கிரகங்களுடன் கூடியிருந்தாலும், பாபக் கிரகங்களுடன் கூடியல்லது பார்க்கப் பட்டிருந்தாலும் நீச்ச ஸ்திரீ சேர்க்கை யுண்டாகும்.

(12) ஆறுக்குடையவன் சுக்கிரனுடன் கூடி மூடத்தில் கேந்திரத்தில் இருந்தாலும் அல்லது சனியுடன் கூடியிருந்தாலும் மத்திய ஸ்திரீ சங்கமம் நேரிடும்.

(13) சனியன் அம்சத்தில் சுக்கிரனும், சுக்கிரனுடைய அம்சத்தில் சனியும் இருந்தாலும், செவ்வாயின் க்ஷேத்திரத்தில் சுக்கிரன் இருந்தாலும், பக சும்பனம் செய்வார்.

(14) ஏழில் சுக்கிரனிருந்து சுபக்கிரகத்தின் பார்வையடைந்து பாபாம்சத்தில் மேற்படி சுக்கிரன் இருந்தாலும் பாபர் மத்தியில் இருந்தாலும் மூட ஸ்திரீ சேர்க்கை நேரிடும்.

(15) இரண்டாமாதிபதி சுக்கிரன் இவர்கள் ராகு சனியுடன் கூடி யிருந்தாலும் அல்லது மூட ராசியிலிருந்தாலும் ஜாதகர் பக சும்பனம் செய்வார்.

(16) இரண்டாம்மாதிபதியும் சப்தமாதியும் சேர்ந்து கேந்திரத்தில் ரவி புதனிவர்களுடன் கூடி குரு பார்வையுமடையாதிருப்பின் ஜாதகர் வர்ண ஹீனமாகப் பதி ஹீனமாகச் சம்போகம் செய்வார்.

(17) சுக்கிரன் 7-ல் இருந்து சுபரால் பார்க்கப்பட்டுச் சுபாம்சத்திலிருந்தாலும் சுபர் மத்தியிலிருந்தாலும் ஜாதகருக்கு நல்ல மனைவி வாய்ப்பாள்.

(18) ஏழாமாதி கேந்திரங்களிலிருந்து சுபரால் பார்க்கப்பட்டு அல்லது கோபுராம்சத்தில் ஒன்பதாம் பாவத்தில் மேற்படி 7-மாதி இருந்தால் வெகு மேன்மையான களத்திரமுண்டாகும்.

(19) ஒன்று, ஏழுக்குடையவர்கள் குரு, புதன், சுக்கிரன், சம்பூர்ண சந்திரனிவர்களுடன் கூடிக் கேந்திர, திரிகோண சுய க்ஷேத்திர, உச்ச, மித்திர க்ஷேத்திர, சுபா சுப, வர்க்கோத்தமாம்ச, பாரிஜாதாம்சாதிகளில் இருந்தால் சகல ஸௌபாக்கியங்களு முண்டாகும், மித்திர பந்துக்கள் நன்முகம், நற்போகம், ராஜ சன்மானம் பூர்ண காம சாஸ்திர மறிதல், வாகனுதி சம்பத்து முதலிய இவைகள் ஜாதகருச்கு உண்டாகும்.

(20) ஜாதகருக்கு ஏழில் சூரியனிருப்பின் ரக்த சியாமள சரீரம், சிவந்த தலை மயிர், சிவந்த கண், பித்த சரீரம், சபல சித்தம், வெகு பேச்சு, அரை இடை, சம ஸ்தனம், சீக்கிர ஸ்கலனம், வெகு கடன், ராஜ ஸகுணம், பாண்டித்தியம், விவாதப் பிரிய குணம், பிதுரு சுகம் ஆகி இத்யாதி குணங்களுடைய களத்திரம் வாய்க்கும்.

(21) ஜாதகருக்குச் சம்பூர்ண சந்திரன் 7-ல் சம்பந்தப்படின் நல்ல முகமும், நலல அழகிய கண்களும், நீலநிற நீண்ட தலை மயிரும், பெருத்த இடையும், வட்டமிட்ட ஸ்தனமும், அழகிய சரீரமும், சம்பூர்ண பலத்தினுல் சோபிக்கும் வதனமும், சகல ஜனப்பிரியமும், மித்திர வெகு பந்துக்களும், தாய் சுகமும், இனிமையும், குளிர்ந்த ஆகாரமும், சிலேஷ்ம சரீரமும், வெகு இந்திரியமும், எப்போதும் அரிப்புள்ள யோனியும், வெள்ளை வஸ்திரமும், சுகந்த புஷ்பமாதி பிரியமும், பதி பக்தியும், பக்திக்கனுகூலமும் உள்ள சத்களத்திரம் வாய்க்கும்.

(22) ஜாதகருக்கு 7-ல் செவ்வாயிருந்தால் அதிக ரக்தசியாமள சரீரமும், சமஸ்த அவயவங்களும் மேல் நோக்கி யிருத்தலும், ஊர்த்துமுக ஸ்தனமும், மேனேக்கான பார்வையும், சுருட்டை

மயிரும், கடினச் சொல்லும் அதிக பித்த சரீரமும், சபல சித்தமும், கபடமும், திருட்டுத் தன்மையும், தாது வாதந்தெரிதலும், சூட்டுத் தேகமும், ரிண சம்பந்தமும், பர்த்தா பிராதுரு துவேஷமும், எப்போதும் துக்கமும், விரணதாபமும், தாபஜுரமும், அம்மை விஷ அக்கினி சஸ்திரமிவற்ருல் மரணமும், பீடையும், அதிக போஜனமும், துர்போஜனமும், உப்பு காரம் இவற்றில் பிரியமும், செஞ்சந்தனம் சிவப்பு ஆபரணமிவற்றில் பிரியமும், சுகமும், வெகுமைதுன அபேக்ஷையும், நீத்த இந்திரியமும், ஒட்டிய யோனியும் ஆகிய இவைகளை உடைய தாரம் சம்பவிக்கும். மேலும் இந்தத் தாரம் போக காலத்தில் பரபுருஷரை நினைப்பவளும் நினைத்து சஞ்சலப்படுபவளும் ஆவாள்.

(23) ஏழிலுள்ள செவ்வாயுடன் பாபியும் கூடியிருந்தால் ஜாதகருடைய தாரம் திருட்டு விபசார தோஷமுள்ளவளும், யோனிரோகமுள்ளவளும், புஷ்ப மேகாதி ரோகவதியும் ஆவாள்.

(25) ஏழிலுள்ள செவ்வாயுடன் சுபர் கூடியிருப்பின் சுப லக்ஷணமுடையவளும், சுரூபவதியும், நிலையான கீர்த்தியுடையவளும், டாம்பீகம் உள்ளவளும் ஜாதகருக்குக் களத்திரமாக வாய்ப்பாள்.

(25) ஏழில் புதனிருந்தால் நீலமேக சரீரமும், நல்ல அழகும், நல்ல கண்களும், நற்சரித்திரமும், புன்முறுவலுள்ள ஹாவியமும், நீலநிற மயிரும், நீண்ட பருத்த வட்டமிட்ட அழகிய ஸ்தனங்களும் உள்ளவளும், மிருதுவான சரீரமும், பாட்டு, நாட்டியம், ஸாஹித்ய ஞானம், ஒழுக்கம், வாகனுதி சிற்ப மிவற்றில் ரசனமும், தொழிலுள்ளவளும், வாக்விலாஸ முள்ளவளும், பொறுமையுள்ள அழகான பேச்சும், சொற்ப போகமும், பிறர் வசியப்படுந் தன்மையும், வெகு இந்திரியமும், வெகு நெருக்கமுள்ள யோனியும், புருஷனிடம் பக்தியும், சினேகமும், ஞான செய்கையும், தர்ம மார்க்கத்திலுண்டான சகல மந்திர ரகசியமும், பிரதாபமும், வாகனுதிகளும் உள்ளவளும் சற்களத்திரமாக ஜாதகருக்கு நேரிடுவாள்.

(26) ஏழில் குரு இருந்தால் ஸ்தூல சரீரமும், ஸ்தூல ஸ்தனமும், வெளுப்பு நிறமும், சாத்துவீகமும், மனோதைரியமும், ஜயமும், ஸ்வஸ்தமும், ஸ்வஸ்த சித்தமும், கறுத்த நீலநிற தலை

மயிரும், எல்லா ஸௌபாக்கியங்களும் சகல தேவதா உபாசனை யும், மந்திர ரகசியமும், ரகசிய ஞானமும், அதனால் திரவியமும், சொர்ண சரீரமும், சொர்ண சந்தர்பணமும், தேவப் பிராம்மண பூஜையும், மந்திரோபதேச சாமர்த்தியமும், வெகு மித்திரரும், வெகு புத்திரரும், வெகு பந்துக்களும், கனக சம்பத்தும், வித்தை யும், மணிப்ரவாள முத்து முதலிய ஆபரணமும், ஆபரண பிரிய மும், சம்பூர்ண சகல வித்தியா லக்ஷணமும், சம்பூர்ண போகமும், சம ஸ்கலிதமும், சமயோனியும், வெள்ளை வஸ்திரப் பிரியமும், தித்திப்புப் பிரியமும், சகல போகங்களும், சம போஜனமும், சுக மும் உள்ளவள் ஜாதகருக்கு மனைவியாக வாய்ப்பாள்.

(27) ஏழில் சுக்கிரனிருந்தால் ரூபம், ஸௌபாக்கியம், ஸ்தூல தேகம், சுகம், சுபம், வெளுத்த சரீரம், ராஜ ஸகுணம், கலங்கின ஸ்தனம், சுபலக்ஷணமுள்ள ஸ்தூல ஸ்தனம், சிலேஷ்ம சரீரம், வெள்ளைவஸ்திரம், முத்து, முத்தாபரணம், பொருமை, எப் போதும் பசும் பாலன்ன முண்ணல், தயிர், கோதுமையில் சமைத்த குளிர்ந்த அன்னம் அதாவது மெதுவான ஆறின அன் னம், நானுவித ஷட்ரஸத்துடன் கூடிய நித்யான்னதானப் பிரி யம், சுதந்திரம், மிருதுவான சரீரம், சுகந்த, புஷ்ப, கஸ்தூரி, கர் பூர, கதம்பப் பிரியம், ஆடை மஞ்சள் வர்ண வஸ்திரப் பிரியம், எப்போதும் உண்ணும் சுபாவப் பிரியம், சம்பூர்ண இந்திரியம், நீண்ட சம்போகம், அழகிய மாளிகைப் பிரியம், மிக்க நல் லொழுக்கம், சுவஸ்தமான நிர்மல மனம், எப்போதும் சம் போகப் பிரியம், மதன வித்தை, வீணு கானம், விடியற்கால சம் போகஞ் செய்யப்பிரியம், சும்பனம், ஆலிங்கனம், காமகலா சாஸ் திரம், க்ஷேமம், அறுபத்துநாலுவித ஆலிங்கனம்முதலியதெரிந்து அனுபவித்தல், சதுரங்கப் பிரியம், சாகித்திய சங்கீத வீணு விநோ தம், கௌரீ, லக்ஷ்மீ இத்தியாதி நாம ஸ்மரணை, பெயருடைமை, புத்திர பௌத்திர, வெகு மித்திர, தாஸி தாஸ சம்பன்னுதிகளை பெருதல், உப்யவம்ச உத்தமவிருத்தி, புருஷ வசியம், புருஷப் பிரியம் இத்தியாதி குணங்களுடையவள் ஜாதகருக்கு மனைவியாக வாய்ப்பாள்.

(28) ஏழில் சனி யிருந்தால் வெகு கருத்த குரூபியும், கிலேச மும், (கிருச) தீர்க்க தேகமும், நிர்மாம்ஸ தேகமும், பெருத்த பல்லும், ஹீனஸ்தனமும், அல்லது ஸ்தனமே யில்லாத தன்மை யும், சகல குணமும், சதா துக்க ஜீவனமும், ஸ்தூல கழுத்தும்,

விதண்டாவாதமும், தரித்திரமும், துராசாரமும், துர்ப்போஜன மும், புத்திரத் துவேஷமும், மித்திர, பந்துஜன விரோதமும், நிந் திக்கப்பட்ட பதார்த்த பக்ஷணம் செய்பவளும், வாதரோக பீடை யும், அழுக்கடைந்த வஸ்திரமும், அசூயை மனமுடையவளும், சபை நடுங்கும்படியானவளும், குத்ஸித குணமுள்ளவளும், விப ரீத மைதுனமும், துர்க்கந்த யோனியும், வெள்ளை வஸ்திர ஆசை யும், துர்போகமும், ராஜ தர்மமும், மித்திர பேதமும் செய்யும் குணமுள்ள களத்திரம் ஜாதகருக்கு நேரிடும்.

(29) ஏழில் ராகு கேதுக்களிருந்தால் விஷப் பிரயோகாதி செய்யுந்தாரம் ஜாதகருக்கு வாய்க்கும்

(30) ஏழில் சூரியன் ராகு சனி அல்லது சூரியன் சனி கேது குஜன் இவர்களிருந்தாலும் விஷப் பிரயோகாதி செய்கையுடைய களத்திரம் ஜாதகருக்கு வாய்ப்பாள்.

(31) களத்திர ஸ்தானாதிபதி, களத்திர காரகன் இவர்கள் ஆறாமிடத்திலிருந்து அல்லது ஆறுக்குடையவர், பாபி இவர்க ளுடன் கூடியும், சனி குஜனுடன் கூடியும் இருந்தால் ஜாரத் தன் மையும், சோரத் தன்மையும் உள்ள மனைவி வாய்க்கும்.

(32) களத்திர ஸ்தானாதிபதி களத்திரகாரகன் இவர்கள் ஆறாமிடத்தில் சூரியன் செவ்வாயுடன் கூடியிருப்பின் ஜாதகருக்கு க்ஷத்திரிய ஸ்திரீ சங்கமமுண்டாகும்.

(32) களத்திர ஸ்தானாதிபதி களத்திரக்காரகன் இவர்கள் ஆறாமிடத்திலிருந்து குரு புத சுக்கிரர்களுடன் கூடின் ஜாதகருக் குப் பிராம்மண ஸ்திரீ சேர்க்கையுண்டாகும்.

(33) ஸப்தமாதி களத்திரகாரகன் இவர்கள் புதனுடன் கூடி ஆறாமிடத்திலிருந்து பாபிகளுடன் கூடின் விரகத்தினால் திருட்டு ஸ்தலத்தில் ஜாதகருக்கு ஈன ஸ்திரீ சங்கமமுண்டாகும்.

(34) ஏழுக்குடையவன் களத்திர காரகன் இவர்கள் ஆறா மிடத்தில் குருவுடன் கூடில் தேவாலயம் தேவதாகிரகம் அதா வது பூஜைசெய்யும் தேவதையின் அறை இவற்றில் ஜாதகருக்குப் பிராம்மண ஸ்திரீ சங்கமமுண்டாகும்.

(35) ஏழுக்குடையவன் களத்திரகாரகன் இவர்கள் ஆறா மிடத்தில் சுக்கிரனுடன் கூடினால் சயனக்கிரகத்தில் ஹம்ஸதூலிகா

மஞ்சத்தில் கட்டிலிலேயே வேசி ஸ்திரீ அல்லது பால ஸ்திரீ (அதாவது யுக்த வயதுள்ள சௌந்திரியவதியான வாலிப ஸ்திரீ) யுடனாவது ஜாதகருக்குச் சம்போகமுண்டாகும். சில கிரந்தத்தில் கர்ப்பினி ஸ்திரீ சங்கமம் நேரிடும் என்றும் சொல்லி யிருக்கிறது.

(36) ஏழுக்குடையவன் களத்திரக்காரகன் இவர்கள் ஆறில் இருந்து, சனியுடன் கூடினால் ஜாதகர் தாவீ தாஸஜன விருத்த ஸ்திரீ, விருஷன ஸ்திரீ சேர்க்கையும், சண்டாள ஸ்திரீ சேர்க்கையும், சோர ஸ்திரீ சங்கமம் உடையவராவர்.

(37) ஏழுக்குடையவன் களத்திர காரகன் இவர்கள் ஆறுமிடத்தில் ராகு கேதுக்களுடன் கூடினால் சண்டாள ஸ்திரீ மிலேச்ச ஸ்திரீ, குரூபஸ்திரீ, வேலைக்காரி, ரஜஸ்வலையான ஸ்திரீ குத்ஸித புஷ்பினி ஆகிய இவர்களுடன் ஜாதகர் பலாதகார சங்கமமாக வனப்பிரதேசத்தில் சேருவார் அல்லது நாற்கால் ஜீவனிடம் சம்போகமும், புருஷ கமனமும் நேரிடும்.

(38) ஒன்பதாமிடத்தில் சந்திரனும் சனியுமிருந்தால் ஜாதகர் குருத்துரோகியாவர். இவர்கள் பாபாம்சத்திலுமிருந்தால் குரு பத்னியைச் சேர்வார். இவர்களுடன் புத்திர ஸ்தானாதிபதியும் கூடியிருந்தால் குருவின் புத்திரியைச்சேர்வார், வேறு கிரந்தத்தில் தன் புத்திரியைச் சேர்வார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களுடன் சுபர் கூடினால் அபவாதம் மட்டும் நேரிடும், பாபர் கூடினால் நிச்சயம் மேற்சொன்ன பலனையடைவர், நீச்சக் கிரகம் கூடினால் பின்னும் மேற்சொல்லிய பலன் விசேஷமாகும்.

வேறு

(39) ஏழாமிடத்தில் சூரியன் இருந்தால் ஜாதகர் கியாதியும், தன் தகப்பனைவிட அதிக காமியும், குத்ஸித ஆத்துமாவும், ஆவான், அதமன், மனைவியை அபகீர்த்தி யுடையவளாகச் செய்வான்.

2-வது அத்தியாயம்.

—:※:—

(40) ஏழாமிடத்தில் சூரியன் பாப நீச்ச ராசிகளில் இருந்தாலும் மேற்படி ஸ்தானங்களில் பாபர்களுடன் கூடினாலும் அல்லது பாபர்களால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய மனைவி ரோகியும் கலங்கினவளுமாவாள்,

(41) சந்திரன் க்ஷீணனாகி ஏழிலிருந்தாலும் பன்னிரண்டி லிருந்தாலும் ஜாதகருடைய மனைவி ரோகியும், கலங்கினவளுமாவாள், மேற்படி ஸ்தானம் சுப க்ஷேத்திரமாகவானால் நூறு ஸ்திரீகளிடம் ஜாதகர் ரமிப்பார்.

(42) செவ்வாய் 7-மிடத்தில் பாப க்ஷேத்திரம் அல்லது மீனத்தில் அல்லது சுயக்ஷேத்திரத்தில் கிரகம் சேர்க்கையற்றிருந்தால் யுத்தம், சாகஸமிவற்றில் ருசியும், பந்துக்களில் நாசமும் நேரிடும்.

(43) செவ்வாய் 2-மிடத்தில் இருந்தால் ஸ்திரீ தோஷமுண்டாகுமென்று யவனர்களெண்ணுகின்றனர்.

(44) புதன் 7-ல் இருந்தால் ஸ்திரீ சபல சித்தமும் மூடத்தன்மையும் சடத்தன்மையும் உள்ளவள் ஆவாள்.

(45) புதன் 7-ல் சுப வர்க்கத்தில் சுபஸ்தானத்தில் இருந்தால் தெளிவான, காந்தியும், வமிச சீலமும், சிலாக்கிய ரூபமும், கொண்டாடத்தக்க தன்மையும், வெகு ஸ்திரீயும், அறிவும், குணமும் உண்டாகும்.

(46) புதன் மேற்சொல்லியபடி ரிஷப ராசி 7-மிடமாகிய அவ்விடத்தில் இருந்தால் ஜாதகருக்கு முதல் மனைவி மரிப்பாள்.

(47) குரு 7-ல் செவ்வாயுடன் வக்கரமாயிருந்தால் அதிகப் பிரியமும், மனோக்ஞமுமான தாரமும், உதாரமும் ஏற்படும்.

(48) குரு 7-ல் செவ்வாயுடன் வக்கிரமாயிருந்து குருவாவது செவ்வாயாவது நீச்சத்தில் இருந்தால் ஜாதகருக்கு மனைவி நாசம் ஏற்படும்.

(49) ஏழில் சுக்கிரனிருந்தால் ஜாதகர் வேசி ஸ்திரீ ஜனவல்லவர், போக சம்பத்தும், அமிருதபானமும் உண்டு.

(50) சுக்கிரன் 7-ல் விருச்சிகத்தில் இருந்தால் மனைவி நாசமுண்டாகும்.

(51) சனி, சுக்கிரன், சந்திரன் குஜனிவர்கள் சப்தமத்திலிருந்தால் உண்மையில் மனைவி நாசமுண்டாகும் அல்லது புத்திர ஹீனமுண்டு.

(52) சனி, குஜ, சுக்கிர, சந்திரர்கள் 5, 8-மாதிபதிகளுடன் கூடி 7-மிடத்திலிருக்கின் ஜாதகர் மனைவியை யிழந்து எப்பொழுதும் துக்கமடைந்து போகஹீனனாவர்.

(53) ஏழுக்குடையவன் மூன்றிலும் 5-ல் புதன், செவ்வாய், ராகு இவர்களும் இருந்து, சுக்கிரனும் 6-ல் இருந்தால் பாலியத்தில் 11 அல்லது 12-ல் விவாகம் நடக்கும், 3-ல் சனி யிருந்தால் ஜாதக ருக்கு மாமனிருப்பது கஷ்டம், விவாகமான ஒரு வருஷத்தில் அவர் மாமியார் மரிப்பாள்.

(54) எட்டில் செவ்வாயிருந்தாலும் பார்த்தாலும் யோனிப் புற்று ரோகம் மனைவிக்கு யேற்படும். பிசாச பாதை உண்டென்று பலர் சொல்வார்கள். ஜாதகருக்கு மறு மனைவியால் சுகமுண் டாகும்.

(55) சுக்கிரன் செவ்வாயின் அம்சத்திலிருந்தாலும், செவ்வா யின் ராசியிலிருந்தாலும், மேற்படி ராசி அம்சங்களில் சுக்கிரன் இருந்து செவ்வாயுடன் கூடியிருந்தாலும், செவ்வாயால் பார்க்கப் பட்டாலும் ஜாதகர் பரஸ்திரீ போகம் செய்வார்.

(56) சனியின் அம்சத்தில் சுக்கிரன் இருந்தாலும் சனியின் ராசியில் சுக்கிரனிருந்தாலும் மேற்படி சுக்கிரன் சனியுடன் கூடி யல்லது சனியால் பார்க்கப்பட்டிருந்தாலும் நீசாம்சத்திலிருந்தா லும் நீச்சாம்சத்திலிருந்து பாபருடன் கூடியிருந்தாலும் ஜாதகர் நீச்ச ஸ்திரீ போகம் உடையவர்.

(55) (a) ஏழாமிடத்தில் சுக்கிரன் தன் வர்க்கத்தில் செவ்வா யுடன் அல்லது சனியுடன் கூடியிருந்தாலும் சந்திரனுடன் கூடி யிருந்தாலும் ஜாதகர் பரஸ்திரீ லோலனவார்.

(56) (a) செவ்வாய் சந்திரன் சனி இவர்கள் அன்னியோன் னிய வர்க்கங்களிலிருந்தாலும் பலமுள்ள சுபர்களால் பார்க்கப் படாதிருந்தாலும் ஜாதகர் சர்வகாலமும் பரதாரகமனம் செய்வர்.

(57) ஒரு ராசியில் சந்திரன் செவ்வாய் சனி யிவர்கள் கூடி யிருந்தால் ஜாதகர் வைபவமுள்ள ராஜனவார். அவர் மனைவியும் அப்படியே யாவள்.

(58) சனி செவ்வாயிவர்களின் வர்க்கத்தில் 7-ல் சுக்கிரன் இருந்தாலும், இருந்து மேற்படியார்களால் பார்க்கப்பட்டாலும், ஜாதகருடைய மனைவி கணவனுக்குச்சமமாக விபசாரம்செய்வாள், அதாவது சதிபதிகளிருவரும் தோஷமடைவார்கள். வேறு சிலர் புருஷ கமனமே புருஷனுக்குண்டாகும் என்று எண்ணுகின்றனர்.

(59) ஏழில் சுக்கிரனுனவர் சனி செவ்வாயிவர்களின் அம்சத்திலிருந்தாலும் அல்லது சுக்கிரனிருக்கிற அம்சாதிபதி செவ்வாய் சனி யிவர்களுடன் கூடி யிருந்தாலும் ஜாதகருடைய மனைவி வேசியாகவும் அல்லது ஜாரிணியாகவும் வாய்ப்பாள்.

(60) சனி கன்னியா நவாம்சத்தில் விருஷப லக்கினத்திலிருந்தாலும், சனி, மீன, கடக, விருச்சிக ராசிகளில் அந்திம அம்சங்களில் 7-மிடத்தில் இருந்தாலும் ஜாதகர் மலட்டு மனைவியை யடைவார்.

(61) ஏழில் சனி அஸ்தங்கத தோஷ மடைந்திருந்தால் ஜாதகரின் மனைவிகள் காலங்கடந்து மரித்துவிடுவார்கள் அல்லது ஹீனங்க முடையவர்களையாவது, விதவையையாவது ஒருவருக்கு நிச்சயதார்த்தம் செய்து விவாகம் நடவாமல் தவறினவளையாவது ஜாதகர் அடைவார். இதற்குக் குரு உச்சத்திலிருக்கவேண்டும். குரு உச்சத்திலில்லாவிடில் மனைவிகள் சீக்கிரம் சீக்கிரம் மரித்து விடுவார்கள்.

(62) ஏழில் ராகு இருந்தால் ராகு மனைவிகளை அழித்த யடியே யிருப்பார்.

(63) ஏழில் உள்ள ராகு பாப ராசிகளிலிருந்து, பாபராலும் பார்க்கப்பட்டிருந்து, அல்லது பாபருடன் கூடி யிருந்தாலும் ஸ்திரீ சங்கமத்தால் சர்வ சொத்துக்களையும் ஜாதகர் நாசமாக்குவார்.

(64) சூரியனுடன் ராகு மேற்சொல்லியபடி ஏழில் இருந்தாலும் மேற்படி பலன்கள் அதாவது அயிட்டம் 61 முதல் சொல்லிய பலன்கள் உண்டாகும்.

(65) ஏழில், சூரிய சந்திரரிருந்தால் ஜாதகர் புத்திர, மித்திர, தன ஈனனுவர்.

(66) 7-ல் சூரிய சந்திரனுடன் செவ்வாயிருந்தால் ஜாதகர் வெளிதேச சஞ்சாரம் செய்வார்.

(67) புதனுடன் சந்திரன் சூரியன் கூடியிருந்தால் காரிய விக்னமுண்டாகும். காரியத்தடை உண்டாகும்.

(68) சனியுடன் சூரியன் கூடியிருந்தால் பிதுரு துவேஷமுண்டாகும். தார துவேஷ முண்டாகும்.

(69) குரு 7-ல் இருந்தால் மணி பூஷணுதிகளுண்டாகும்.

(70) சுக்கிரனுடன் சூரியன் 7-ல் இருந்தால் மனைவி துவேஷமும், தன மில்லாமையும், பெரிய சரீரமும் உண்டாகும்.

(71) சுக்கிர சூரியருடன் சனியும் சப்தமத்தில் இருந்தால் ஸ்திரீ நாசமுண்டாகும். ஜாதகர் அரசசேவீயாவார், எப்பொழுதும் அலைச்சலுண்டாகும்.

(72) செவ்வாய் சந்திரனிவர்கள் சப்தமத்தில் இருந்தால் களத்திர பீடையுண்டாகும், அற்ப களத்திரமாகும்.

(73) ஏழில் சந்திரனும் புதனுமிருந்தால் சூரத்தனமுண்டாகும்; ஜாதகர் கவியாயும் பிரபுவாகவுமாவார்.

(74) ஏழில் குரு, சந்திரரிருப்பின் ஜாதகர் அறிவுள்ள அரசனுவர், மேன்மையான கல்ப விருக்ஷ சம பலனுண்டாகும். சில கிரந்தங்களில் குரு சந்திரர் கூடியிருப்பின் தாரவம்சம் நாஸ்தியாய் விடும் என்று சொல்லுகின்றனர், வேறு கிரந்தத்தில் 2 தாரம் ஏற்படும் என்றுளது.

(75) சுக்கிர, சந்திரர் 7-ல் இருப்பின் அதிக புத்திரரும், தனமதிகமும் மேலான ஸ்திரீ பிரஜையுமுண்டாகும்.

(76) சனி, சந்திரர் சப்தமத்தில் இருப்பின் ஜாதகர் மனைவி ஹீனர், கிராம புராதிகமுடையவர்.

(77) ஏழில் குஜ, புதரிருந்தால் ஜாதகர் சேனுதிபதி ஆவர், சுகமில்லாதவர்.

(78) குஜனுடன் குருவிருந்தால் ஜாதகர் ராஜனுகவல்லது. வித்துவானுக ஆவார்.

(79) ஏழில் சுக்கிர குஜரிருந்தால் ஸ்திரீயால் தனமுண்டாகச் செய்வர்.

(80) ஏழில் செவ்வாயும், சனியுமிருந்தால் ஜாதகர் தனம், ஸ்திரீ இவைகளால் சுகமில்லாதவர்.

(81) ஏழில் குருவுடன் செவ்வாய் கூடியிருந்தால் ஜாதகர் நன்மனைவியுடையவரும், வெகு சத்துருவுண்டாயினும் குலாதிபரும் ஆவார்.

(82) ஏழில் குருவும், புதனும் கூடியிருந்தால் ஜாதகர் வெகு பலமுள்ள ஸ்ரீமான், போகசேஷ்டை யிவைகளுடையவர்.

(83) குருவும், புதனும், சனியும் கூடி 7-ல் இருந்தால் ஊமை யானவளை ஜாதகர் மணப்பார்.

(84) குருவும், சுக்கிரனும் சப்தமத்திலிருந்தால் ஜாதகர் எப்பொழுதும் ஸ்திரீ பிரபுவாகவும், நரவாகனதிபோக முடையவராகவும், நற்புகழும் ஸ்திரீ ரத்தினமுடையவராகவும் இருப்பர்.

(85) குருவும், சூரியனும் கூடி சப்தமத்திலிருந்தால் எப்பொழுதும் பிதுரு ஜெனப்பிரியருமாவர். ஸ்திரீ விரோத வைரத்தினால் சர்வ சொத்து நஷ்டமும், இத்துடன் குருத்துவமும், ஸ்திரீ ரத்னமும், அப்படியே வெகு கீர்த்தியும், வஸ்திர ஆபரணாதி லாபமும் சுபாகிருதியும் உண்டாகும்.

(86) குரு ஏழில் கன்னியா ராசியில் இருந்தாலும் சந்திரன் சப்தமத்தி லிருந்தாலும் ஜாதகருடைய மனைவி ஆகிருதியும் அதிக சகோதரிகளு முடையவளாவாள்.

(87) ஏழில் பாபரிருந்தால் தார நாசமும் அல்லது தாரத்திற்கு அங்கஹீனம் உண்டாகும்.

(88) பாபர்கள் 7-ல் தங்கள் உச்ச சொ்‌ஷேத்திரங்களிலிருந்தால் மனைவி நாசமுண்டு.

(89) ஏழுக்குடையவன் 7-லேயே இருந்தால் ஜாதகர் சகோதரரிடம் வெகு அன்புள்ளவரும், நிர்மலமானவரும், சுய ஜனங்களுடன் கூடியவரும், தேஜசு உள்ளவரும் ஆவார். தன லாபத்திலேயே இருப்பான்.

(90) ஏழாமிடத்தில் சந்திரன், புதன், குரு, சுக்கிரனிவர்களிருந்தாலும் 7-மிடத்தோன் இவர்களின் வர்க்கத்தில் இருந்தாலும் இவர்கள் 7-ல் இருந்து 7-மிடத்தோன் இவர்களால் பார்க்கப்பட்டிருந்தாலும் அல்லது இவர்களுடன் கூடியிருந்தாலும் ஏழாமிடத்தோன் இவர்களில் எந்த ஒருவருடனாவது கூடி யிருப்பினும் ஏழாமிடத்தோன் எவருடைய அம்சத்திலிருக்கின்றாரோ அவருடன் கூடியிருந்தாலும் ஜாதகருக்கு இரு தார யோகமுண்டாகும்.

(91) ஏழுக்குடையவன் கேந்திரத்திலிருந்து சுபருடன் கூடியிருந்தாலும் சுபரால் பார்க்கப்பட்டிருந்தாலும் இருதார யோகமுண்டாகும். ஜாதகர் தீர்க்காயுளடைவார்.

(93) ஏழுக்குடையவன் உச்ச, வக்கிரதி, வெகு குணங்களுடையவனுகி யிருந்து பாபரால் பார்க்கப்படாமலிருந்தால் ஜாதகர் மனைவியரை யுடையவனுவர்.

(94) ஒராமாதிபதி 7-லும், 7-மாதிபதி ஒன்றிலும் இருந்து இவ்விருவரில் ஒருவர் புதனுடன் கூடியிருந்தாலும் 7-மிடத்தில் சுக்கிரன் தன் உச்சராசியில் இருந்து அந்த ஸ்தானுதிபதியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகர் மதன கோபால யோகமுண்டாகி 300 ஸ்திரீகளிடம் ரமிப்பார். சிலர் 100 ஸ்திரீகளுடன் ரமிப்பானென அபிப்ராயப்படுகிருர்கள்.

(95) ஜாதகர்களுக்குச் சுக்கிரனிருக்கும் அமிசத்திற்குச் சமமான வர்ண ரூப குணங்களுடைய ஸ்திரீகள் மனைவிகளாவார்கள். சில கிரந்தத்தில் ஒன்பதாமாதிபதியின் நவாம்சத்திற்குரிய அல்லது சப்தமாதியிருக்கும் நவாம்சராசிக்குறிய குணங்களுடனும் ரூபத்துடனும் வர்ணத்துடனும் மனைவி வாய்ப்பாள் என்றுளது.

(96) ஏழுக்குடையவன் நீச்ச வர்க்கத்திலிருந்தால் நீச்சவர்க்கத்தில் விவாகம் நடக்கும்.

(97) பன்னிரண்டில் சந்திரனிருந்து சூரியன் 6-ல் இருந்தால் ஜாதகன் அந்தஸ்தில் முக்கியமில்லாதவன், அல்லது அவன் மனைவியாவது முக்கியமல்லாதவளாவாள், அதாவது தாழ்ந்தவர்கள் என்பதாம்.

(98) ஏழில் அல்லது 5-ல் அல்லது 9-ல் சூரிய சுக்கிரர் கூடியிருந்தால் ஜாதகர் ஒரு அங்கக்குறைவுடைய மனைவியுடையவருவர். இத்துடன் 5-ல் சனியானுல் நபுஞ்சகராவர் என ஒரு கிரந்தம் கூறுகிறது.

(99) ஸ்திரீ புருஷக்கிரகங்களிருவரும் 7-ல் இருந்தாலும் சனி செவ்வாயிருவரு மிருந்தாலும், யாராவது ஒரு சுபரால் பார்க்கப்பட்டாலும் வயோதிக வயதில் ஜாதகருக்கு எல்லா அதிகாரமு முண்டாகும். சிலக் கிரந்தத்தில் ஜாதகர் அரசனுவாரென்று சொல்லப்படுகிறது.

(100) உதய லக்கினம் கன்னியாகி அதில் சூரியனிருந்து 7-ல் சனியிருந்து சுக்கிரன் சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகருடைய மனைவி தனக்குப் பின்னுலிறப்பாள்.

(101) சுக்கிரனுக்கு 4 அல்லது 8-ல் சனி, செவ்வாய், அல்லது சூரியனிருந்தாலும் அல்லது சனி, செவ்வாய் இவர்கள் மத்தியிலாவது, சனி சூரியனிவர்கள் மத்தியிலாவது, செவ்வாய், சூரியனிவர்கள் மத்தியிலாவது, சுக்கிரனிருந்தாலும் ஜாதகருடைய மனைவி கிணற்றில் வீழ்ந்திறப்பாள். இந்தப்படி கிரகங்களிருந்து இக்குரூரர்கள் அல்லது மேற்படி சுக்கிரன் சுபருடன் கூடியிருந்தாலும் சுபரால் பார்க்கப்பட்டாலும் சக்ததி யில்லாமற் போய்விடும்.

(102) சுக்கிரன் 7-ல் இருந்து, 2-மாதிபதி 7-ல் இருந்து, சுபரால் பார்க்கப்பட்டாலும் சுபருடன் கூடியிருந்தாலும் இந்த 7, 2-க் குடையவர்கள் எவ்வளவு கிரகங்களுடன் கூடியிருக்கிறார்களோ அவ்வளவு ஜீவகளத்திரமும், குரூரர்களுடன் கூடியிருந்தால் அவ்வளவு மனைவிகள் நாசமும், பாபருடனும், சுபருடனும் கூடியிருந்தால் களத்திர பங்கமுண்டாகி ஒரே தாரமுமுண்டாகும்.

(103) சுக்கிரன் 7-ல் இருந்தால் ஜாதகர் வெகு காமியாவார்.

(104) மித்திர க்ஷேத்திரம் அல்லது சத்துரு க்ஷேத்திரமிவற்றில் அல்லது லக்கினத்தில் 7-மாதி இருந்தாலும் பாபர்களுடன் கூடியிருந்தாலும் விபசார தோஷமுண்டாகும்.

(105) இரண்டாமிடத்தில் பாபருடன் செவ்வாய் சேர்ந்திருந்தாலும் ஸப்தமாதிபதி யிவ்வாறிருந்தாலும் விபசார தோஷமுண்டாகும்.

(106) ஏழுக்குடையவன் ராகு கேதுக்களுடன் கூடியிருந்தாலும் விபசார தோஷமுண்டாகும்.

(107) இரண்டு சுபர்கள் 7-க்குடையவருடன் கூடி சுய க்ஷேத்திரத்தைத் தவிர்த்திருந்தால், 7-ல் இருந்தால் யமள ஜனனமுண்டாகும்.

(108) சப்தக் கிரகங்களும் 2-ல் இருந்தாலும் 2-ல் அல்லது 7-ல் அல்லது 10-ல் இருந்தாலும் ஆறு கிரகங்கள் இப்படி யிருந்தாலும் இவர்கள் 4-மிடத்தி லிருந்தாலும் பர ஸ்திரீ கமனம் நேரி

டும், சிலர் இவர்களிலொருவர் 4-ல் இருந்தாலும் பர ஸ்திரீ கமன முண்டாகுமென்று சொல்லுகின்றனர்.

(109) ஏழு 5-க்குடையவர்கள், சனி, 6-க்குடையவனிவர்களுடன் கூடியிருந்தாலும் இவர்களால் பார்க்கப்பட்டாலும், சுபரால் பார்க்கப்பட்டாலும், புத்திரன் ஜாரனுவான். 5-ல் உள்ள சனிக்கு 6-க்குடையவன் பார்வையிருந்தாலும் புத்திரன் ஜாரனுவான்.

(110) க்ஷீண சந்திரன் சப்தமத்தில் இருந்து பாபருடனும் கூடினுல் இவர் அசுபனுகித் தார நாசம் செய்வர்.

(111) சுக்கிர சந்திரர் கூடி 7-ல் இருந்து மூடத்திலிருந்தாலும் நீச்சத்தில் இருந்தாலும் ஜலத்தில் விழுந்து மனைவி இறப்பாள்.

(112) மேற்படி சுக்கிர சந்திரர்கள் அப்பிரகாச (அதாவது பிரகாசமில்லாத)க் கிரகங்களாகி தூமாதிக் கிரகங்களுடன் கூடினுலும் பாபருடன் கூடினுலும் களத்திர அசுபத்தை யுண்டாக்கும்.

(113) சூரியன் அப்பிரகாசக் கிரகத்துடன் கூடி சப்தமத்தில் ஷெ சந்திர சுக்கிரருடன் கூடினுலும் தனியாயிருந்தாலும் க்ஷீண சந்திரனிப்படி அப்பிரகாசக் கிரகத்துடன் கூடி சப்தமத்திலிருந்தாலும் களத்திரம் விபசாரம் செய்வாள்.

(114) சூரியன் மாத்திரம் அப்பிரகாசத்துடன் கூடி 7-ல் இருந்தால் ஜாதகர் மலடியின் கணவனுவர்.

(115) செவ்வாய் மேற்படி 7-ல் அப்பிரகாச கிரக சேர்க்கையுடனிருந்தால் ஸ்திரீக்கு மரணமுண்டாகும், சனிக்கு மிப்படியே.

(116) ஏழில் ராகு இருந்து ஷெ அப்பிரகாச கிரகசேர்க்கையடைந்தால் கோபியான கணவனை வெறுப்பவளுமான மனைவியாவாள். ஜாதகரும் வெளியில் பர ஸ்திரீ கமனமுடையவர். நிஷேகமின்றி புத்திரனுடையவர், சிலர் நிஷேகமே செய்யாமல் புத்திரஹீனனுவார் என சொல்லுகின்றனர்.

(117) ஏழில் தூமனிருந்தால் விவாகமே நடைபெறுது. தன மில்லாமையும் எப்போதும் காமமும், பரதார கமனமுமுண்டாகும். தேஜஸில்லாதவனுவார்.

(118) ஏழில் பரிவேடனிருந்தால் கெட்ட ஒழுக்கமுடைய யவளை விவாகம் செய்துகொள்வார். ஸ்திரீ வியாதியடைவாள்.

(119) ஏழாமிடத்தில் உப கேது இருந்தால் கெட்ட ஒழுக்க முடையவளும் துஷ்டையுமான ஸ்திரீ மனைவியாக வாய்ப்பாள், கெட்ட பான வஸ்துக்களின் குடிப்பழக்கமும் உடைவாள். சிலக் கிரந்தங்களில் கேது மேற்படி 7-மிடத்திலிருந்தாலும் இதே பலன் சொல்லப்படுகிறது.

(120) ஏழாமிடத்தில் காலனிருந்தாலும், விதிபாதனிருந்தாலும் கர்ப்பசிராவத்தினால் மனைவிக்கு பீடையுண்டாகும். கெட்ட ஒழுக்கமடைவாள், தன தார சுதாதிகளை வெறுத்து ஜாதகர் ஸ்திரீ ஜிதராகியும், லஜ்ஜையில்லாதவராகியும், காமியாயும், அன்னிய ஸ்நேகமுடையவராகவும், கலங்கின பார்வை யுடையவராகவும், குரூபியாயும், பிராம்மணரை நிந்திப்பவருமாகவும், அபகீர்த்தியு டையவராகவுமாவார்.

(122) ஏழாமிடத்தில் புதனிருந்தால் நல்ல புத்திரருண் டாவர்.

(123) ஏழாமிடத்தில் குருவிருந்தால் விசேஷ புத்திரகளுண் டாவர், மேலும் மேற்படி புத்திரிகள் சற்குண மடைவார்கள்.

(124) ஏழாமிடத்தில் சுக்கிரனிருந்தால் மனைவி சௌபாக்கிய முடையவள், ஸ்ரீமதியாவள், சம்பத்துடைய புத்திரி யுடையவளாவாள்.

(125) ஏழாமிடத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் மனைவி கோபியாவாள்.

(126) ஏழில் செவ்வாயிருந்தால் மனைவி சண்டாளியாவள்.

(127) ஏழில் சனி யிருந்தால் மனைவி தகப்பனைக் கொல்பவளாவள், சிலர் பர்த்தாவைக் கொல்பவள் என சொல்லுகின்றனர்.

(128) ஏழில் ராகு இருந்தால் மனைவிக்கு மரணமுண்டாகும்.

குறிப்பு:—இப்பலன்களை 5, 9-மிடங்களில் மேற்படி கிரகங்கள் இருந்தாலும் உண்டுபண்ணுவார்கள்.

(129) ஏழில் சுக்கிரன் இருநதாலும், குருவிருந்தாலும் சந்திரனிருந்தாலும் மனைவி, தனம், புத்திரனிவையும், தியாகமும், கவியும் வீரியமும் உடையவளாகிப் பந்துக்களுக்கு உபகாரியுமாவாள்.

(130) லக்கினாதிபதி பலமுடையவனாகி இருந்து சர ராசியில் சுக்கிரனும், குரு 7-லும் இருந்தால் நல்ல மனைவி வாய்ப்பாள்.

(131) சுக்கிரன் ஷஷ்டாஷ்டம விரயங்களில் அல்லது 10-மிடத்தில் துர்ப்பலனாகி யிருந்தாலும், நீச்சத்தில் சுக்கிரனிருந்தாலும் தார நாசமுண்டாகும்.

(132) ஒன்பதாமாதிபதி நீச்சராசியில் சரநவாம்சையில், அல்லது பாபராசியில் இருந்து, வெகு பாபருடனும் கூடியிருந்தாலும், அவிக்கிரகம் 7-மிடத்தில் இருந்தாலும் உதய நவாம்சத்திலிருந்தாலும் 2 தாரமுண்டாகும். சில கிரந்தங்களில் 7-மாதிபதி மேற்சொல்லியபடி இருந்தால் இப்பலன்களுண்டாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் சிலர் 8-தாரம் உண்டாகும் என்றும் சிலர் இஷ்டமான தாரமுண்டாகுமென்றும் அபிப்ராயப்பட்டிருக்கின்றனர்.

(133) ஏழாமிடத்தில் செவ்வாயிருந்து, சுக்கிரனுக்கேழில் கேதுவுமிருந்து லக்கினாதிபதியும் 8-ல் இருந்தால் மூன்று தாரமுண்டாகும்.

(134) உபய ராசிகளில் சுக்கிரனிருந்து, அந்த ராசிநாதன் தன்னுச்சத்திலிருந்து 7-மாதி பலத்துடனிருந்தால் வெகு தாரமேற்படும்.

(135) உபய ராசிகளில் சுக்கிரனிருந்து அந்த ஸ்தானாதிபதி உச்சத்திலிருக்க, 7-மாதிபதி பலத்துடனிருந்தால் வெகு தாரமேற்படும்.

(136) ஏழாமாதிபதி சுபர்ராசியிலிருந்து சுக்கிரன் தன் உச்ச, சொட்க்ஷேத்திராதிகளி லெங்கேயாவதிருந்தால் 5 அல்லது ஒன்பதாம் வயதில் விவாகம் நேரிடும். சிலர் 7-மாதி 9-ல் இருந்து சுக்கிரன் மேற்சொல்லியபடி இருந்தாலும் இதே பலனைச் சொல்லுகிறார்கள்.

(137) ஏழில் சூரியனிருந்து 7-மாதிபதி சுக்கிரனுடன் கூடியிருந்தால் 7 அல்லது 11-வது வயதில் விவாகம் நடக்கும்.

3-வது அத்தியாயம்.

—: ※ :—

(138) இரண்டாமிடத்தில் சுக்கிரனிருந்து 7-மாதி 11-ல் இருந்தால் 10 அல்லது 16-ம் வயதில் விவாகம் நடக்கும்.

(139) லக்கின கேந்திரத்தில் சுக்கிரனிருந்து 7-க்குடையவன் சனி ராசியில் அல்லது 7-ல் இருந்தால் 11-வது வயதில் விவாகம் நடக்கும்.

(140) லக்கினத்திற்குக் கேந்திரங்களில் சுக்கிரனிருந்து, சுக்கிரனுக்கேழில் சந்திரனுமிருந்தால் 12 அல்லது 19 வயதில் விவாகம் நடக்கும்.

(141) சந்திரனுக்கேழில் சுக்கிரனும், சுக்கிரனுக்கேழில சனியும் இருந்தால் 18-வது வயதில் விவாகம் நடக்கும்.

(142) இரண்டாமாதிபதி 9-லும், 7-மாதிபதி 2-லுமிருந்தால் 13 வயதில் விவாகம் நடக்கும்.

(143) இரண்டில் சுக்கிரனிருந்து 2-மாதிபதி செவ்வாயுடன் கூடியிருந்தால் 20 அல்லது 22-ல் விவாகம் நடக்கும்.

(144) லக்கினம் 7-வது நவாம்சத்தில் உதயமாக 7-மாதிபதி 12-ல் இருந்தால் 23 அல்லது 26-ல் விவாகம் நடக்கும்.

(145) ஏழாமாதிபதி 8-வது நவாம்சத்திலும் லக்கினுதிபதி சுக்கிரனுடனும் கூடினுல் 23-ல் அல்லது 25-ல் விவாகம் நடக்கும்

(146) ஐந்தில் சுக்கிரனிருந்து 4-ல் ராகு இருந்தாலும், 4-ல் ராகுவும் சுக்கிரனும் கூடினுலும் 31-ல் அல்லது 34-ல் விவாகம் நடக்கும்.

(147) மூன்றில் சுக்கிரனும் அதற்கேழில் ஏழாமாதிபதியும் இருந்தால் 27-ல் அல்லது 30-ல் விவாகம் நடக்கும்.

(148) ஏழாமாதிபதி நீச்சத்திலும் சுக்கிரன் 6, 8-லிருந்து அல்லது 6, 8-ல் மூடத்திலும் இருந்தால் வயது 18-ல் அல்லது 33-ல் மனைவி நாசம் நேரிடும்.

(149) ஏழாமாதிபதி 8-லும்,12-மாதி சனியின் ராசியில் அல்லது 7-லும் இருந்தால் 19-ம் வயதில் தார நாசமுண்டாகும்.

(150) இரண்டில் ராகுவும் 7-ல் செவ்வாயுமிருந்தாலும்பாபர்களுடனிவர்கள் கூடியிருந்தாலும், விவாகமான மூன்றும்வருஷத்தில் பாம்பு கடித்தலால் மனைவி யிறப்பாள், சிலர் நெருப்பினுல் மரிப்பாள் என சொல்லுகின்றனர். சிலக்கிரந்தத்தில் விவாகமான 3-ம் நாளில் பாம்பு கடித்திறப்பாளென சொல்லப்பட்டிருக்கிறது.

(151) எட்டில் சுக்கிரனும் 8-மாதிபதி சனியின் வீட்டி லிருந்தால் விவாகமான 12-வது வருஷம் அல்லது 19-வது வருஷம் மனைவிக்கு மரணம் நேரிடும்.

(152) ஓராமாதிபதி நீச்சத்திலும் 2-மாதிபதி 8-லும் இருந்தால் விவாகமான 13-வது வருஷத்தில் மனைவி மரிப்பாள்.

(153) சுக்கிரனுக்கேழில் சந்திரன் அல்லது சந்திரனுக்கேழில் புதனிருந்து, 8-மாதிபதி 5-லும் இருந்தால் ஜாதகர் முதல் தாரம் 10-வது வருஷத்திலும், 22-ம் வருஷத்தில் 2-ந்தாரமும், 33-ம் வருஷத்தில் 3-ந் தாரமும் மணப்பார்.

(154) இரண்டாமாதிபதி சுயக்ஷேத்திரத்திலும் 7-மாதிபதி 12-லுமிருந்தால் ஒரு தாரமே யுண்டாகும்.

(155) இரண்டு. 7-மாதிபதிகளுடன் கூடியசுபக்கிரகங்களின் எண்ணிக்கையளவு எவ்வளவோ அவ்வளவு ஸ்திரீகளை ஜாதகர் மணப்பார்.

(156) சுக்கிரன் பாபருடன் கூடினாலும் நீச்சக்கிரகத்தினால் அல்லது பாபக் கிரகத்தினால் பார்க்கப்பட்டாலும் 2 தாரமேற்படும்.

(157) இரண்டாமிடத்தில் வெகு பாபரும், 7-ல் வெகு பாபரும் இருந்து 2, 7-மாதிபதிகளும் சுக்கிரனும், பாபரால் பார்க்கப்பட்டால் 3 தார மேற்படும்.

(158) ஓராமாதிபதிக்கு 10-ல் உச்ச புதனிருந்தாலும், 7மாதி 3-ல் சந்திரனுடனும் கூடியிருந்தாலும் வெகுதார மேற்படும்.

(159) பன்னிரண்டாமாதிபதி 2-மாதிபதி இருவரும் 3-ல் இருந்து குருவால் பார்க்கப்பட்டாலும், 9-மாதியால் பார்க்கப்பட்டாலும் வெகு தாரமேற்படும்.

(160) ஏழாமாதிபதி தன்னுச்சத்தில் கேந்திர கோணத்தில் 10-மாதியுடன் கூடினாலும் வெகு தார மேற்படும்.

(161) ஒன்பதாமாதிபதி 7-ல் இருந்து 7-மாதிபதி 4, 11-மாதிகளின் பார்வை யடைந்தாலும் வெகு தாரமேற்படும்.

(162) இரண்டு, 7-மிடங்களைப் பார்க்கின்றமூன்றுகிரகங்கள் கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும் 2, 7-மாதிபதிகளுடன்

டிய அல்லது இவர்களைப் பார்க்கப்பட்ட கிரகங்களின் எண் வ்வளவோ அவ்வளவு மனைவிகள் ஏற்படுவார்கள்.

(163) ஏழாமாதிபதி சூரியன், சுக்கிரன், குரு, புதனிவர்களுடன் கூடியிருந்தால் மனைவி பதிவிரதையாவாள்.

(164) ஏழாமிடத்தில் குருவும் சந்திரனும் கூடியிருந்தால் மனைவி பதிவிரதையாவாள்.

(165) ஏழாமாதிபதி 1-4-7-10-ல், சுபாம்சத்தில் இருந்து சுப உச்சக் கிரகத்துடன் கூடியிருந்தாலும், சுப உச்சக் கிரகத்தினால் பார்க்கப்பட்டாலும், பாபரால் பார்க்கப்படாமலிருந்தால் ஜாதகருடைய மனைவி பதிவிரதையே யாவாள்.

(166) ஒன்பதாமாதிபதியும் 7-மாதிபதியும் சூரியன் முதலிய வெகு பாபருடன் கூடினாலும் வெகு பாபர்களால் பார்க்கப்பட்டாலும் மனைவி பாப விபசாரம் செய்வாள்.

(167) ஏழாமாதிபதி, புதன் இவர்கள் பாபருடன் கூடினாலும் நீச்ச, சத்துருக்கிரங்களுடன் கூடினாலும், அப்படிக் கூடி 6-8-12-மிடங்களிலிருந்தாலும், பாபர் மத்தியிலிருந்தாலும் மனைவி கணவனை நாசம் செய்வாள், அல்லது அவள் கொலை செய்பவள், குலத்தைக் கெடுப்பவள், புருஷன் பேச்சை மதியாமல் புருஷனை அவமதித்து, துஷ்ட நடை உள்ளவளாவள்.

(168) ஏழாமாதிபதி சனி உச்சத்தில் ராகு கேதுக்களுடன் கூடினாலும், குளிகனுடன் கூடினாலும், குளிகனால் பார்க்கப்பட்டாலும், மனைவி விஷத்தைக் கொடுப்பாள். துஷ்டையும், துர் நடவடிக்கையுள்ளவளுமாவள்.

(169) ஓராமாதிபதியும் 7-மாதிபதியும் கூடினால் பாலியத்தில் விவாகம் நடக்கும். உச்சத்தில் ஒன்றிலாவது, 2-லாவது, 7-லாவது உச்சக்கிரகம், சுக்கிரன், குரு, பூர்ண சந்திரன் இவர்களிருந்து பாபருடன் கூடாமலும் பாபர்களால் பார்க்கப்படாமலு மிருந்தாலும், அந்த ஸ்தானாதிபதி அதி சுபனானாலும் பாலியத்திலேயே விவாகம் நடக்கும்.

(170) சுக்கிரன் உச்ச, சுவ க்ஷேத்திர, மித்திர ராசிகளில் அல்லது 1, 4, 7, 10, 5, 9 முதலிய ஸ்தானங்களில் இருந்தால் 7,2 9, இந்த ஸ்தானங்களில் பாபர் சுபர் இவர்களின் பார்வை இல்லா

திருந்தாலும் லக்கினத்திற்கு அல்லது சுக்கிரனுக்கு அல்லது 7 மாதிக்கு பூர்ண பலமிருந்து சக்கிர பூர்வார்த்தத்திலுமிருந்து அவர்களின் தெசை அந்தர தெசைகள் இவைகள் வந்தால் அப்போது குரு சுக்கிரர்களின் மத்தியில் எவன் பலமுடையவனு யிருக்கின்றானோ அல்லது, 2-7-ல் இருப்பவனுடைய அல்லது 2-7-க் குடையவர்களின் தெசை யல்லது புக்தியில் 12-வயதின் மத்தியில் விவாகம் நடக்கும்.

(171) லக்கினதிபதியின் ஸ்புடமும் தன் நக்ஷத்திரத்திற்கு 7-வது நக்ஷத்திர தெசாதிபதி ஸ்புடமும் ஆக 2-ஐயும் சேர்த்துக் கூட்டிவந்த (ராசிகள் 12-க்கு மேற்பட்டால் ராசி 12-யைக் கழித்து மீதியாகவந்த) ராசித் திரிகோணத்தில் குரு வரும்போது விவாகம் நடக்கும்.

(172) ஏழாமிடத்தில் இருக்கின்ற அல்லது 7-மிடத்தைப் பார்க்கின்ற கிரகங்களின் தெசை வந்தபோது 7-மாதிபதி நின்ற ராசியை லக்கினதிபதியுடன் குரு கோச்சாரத்தில் அடையும் போது களத்திர லாபமுண்டாகும்.

(173) ஏழாமாதிபதி இருக்கும் நவாம்சங்களின் க்ஷேத்திரத் தைக் குரு சுக்கிர சந்திரர் எப்பொழுது அடைகிறார்களோ அப் பொழுது விவாகம் நடக்கும்.

(174) ஏழுக்குடையவன் இருக்கும் அம்சத்தின் அதிபதி சுக் கிரன், சந்திரன் இவர்களுடைய தெசையில் அல்லது இவர்களில் மிக்க பலமுடையவர் தெசையில், 7-மாதிபதியுடன் கூடியவரு டைய அம்ச ராசித் திரிகோணத்தில் குரு வரும்போது விவாகம் நடக்கும், மேற்படி குரு வரும் ராசி மேற்படி கிரகத்தின் 22-வது திரேஷ்காண மாகவேண்டும்.

(175) ஏழாமிடத்தில் இந்திர தனுசிருந்தால் ஜாதகர் குரூர செய்கையும், குரூரத் தன்மையும் அடைந்து பரதார பராயணம் உள்ளவனுமாவார்.

(176) ஏழாமிடத்தில் உப கேதுவிருந்தால் ஜாதகர் ரத்த பீடையும், மாறுபாடான மார்க்க சஞ்சாரமும், காமமும், போக மும், வேசிகளிடம் நேசமும் உடையவராவர்.

(177) ஏழாமிடத்தில் குளிகனிருந்தால் ஜாதகர் ஸ்திரீகளால் செய்யப்பட்ட பாபமுமுடைய ஜாரனுகவும், மெல்லிய அங்கங்க

ஞுடையவராகவும், விட்டு விட்டுக் கொள்ளும் நேசமும், ஸ்திரீ தனத்தால் ஜீவித்தலும் உடையவராகவுமாவார்.

(178) ஏழாமிடத்தில் பிராணபதனிருந்தால் துர்வழியில் பூஜீக்கப்படுவார். கெட்ட புத்தியுடையவர், ரோகத்தினல் தபிக்கப்பட்ட அங்கங்களுமுடையவர்.

(179) குரு, சந்திரனிவர்கள் காரக அம்சத்தில் 7-ல் இருந்தால் ஜாதகருடைய மனைவி வெகு சுந்தரியாய் அமைவாள், பதி பக்தியே மேன்மையாகக் கருதுபவள் ஆவாள்.

(180) மேற்படி அம்சத்தில் 7-ல் ராகுவிருந்தால் பயந்த, மங்கின, கலங்கிய, உருகிய, நினைவு தடுமாறுகிற, துயருற்ற மனைவி நேருவாள், ஜாதகருக்குமிப் பலன்கள் பொருந்தும்.

(181) சனி மேற்படி அம்சத்தில் 7-ல் இருந்தால் ரோகியும், தபஸ்வியும் ஆன ஸ்திரீ வாய்ப்பாள், அல்லது தன்னிலும் மூத்தவள் மனைவியாக வாய்ப்பாள்.

(182) செவ்வாய் ஷை அம்சத்தில் 7-ல் இருந்தால் மனைவி அங்கக் குறைவுடையவளாவாள். புருஷ லக்ஷணங்களை யுடையவளாவாள்.

(183) சூரியன் மேற்படி அம்சத்தில் 7-ல் இருந்தால் மனைவி தன் குலத்திலேயே ரகசியமாகப் பிறர் வீடு சென்று சோரம் போவாள்.

(184) புதன் மேற்படி அம்சத்தில் 7-ல் இருந்தால் கலாவதியான மனைவி வாய்ப்பாள்.

(185) சுக்கிரன் 7-ம் ஸ்தானத்தில் இருந்தால் மனைவி சகல குணங்களும், ஆடையாபரணுதிகளும், வாகன பூஷணுதிகளுமடைந்து சகல சர்வ சம்பத்து முடையவளாயிருப்பாள்.

(186) ஒராமாதி 7-ல் இருந்தால் ஜாதகருடைய மனைவி ஜீவித்திராள் அல்லது ஜீவித்திருந்தால் சுகமிராது, விரக்தியுடையவராகவாவது, வெளிதேச சஞ்சாரியாகவாவது, அரசனுக்குச் சமமாகவாவது அல்லது தரித்திரனுகவாவது ஆவார்.

(187) இரண்டாமாதிபதி 7-ல் இருந்தால் ஜாதகர் வைத்தியம் செய்து ஜீவனமும், பிறர் மனைவிலயச் சேருபவருமாவார்.

அவர் மனைவி வேசித்தன முள்ளவளும் அல்லது அவர் தாய் விப்சார தோஷமுள்ளவளுமாவாள்.

(189) மூன்றுமாதிபதி 7-ல் இருந்தால் ஜாதகர் திருடராக வாவது, பர ஸ்திரீ ரதனுகவாவது ஆவார், பாலியத்தில் தினந் தினம் கஷ்டமுடையவர்.

(190) நான்காமாதி 7-ல் இருந்தால் வெகு வித்தையுடைய வராகி பிதுரார்ஜிதத்தை தியாகம் செய்து சபையில் ஊமைபோ லிருப்பார். 4, 7-மாதிகள் கூடினுமிப்படியே யாகும்.

(191) ஐந்தாமாதிபதி 7-ல் இருந்தால் மானியாகியும், சர்வ தர்மங்களும் தெரிந்தும், செய்தும், உயர்ந்த சிரேஷ்ட அங்கங்க ளும், குரு பக்தியும் உடையவராவார்.

(192) ஆறுமாதிபதி 7-ல் இருந்தால் கீர்த்திமானுவார்.

(193) ஏழாமாதிபதி 7-ல் இருந்தால் ஜாதகர் பிறர் மனைவி யைச் சுற்றுவார். துஷ்ட சுபாவமும், நல்லறிவும், தைரியமும், வாயு பீடையும் உண்டாகும்.

(194) எட்டாமாதிபதி 7-ல் இருந்தால் இரு மனைவியறேர் படுவார்கள்.

(195) ஒன்பதாமாதிபதி 7-ல் இருந்தால் மனைவிக்கு நல்ல குணமும் கீர்த்தியுமுண்டாகும்.

(196) பத்தாமாதிபதி 7-ல் இருந்தால் நன்மனதும், நற்குண மும், சத்தியமும், தர்மமும், வாச்சாலகமு முண்டாகும்.

(197) பதினோராமாதிபதி 7-ல் இருந்தால் மனைவி ஜீவித்தி ராள், உதாரகுணமுண்டாகும், காமியாவார், மூர்க்கத்தன்மை யுண்டாகும்.

(198) பன்னிரண்டாமாதிபதி 7-ல் இருந்தால் மனைவி சுக முண்டாகாது. துர்ப்பல தேகமும், கபரோகமும், தனம், வித்தை யிவற்றின் குறைவும் ஏற்படும்.

4-வது அத்தியாயம்

—:(❋):—

(199) உபபத ஸ்தானத்தின் உபபதத்தில் அல்லது 2-ல், சுபர்களடைந்து அல்லது பாபர்கள் பார்த்து அல்லது மேற்படி

ஸ்தானம் பாப ராசிகளாகி பாபர்கள் பார்த்து பாபர் கூடி யல்லது பாபர்களிருந்தால் சன்னியாச யோகத்தினல் ஸ்திரீ நாசமுண்டாகும்.

(200) சூரியன் பாபராஞலும் மேற்படி ஸ்தானம் சுயக்ஷேத்திரமாகி அங்கிருப்பின் முன் சொல்லிய பலன்கள் மாறி தார சுகமுண்டாகும், இவற்றிலேயே மேஷாதி பாப ராசிகளில் சிம்மமாஞலும் சூரியனிருந்தாலும் மற்ற பாபர்களால் தார நாச மேற்படும்.

(201) உப பதத்தில் நீச்சக் கிரகம் நீச்சாம்சத்தில் நீச்ச சம்பந்தமடைந்திருந்தால் தார நாசமுண்டாகும்.

(202) மேற்படி உபபதத்தில் உச்சாம்சத்தில், உச்ச சம்பந்த, உச்சத்தில் உச்ச திருஷ்டியு மடைந்திருந்தால் வெகு தாரங்கள் சுப ரூப லக்ஷணம்பொருந்தி வாய்ப்பார்கள்.

(203) உப பதத்தில் அல்லது அதற்கிரண்டாமிடம் அல்லது லக்கினத்திற்கிரண்டாமிடம் இவற்றில் 2-மாதிபதி வேறு கிரகத்துடன் கூடியிருந்தால் தனக்குப் பின் அல்லாமல் முன்பே மனைவி மரிப்பாள்.

(204) உபபதத்திற் கிரண்டில் சுக்கிரன் அல்லது காரகன் இரட்டை ராசியில் அல்லது மேஷ ராசியில் அல்லது மிதுனத்தில் இருந்தாலும் வெகு மனைவிய ரேற்படுவார்கள்.

(205) விருஷபத்திலாவது துலாத்திலாவது குருவும் தார காரகனும் இருந்தாலும் வேறு ராசிகளிலிருந்தாலும் தாரம் முன் இறத்தலால் தாரமின்றி பின் ஆயுளுடையவனவர்.

(206) தன் ராசியிலல்லது 2-மிடத்தில் இருக்கும் கிரகம் நித்திய காரகனும் தார காரகனுமாகின் ஜாதகர் மனைவிக்குப் பின் மரிப்பார். சில கிரந்தங்களில் மனைவியின்றி மரிப்பாரென சொல்லி யிருக்கின்றது.

(207) உபபதாதிபதி உச்சத்தில் நித்தியகாரக, தார காரகருடன் கூடினல் உத்தம குலப்பெண்ணை மணப்பார். இவர்கள் நீச்சத்திலிருந்தால் விபரீத பலனுண்டாகும், இவர்கள் சுபர் சம்பந்த மடைந்தாலும் அல்லது சுபரால் பார்க்கப்பட்டாலும் உபபதத்தில் தார காரகனிருந்தால் வெகு சௌந்தரியானவள் மனைவியாக வாய்ப்பாள், வாய்த்து வெகு பவ்வியப்பட்டிருப்பவ

ளாவாள், இவர்கள் சனி ராகுவுடன் கூடினாலும் உபபதத்தில் சனியிருந்தாலும் காரகன் கூடியிருந்தாலும் சனி ராகுவுடன் கூடினாலும் அல்லது இவர்களால் பார்க்கப்பட்டாலும் புருஷன் மனைவி இருவரும் விவாதம் செய்வார்கள். அல்லது ஜாதகருடைய மனைவி மரித்து விடுவாள், இவ்விதம் நடக்காவிட்டால் ஜாதகர் அவளை விலக்கிவிடுவார்.

(208) உபபதத்தில் சுக்கிரன் கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகருடைய மனைவி ரத்தப் பெருக்குடைய ரோகவதியாவாள்.

(209) உபபதத்தில் புதன் கேது இருவரும் கூடியிருந்தால் ஜாதகருடைய மனைவி அஸ்தி ஸ்ராவநோயை யடைவாள்.

(210) உபபதத்தில் ரவி ராகு கூடியிருப்பினும் சனி கூடியிருப்பினும் யோகமுண்டாகும். ஆயினும் அஸ்தி ஜுரத்தினால் ஜாதகருடைய மனைவி இரவும் பகலும் பீடிக்கப்பட்டு வருந்துவாள்.

(211) உபபதத்தில் புதனும் கேதுவும் கூடினால் யோக சம்மந்தமும், ஜாதகருடைய மனைவி ஸ்தூல சரீரமும் அடைவாள்.

(212) உபபதத்தில் புத க்ஷேத்திரத்தில் அல்லது செவ்வாயின் க்ஷேத்திரத்தில் சனி, செவ்வாயிவர்கள் இருந்தால் பித்த ரோகத்தினால் பிராண பீடையானது மனைவிக்குண்டாகும்.

(213) செவ்வாயும், புதனும் கூடி உப பதமல்லாத வேறு க்ஷேத்திரத்தில் இருந்து சனியுடனும் கூடியிருந்தாலும் ஜாதகன் மனைவி காதில் நோயுடையவளாவாள். அல்லது நேத்திர ரோகமடைவாள்.

(214) உபபதத்தில் செவ்வாயும் புதனும் கூடினாலும் உபபதமல்லாத வேறு க்ஷேத்திரத்தில் கூடினாலும் குரு ராகு இவர்களுடன் கூடினாலும் பல்வலியுள்ள மனைவி யேற்படுவாள்.

(215) உபபதத்தில் கன்னியில், செவ்வாயும், புதனும் இருந்தாலும் அல்லது வேறு ராசிகளிலிருந்தாலும் சனி, ராகுவுடன் கூடினாலும் ஜாதகருடைய மனைவி ஊன அங்கமுடையவள், இவர்களைச் சுபர்கள் பார்த்தால் இப்பலன் நேராது.

(216) சனி, சந்திர, சுக்கிரர், சப்தமாம்சத்தில் கூடி இருந்தால் திரிக யோகத்தினால் ஜாதகர் புத்திரஹீனராகி விடுவார்.

(217) ஆறில் செவ்வாயும், 7-ல் ராகுவும், 8-ல் சனியுமிருந்தால் எத்தனை மனைவிகளை மணந்தாலும் எல்லா மனைவியு நாசமே ஆகும்.

(218) பத்தாமாதிபதி 7-லிருந்து சனி செவ்வாயிவர்களுடன் கூடினாலும் 7-க் குடையவன் பாபருடன் கூடினாலும் உண்பதும் மைதுனமும் தான் எப்பொழுதும் நினைவாகும்.

(219) ஏழில் சூரியனிருந்தால் ஜாதகர் மனைவியிருந்தும் மறு மாதை ரகசியத்தில் சேர்வார்; விசேஷ பொருள் தேடுவார்.

வேறு

(220) ஏழில் சூரியனிருந்து சனியால் பார்க்கப்பட்டால் வெகு மனைவியரும், நூறு குற்றமும் உண்டாகும், கவலை வாய்க்கும், பிதுர் சொத்து உண்டு, படர்ந்த வெகு போகி, 3 பாஷை கற்பான், ஸ்திரீயின் சொத்து சேரும், மனைவி சுக மற்பம், பரத்தை மோகன், பூமி, பொருள் இல்லமிவை வலியச்சேரும், பொருள் கொடுத்த வகையில் துக்கம் நேரும், கெடுதியின்றி வாழ்வான், சதிபதிக்குள் க்ஷணத்தில் சிலுகு உண்டாகும், தகப்பனுடன் துவேஷ முண்டாகும்.

(221) ஏழில் சந்திரன் இருந்தால் சொல்தவரான், தீரன், ஸ்திரீகள் வலியச்சேர்வார், பிடிவாதக்காரன், நிமிஷகோபி, வலுவில் தொழில் கிடைக்கும் உலகில் மேலான பொருள் தேடுவான், உலகில் பழியின்றி வாழ்வான், பலவித வித்தைகளில் தேர்ச்சியுண்டாம், கெம்பீரம், உதாரவாக்கு, பெரும்புகழ் முதலியபுடைத்த ஸ்ரீமான், சங்கீதமறிவான், எடுத்த காரிய சாதனையுடையவன், ஆயுள் வரை புகழுண்டாம்.

(222) ஏழில் செவ்வாயிருந்தால் விதவைகளைச் சேர்வான், கபடுடையோன், நயமானவாக்குண்டாம், விசேஷ பூமி சேர்ப்பான், ஆள், அடிமை, பணி, மணிகள் உண்டாம், எடுத்த காரியத்தை ஒரே பிடியாய்ச் சாதிப்பான், பெண்டீர் சொற்கேழ்ப்பவன், எத்தொழிலும் செய்யும் சக்தியுடையவன், புத்திர வாஞ்சை யுடையவன், விஷ்ணுபக்தியுடையவன், சோர்விலாதவன், முறைதவரி சம்போகம் செய்வான், பகலில் புணர்ச்சி செய்வான்.

(223) ஏழாமிடத்தில் புதனிருந்தால் மனைவியால் சொத்துண்டாகும். பிராம்மணர்களின் நேயன், பல ஸ்திரீகள் வலியச் சேர்வர். சங்கீதம் அறிவான். தர்மம் செய்வான், ஸ்திரீ ரோகமுடையவன். பின்னமின்றிய வாழ்க்கையுண்டு. வீம்பு பேசுவான், ஸ்திரீகளால் இச்சையை பூர்த்தி செய்துகொள்வன். வீடு பூமி முதலியன படைத்து வாழ்வான். பொருளுண்டு கெம்பீரன், உதாரன், தீமை செய்யான். புராணக்கேள்வியுள்ளான். சரஸ்வதியின் அருளுடையவன்.

(224) ஏழாமிடத்தில் சுக்கிரனிருந்தால் மனைவிக்கு மத்திய கண்டம் உண்டு. மூன்றுதார முண்டென்று ஒரு கிரந்தங் கூறுகின்றது; மேற்படி சுக்கிரனைச் சுபர் நோக்கின் ஒரு தாரமே நிலையாகும். பாபர் பார்த்தால் தாரமிருந்து அந்தியத்தில் மரித்துவிடும், பல மாதரை வலியப்புணர்வான், ஆளடிமை பூஷணாதிகளுண்டாகும், ஸ்திரீயின் பொருள் வரும், பிறருடைய மனைவியை நேசிப்பான், கண்டபடி பொருள் வரும், மெத்த விரயம் செய்வான், வெகு காமியாவன், பொருள் கொடுத்து அழகிய மங்கை வலியவந்து சேர்வாள், சொந்த மனைவியை வெருப்பான், கடுமையாகப் பேசி நயமாயிருப்பான்.

(225) ஏழில் ராகுவிருந்தால் மனைவிக்குக் கண்டம் உண்டாகும், தீமைகள் நேரும், அபமிருத்தால் 2 தாரமாகும். பூமிகள் சேர்ப்பான், கோபி, ஸ்திரீகளை, மனைவியை நம்பான், தெய்வ வணக்கமில்லாதவன், மனவழுத்தன், மனைவி சொத்துண்டாகும், கபடன், புலால் பிரியன், ஒருவரையும் நம்பான். புத்திரர் மேல் வெகு வாஞ்சையுடையோன், எடுத்த காரிய சாதனை யுடையவன். அற்ப புத்தியுடையவனவன். மூர்க்கன்.

(226) ஏழில் கேது விருந்தால் மனைவி ரோகியாவள், வீம்பாய் கொடுமையாய்ப் பேசுபவன். புகழ் உடையோன், விசேஷ புத்திரவாஞ்சை யுள்ளான், ஸ்திரீயால் சொத்து வரும், துர்த்தையான மனைவி யேற்படுவாள்.

(வேறு)

(227) ஏழுக்குடையவனும் சுக்கிரனும் பாபருடன் சேராதிருந்தால் ஏகதாரமே யுண்டாகும்.

(228) ஏழாமாதிபதி பாபருடன் கூடியிருந்து, 2, 7-லும் பாபரிருந்தாலும், சுக்கிரன் நீச்சத்தில் இருந்தாலும், நீச்சத்தில் 11-ல் இருந்தாலும் 7-மாதி 6-ல் இருந்தாலும் 12-லிருந்தாலும் இருதார யோகம் உண்டு.

(229) ஒன்றில் அல்லது 7-ல் பாபரிருந்தாலும் மறுதாரமுண்டாகும்.

(230) இரண்டு-4-7-8-12-ல் குஜ சுக்கிரரிருந்து சுக்கிரன் பலஹீனனுகில் இரு தார யோகமுண்டாகும்.

(231) இரண்டு-4-7-8-12-ல் குஜனிருந்து குஜனுக்கிரண்டில் குருவிருந்தாலும் குருவுக்கிரண்டில் குஜனிருந்தாலும் காலங் கடந்து விவாகம் நடக்கும்.

(232) சனியும், ர்ரகுவும் 2-ல் அல்லது 7-ல் இருந்தால் 2 தார மேற்படும். ஒரு கிரந்தத்தில் சனிக்கு 2-7-ல் ராகு இருந்தாலும் 2 தாரமென்று தெரிகிறது.

(233) ஏழில் சனி, சுக்கிரரிருந்தால் ஒரே ஸ்திரீயுடன் அதாவது தன் மனைவியுடன் மட்டும் நேசிப்பான்.

(234) ஏழு-2-10-க் குடையவர்கள் கூடி 4-ல் இருந்தால் பர ஸ்திரீ ரதனுவான்.

(வேறு)

(235) ஏழாமாதி கூடியிருக்கும் அம்சாதிபதியும், ஏழாமாதிபதியிருக்கும் அம்சாதிபதியும், சுபருடன் கூடிப் பாராவதாம்சாதி அம்சங்களிலிருந்தால் 100 ஸ்திரீகளுடன் கூடியவனுவான்.

(236) இரண்டாம் பாகம் இருக்கும் ராசிநாதன் ஐராவதாம்சத்தில் அல்லது கோபுராம்சத்தில் இருந்தாலும், குருவின் அம்சத்திலிருந்தாலும், சுபர் மத்தியில் கேந்திரத்தி லிருந்தாலும், 200 ஸ்திரீகளுடன் கூடியவனுவான்.

(வேறு)

(237) எட்டாம் ராசித் திரிகோணத்தில் அல்லது சுக்கிரன் 7-ல் அல்லது தன் உச்சத்திலிருந்து பாபரால் பார்க்கப்பட்டாலும் சனியின் அம்சத்திலிருந்தாலும் ராஜ ஸ்திரீ சம்போகம் நேரிடும்.

(238) சுக்கிரன் சந்திரனுடைய அம்சத்தில் 10-ல் அல்லது அதன் திரிகோண ராசிகளிலிருந்தால் ராஜ ஸ்திரீ மூலம் போகமும், சம்போக சுகமும், ஜீவனமும் நேரிடும்.

(239) ஏழாம் ராசித்திரிகோணத்தில் சுக்கிரன் இருந்து பாபரால் பார்க்கப்பட்டால் விபசார ஸ்திரீகளின் அன்படைந்து முன்னால் தாயாதி பாகத்தில் சத்துருத் தன்மையை அடைய நேரிடும்.

(240) ஏழாமிடத்தில் பாபரிருந்து 7-மாதிபதியும் பாபருடன் கூடினால் ஜாதகன் மனைவி வயிற்றில் வியாதியையடைந்து கர்ப்பப்பையில் புழுக்களுடையவளாவாள், அல்லது ஜாதகன் மனைவி கெர்ப்ப காலத்தில் சங்கா பீடையடைவாள்.

(241) ஒன்பதாமாதிபதி 7-ல் இருந்து ஏழாமாதிபதி குருவின் வீட்டில் இருந்து 10-ல் பாபரிருந்தால் அங்கஹீனமான ஸ்திரீயின் கணவனுவன், இதற்கே குரு 4-ல் இருந்தாலும், 5-ல் இருந்தாலும் இரண்டாந்தார மில்லாதவனுகி அற்ப புத்திரரையடைவான்.

(242) ஏழாமிடத்தில் சனியும், ராகுவும் இருந்தால் 3 தார மேற்படும், இந்த ஸ்தானத்தை, இவர்களைக் குரு பார்த்தால் தார சுகமுண்டாகும்.

(243) ஏழில் பாபரிருந்து அல்லது சந்திரனிருந்து ஒன்பதிலும் பாபரிருந்து பிறந்தால் மூன்று தார மேற்படும், இந்தச் சந்திரன் அர்க்க உத்வாக பாகத்தில் இருந்தால் எருக்கஞ்செடியை மணந்து மூன்று விவாகச் சங்கியையடைவான்.

(244) ஏழாம் ஆருடத்தில் அல்லது 2-மிடத்தில் அல்லது 7-மிடத்தில் பாபரிருந்தாலும், 9-மிடத்தில் பாபரிருந்தாலும் தார நாச மேற்படும்.

(245) இரண்டிலாவது, 7-லாவது பாபரிருந்து அல்லது பாபர் பார்த்து 2-7-மாதிபதிகள் பலஹீனராகில் இரண்டாந் தார மேற்படும்.

(246) ஏழுக்குடையவன் சத்துரு நீச ஸ்தானங்களிலிருந்தாலும், மூடத்திலிருந்தாலும் பாபரால் பார்க்கப்பட்டாலும் 7-மிடத்தில் பாபரிருந்தாலும் தார நாசமுண்டாகும்.

(247) சந்திரனுக்கேழில் செவ்வாய் ராகுவோடு ரிஷபத்தில் கூடியிருந்து மேற்படி செவ்வாய் சிம்ம நவாம்சத்திலுமிருந்தால் மூன்ருந் தெசையில் தார நாசமடைந்து இரண்டாந் தாரத்திஞல் சுகியாவன். வேறு கிரந்தத்தில் 4-ந் தெசையில் விவாகம் நடக்கு மென்கின்றனர். (சிம்ம லக்கினம்)

(248) ஏழாமிடத்தில் சனி, கேதுவுடன் கூடியிருந்து 7-மாதிபதி (சுக்கிரன் மேஷத்தில்) பாபாம்சத்திலிருந்தால் இருதார மேற்படும். (விருச்சிக லக்கினம்.)

(249) ஏழாமாதி லக்ஷ்மீ ஷஷ்டியம்சத்திலிருந்தால் தன் தேசத்திலேயே பிதா இல்லாத பெண் மனைவியாவாள்.

(250) ஏழில் சுக்கிரனும் 9-ல் ராகுவுமிருந்தால் 3 தாரமுண்டாம். 2 தாரத்தினிடமும் வெகு புத்திரருண்டாவார்.

(251) சுக்கிரன் நீச்சத்தில் 7-ல் சனியின் அம்சத்திலிருந்தால் ஜாதகர் ஜார ஸ்திரீ சுகியாவர்.

(252) ஏழில் சுக்கிரன் செவ்வாய் சனியிவர்களுடைய அம்சத்திலிருந்து ராகுவுடன் கூடினூலும் ராகுவால் பார்க்கப்பட்டாலும் தார வம்சம் அரிஷ்டமடையும் (லக்கினம் கன்னி)

(253) ஏழில் சுக்கிரன் நீச்சத்தில் சனியின் அம்சத்தில் இருந்தால் ரகசியத்தில் மனைவி சோரம் போவாள். வேறு கிரந்தத்தில் இதற்கே சகோதரியுடன் கூடி சோரம் போவாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. (லக்கினம் கன்னி)

(254) ஐந்தில் செவ்வாயும் 6-ல் சனியுமிருந்தாலும் 2-மிடத்தின் திரிகோணத்தி லிருந்தாலும் 6-மிடத்தின் திரிகோணத்தில் சனி யிருந்தாலும் மனைவி பிரசவத்தில் மரிப்பாள். (மீன லக்கினம்)

(255) ரேவதி 4-ல் ஜென்ம சந்திரனிருந்து பிறந்தவனுக்கு ஜென்ம லக்கினதிபதியாகிய குரு 7-ல் இருந்தால் மாமனர் தனிகனுகி மாமனுரால் விவாகமான பிறகு தனமடைவான், மாமனுர் இரு தார யோகமுடையவன். (மீன லக்கினம்)

(256) ஏழாமாதிபதி இருக்கப்பட்ட ராசிநாதன் நீச்சத்திலிருந்தால் முதல் தார நாசம் உண்டாகி 2-ந் தார மேற்படும்.

(257) பன்னிரண்டில் பாபரிருவரிருந்தாலும் தாரசுகமின்றி 2 தார மேற்படும். (மேஷம் லக்கினம்)

(258) ஏழாமாதிபதி விருச்சிகாம்சத்தில் இருந்தால் வேசி ஸ்திரீ சேர்க்கையும், இருதாரமும் அடைவான். (மேஷ லக்கினம்)

(259) ஐந்தில் குருவும் 11-ல் 3 கிரகமும் இருந்தால் ஜாதகருடைய மூத்தவனுக்கிரண்டு தாரம் உண்டு.

(260) பத்தில் சுக்கிரன் கேதுவுடன் (கடகத்தில்) விருச்சிகாம்சத்தில் இருந்தால் ராஜ பத்தினியைச் சேர்வான். உள்ளுக்குள் பர ஸ்திரீப் பிரியன்.

(261) இரண்டில் சனி 4-ல் சுக்கிரன் மகராம்சத்திலிருந்து சூரியனால் பார்க்கப்பட்டால் 7-மாதிபத்திய தோஷத்தினால் பிரதம தார நாசமுண்டாகும்.

(262) சந்திரன் நின்ற அம்சாதிபதி தெசையில் அல்லது எட்டாமாதிபதியின் அந்திரத்திலாவது தார பீடையல்லது மனஸ்தாப முண்டாகும்.

(263) ஆறுமிடத்தில் 2 பாபரிருந்தால் இருதார மேற்படும் அல்லது 3 தாரமும் நேரிடும், இந்தக் கிரக யோகத்திற்கே 12-ல் சனி யிருந்தாலும் பார்த்தாலும் இப்பலன் தப்பாமல் நேரிடும்.

(264) அசுவனி 2-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகி சிம்ம லக்கினத்தில் கன்னியா நவாம்சமாக ஜனனமடைந்து குரு, புத, சூரிய, சுக்கிரர் 11-ல் இருந்தால் தாசீ லோலனாகி தன் மனைவியிடமும் அன்புடையவனாகி, ஆயினும் தாசி சொல்லையே பிரதானமாய்க்கொள்வன், தாசி வீட்டிலேயே வாசம் செய்வான்.

(265) ஏழாமாதிபதி 9-ல் 9-மாதிபதியுடன் கூடில் 2 தாரம் வாய்க்கும், சிம்ம லக்கினமானால் இப்பலன் தவறாது. இவர்கள் குருவால் பார்க்கப்பட்டால் மனைவிக்குப் பீடையேற்படும், இந்தக் கிரகயோகத்திற்கே சந்திரன் நீச்சத்திலிருந்து ராகு, கேதுக்களுடன் கூடினாலும், பார்க்கப்பட்டாலும் தாசி சேர்க்கைக்காக தன் வீட்டிலேயே தனத்தைத் திருடுவான்.

(266) ஸ்திர ராசியில் சந்திரனிருந்து, சனி, செவ்வாயிவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மேற்சொல்லிய பலனை உடையவனாவான். தரித்திரன் வீட்டில் விவாகம் உண்டு.

(267) ஜென்ம லக்கினம் சிம்மமும் விருச்சிக சந்திரனு மாகி 7, 9-மாதிபதிகள் 9-ல் இருந்து 8-மாதிபதியால் பார்க்கப் பட்டால் தரித்திரன் வீட்டில் விவாகமடைவான், 2 தாரமுமடை வான்.

(268) ஏழாமாதிபதி செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் 9-மாதிபதி 7-ல் உச்சனுகியிருந்து 3-ல் கேதுவிருந்தாலும் வேசி ஸ்திரீ சேர்க்கை நேரிடும்.

(269) ஏழாமாதிபதி 5-ல் சனியுடன் கூடி 10-ல் செவ்வாயு மிருந்தால் சன்னியாசியுடன் சோரம் போகும் மனைவி வாய்ப் பாள், வேறு கிரந்தத்தில் மூத்தவன் மனைவி இவ்வாறு சோரம் போவாளென்று சொல்லப்பட்டிருக்கிறது.

(270) ஏழாமாதிபதியும், சுக்கிரனும் நீச்சாம்சத்தில் இருந் தால் தார வம்சம் க்ஷயமடையும்.

(271) மூன்றுமிடம் குருவால் பார்க்கப்பட்டால் பெண் கொடுக்கும் மாமனர் 3 தாரமடைவார் அல்லது 3-ல் ராகுவிருந்து சுக்கிரனின் அம்சத்தை யடைந்தாலும் மேற்படி பலனே. (இது லக்கினம் கடகம் ஆகும்).

5-வது அத்தியாயம்.

—:※:—

(272) லக்கினம் கடகமாகிச் செவ்வாய் ரிஷபத்தில் உச்ச நவாம்சத்தில் இருந்து மிதுனத்தில் சனியிருந்தால் ஒரு தார மாகும்.

(273) ஜென்ம லக்கினம் மகரம் அல்லது விருச்சிகமாகி மக ரத்திற்கு 2-ல், விருச்சிகத்திற்கு நாலிலும் குருவிருந்தால் 2 தாரம் நல்ல களத்திரமாக வாய்க்கும், இந்தக் குரு பூரட்டாதி ஒராவது பாதாத்தில் இருக்கவேண்டும்.

(274) ஜென்ம லக்கினம் மகரமாகிச் சுக்கிரன் கேதுவுடன் கூடி 6-ல் இருந்தால் பிதாமகன் விதவை ஸ்திரீயைச் சேர்ந்தவ னுவன். ஆயுத பயமுடையவனுவன்.

(275) சுக்கிரன் கேதுவுடன் 6-ல் அல்லது 8-ல் கூடி மிதுன ராசியிலிருந்தால் எப்போதும் மைத்துனப் பிரியனுவன், தன்

ஸ்திரீக்கும் தோஷம் கொஞ்சமுண்டாகும். அபகீர்த்தியுள்ளவளை சேர்வான்.

(276) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ரிஷபத்தில் சிம்மாம் சத்தில் புதனும் மீனத்தில் கும்பாம்சத்தில் சுக்கிரனும் இருந்தால் ஜாதகர் ஜென்ம தேசத்திலேயே விவாகமடைவார்.

(277) ஜென்ம லக்கினம் தனுசாகி மகராம்சத்தில் கும்ப சனி யும், மீனத்தில் கும்பாம்சத்தில் சுக்கிரனுமிருந்தால் விவாகத்தடை ஏற்படும்.

(278) எந்த லக்கினமானாலும் எந்த நாடியம்சமானாலும் 3-ல் சனி யிருந்தால் விவாகத் தடை நேரிடும்.

(279) ஏழாமிடத்தில் பாபரிருந்தால் தாரவம்சம் நாசமாகி விடும்.

(280) தனுசு லக்கினத்தில் பிறந்தவருக்கு மேஷாம்சத்தில் ரிஷபத்தில் செவ்வாயிருந்தால் மாமனார் 2 தாரமடைவார். அம் மானுக்கு ஒரு தாரமே யுண்டாகும்,

(281) ஏழாமாதிபதி சனியாகி ராகுவுடனும் சந்திரனுடனும் அவர் கூடியிருந்தால் ஜாதகர் திருட்டு விபசார ஸ்திரீயை மனைவி யாகவுடைய தோஷமடைவார் அல்லது துஷ்டமனையாளையுமடை வார்.

(282) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி 7-மாதியுடன் அல்லது சந்திரனுடன் கேது கூடினல் மனைவிக்கு நேத்திர ரோகமும், எப் பொழுதும் ரோக பீடையும் அவளால் கலகமும் உண்டாகும். வேறு சிலக்கிரந்தத்தில், மனைவி திடசாலியாகியும், துர்த்தையாகி யும், கலஹக்காரியும், சண்டையிடுபவளும், மத்திமாயுளுடையவ ளாகவும் பதிவிரதையாயு மிருப்பாள் என்று சொல்லப்பட்டிருக் கிறது, விவாகமானது முதல் புருஷனுக்குத் தன வரவேற்படும்.

(283) ஜென்ம லக்கினம் மகரமாகி சனியும், செவ்வாயும்கும் பத்தில் உச்சாம்சத்திலிருந்தால் ஜாதகனுக் கிருதாரம் வாய்ப் பார்கள்.

(284) இரண்டில் சனியும் 9-ல் ராகுவுமிருந்து 7-மாதியும் பாபருடன் மீனத்தில் கூடினல் 3-ந் தெசையில் மனைவி நாசமேற் பட்டு உடனேயே மறு விவாகம் நடக்கும்.

(285) ஜென்ம லக்கினம் மீனம் ஆகிப் புதன் கன்னியிலிருந்தால் அதிபாலியத்தில் விவாகம் நடக்கும், இதற்கே மேற்படி புதனுடன் சந்திர சூரியர் கூடியிருந்தாலும் அல்லது குரு பார்த்தாலும் 2 தார மேற்படும். வேறு கிரந்தத்தில் 3 தார மேற்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

(286) ஜென்ம லக்கினம் மீனமாகி 7-மாதிபதி சனியுடன் மேஷத்தில் சேர்ந்தால் மனைவியால் தனம் சேரும்.

(287) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி 8-மாதிபதி ஒன்றில் நீசாம்சத்தில் இருந்து ராகுவுடன் கூடினுலும் ராகு பார்த்தாலும் தார நாசமுண்டாகும்.

(288) நாலில் செவ்வாயிருந்தால் குடும்ப கலஹமும், நாசமும் ஏற்படும். இது மீன ஜென்ம லக்கினத்திற் கதிகமாகும்.

(289) ஜென்ம லக்கினம் துலாமாகி 11-ல் சுக்கிரனும், சனியும் கூடினுல் 24 அல்லது 30-வது வயதில் தார நாசம் நேரிடும், 2-ந் தாரத்தினிடம் புத்திரனுண்டாகும்.

(290) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி 12-ல் தாவாக்னி சஷ்டியம்சத்தில் சனி யிருந்தால் தாரவமிசத்தில் அரிஷ்டம் நேரிடும், 2 தாரம்நேரிடும்.

(291) ஜென்ம லக்கினம் கும்பமாகி சூரியன் 9-ல் இருந்தாலும். 9-ல் 8-மாதிபதியுடன் கூடினுலும், குரு மீனத்திலிருந்து சனி செவ்வாயிவர்களால் பார்க்கப்பட்டாலும் 2 தாரமேற்படும்

(292) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி ஏழாமாதிபதி சனியாகி 2-மிடத்தில் அல்லது லக்கின பாவத்தில் இருந்து சுக்கிரன் சர ராசியிலிருந்தால் அன்னிய ஸ்திரீ போக சல்லாபத்தினுல் ஒரே தாரமடைவான்.

(293) ஜென்ம லக்கினம் துலாமாகி ஏழாமாதிபதி செவ்வாயாகி லக்கினத்தில் இருந்து 7-க்கு 9-ல் குருவிருந்தால் நல்ல மனைவி வாய்ப்பாள்.

(294) ஜென்ம லக்கினம் துலாமாகிச் செவ்வாய் லக்கினத்திலிருந்து 7-ல் குரு இருந்தாலும், 7-மிடத்தைக் குரு பார்த்தாலும், வெகு மனைவிய ரேற்படுவார்கள்,

(295) ஏழாமாதிபதி லக்கின பாவத்திலிருந்து சுக்கிரன் 11-ல் இருந்தாலும், 7-மாதி இந்திராம்சத்திலும் சுக்கிரன் கோபுராம்சத்திலுமிருந்தாலும், ஜாதகர் வெகு மனைவியர், வெகு பாக்கியமிவற்றையடைவார், ஐந்தல்லது 7 ஸ்திரீகளை மணப்பார். இந்தக் கிரக யோகத்துடன் மேற்படி சுக்கிரனும், ராகுவும் கூடியிருந்தால் இப்பலன் தவறுது.

(296) ஏழாமாதிபதி லக்கின கேந்திரத்திலிருந்து பாபாம்சத்தில் பாபராசியிலுள்ள சந்திரனுடைய கேந்திரத்தில் இருந்து 2-மிடத்தில் சனியுமிருந்தால் ஜாதகர் பற்பல ஜாதி ஸ்திரீகளையும் சேர்வார்.

(297) இரண்டாமாதிபதி லக்கினத்திலும், சனி 8-லுமிருந்து சுக்கிரன் ராகுவுடன் கூடினுல் மனைவி நாசமுண்டாகும்.

(298) மூன்றில் குருவும், ஒன்றில் செவ்வாயுமிருந்து இவர்களில் குரு 7-க்கு 9-மாதிபதியாகிச் செவ்வாய் 7-மாதிபதியாகினுல் பாலியத்தில் விவாகமுண்டு.*

* குறிப்பு :—324 ஐட்டம் முதல் குறிப்பு வரையுள்ளவைகள் துலா லக்கினத்திற்குப் பொருந்தும்.

(299) சுக்கிரன் ராகுவுடன் கூடினுல் ஸ்திரீ மூலம் கலகமுண்டாகும்.

(300) ஏழாமாதிபதி 5-லும், 11-ல் செவ்வாயின் வீட்டில் சனி, புத, சுக்கிரரும் கூடி இருந்தால் தீர்க்காயுள், தனம், 2 தாரம், கிராமாதிபத்தியம்,பாண்டித்தியம் முதலியனவும்,தியாக போகாதி குணங்களும், ஜென்மம் முதல் மரண பரியந்தம் சுகமும், வெகு மனைவியரிருந்தும் அன்னிய ஸ்திரீ சங்கமும், அதனுல் தனவருத்தம் உண்டு, மேற்படி அன்னிய ஸ்திரீ குணசாலியும், பதி பக்தியும், சாத்துவீக குணமும், வெகு பாக்கியமும், ஆச்சாரமும் வாக் விலாஸமும், பர்த்துரு விரதமும், சுபமும் உடையவள், புத்திரீ புத்திரரும் அடைவாள், மனைவிக்குச் சமானமாக யிருப்பாள்.

(301) ஏழாமாதிபதி 5-ல் இருந்து ஆந்தஸ்தானுதி 11-ல் இருந்து 7-மாதியால் 5-மாதி பார்க்கப்பட்டால் 2 தாரம் வாய்க்கும்.

(302) சுக்கிரனும், சனியும் கூடினுல் 2-ந் தார சமமாகும்.

(303) ஏழாமாதிபதி 5-ல் இருந்து 5-மாதிபதி சனியுடன் கூடினும், சனி நீச்சனுகியிருந்து அவருடன் கூடினுலும், நீச்சக் கிரகத்துடன் கூடினுலும் பார்க்கப்பட்டாலும் மூத்ததாரம் அபுத்திரவதியாவாள், மூர்க்க சுபாவமும், கோபமுமுள்ளவளாகி புருஷனுக்கு நேர் விரோதியாவாள். முன் பாபத்தினுல் மரிப்பாள், மிதுன லக்கினமாயின் சனி நீச்சாம்சத்தில் இருந்தால் துர்மரணமாக மரிப்பாள், அதாவது கிணற்றில் விழுந்தாவது விஷத்தையுண்டாவது மரிப்பாள். மேற்படி சனியுடன் பலமுள்ள சுக்கிரன் கூடியிருந்தால் மனைவிக்குச் சமமான அன்னிய ஸ்திரீயை ஜாதகர் அடைவார். 4 அல்லது 7 மனைவிகளை அடைவார்.

(304) ஏழாமாதிபதி குருவாகிச் சர (துலா) ராசியில் மிதுனம்சத்தில் இருந்து ராசியில் சுக்கிரனுடன் கூடினுலும் சுக்கிரனுல் பார்க்கப்பட்டாலும் 2-ந் தாரம் ஏற்படும். அன்னிய ஜாதியில் 2-ந் தாரம் சம தாரமேற்படும். மேற்படி ஸ்தானத்தில் புதனிருந்து பார்த்தால் வைசியஸ்திரீ சேர்க்கையும், சுக்கிரனிருந்து பார்த்தால் வேசி ஸ்திரீ சேர்க்கையும், சனியாகின் துஷ்ட ஜாதி ஸ்திரீ சேர்க்கையும் நேரிடும்.

(305) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நான்காமிடத்தில் ராகு இருந்தால் ஜாதகர் துலுக்க ஸ்திரீயைச் சேர்வார்.

(306) ஜென்ம லக்கினம் விருச்சிகமாகி சுக்கிரன் 7-மாதிபதியாகி மீனத்தில் 5-ல் இருந்து, 9-ல் ராகுவும் 10-ல் செவ்வாயுமிருந்தால் சகோதரர்களில் ஒருசகோதரன் மூன்று மனைவியர்களையடைவான். அம்மான் மனைவி துஷ்ட சரித்திரவதியாவாள்; அவளுக்குப் புத்திர சோகம், மனஸ்தாபம், பார்த்துருக்கிலேசமிவைகளுண்டாகும். இந்த கிரக யோகத்திற்கே 2-ல் சனியும், குருவுமிருந்தால் அம்மான் சன்னியாசமடைவான்.

(307) ஒன்பதில் ராகுவும் 5-ல் சுக்கிரனுமிருந்து 9-மாதிபதி 7-ல் உச்சனுகின் 3 தாரமேற்பட்டிருந்தும் பிறர் மனைவியைச்சேர்வான், தாரத்தின் சகோதரியும் துஷ்டை அல்லது விதவையாவள். அதுவுமில்லாவிடில் அம்மான் மனைவி துஷ்டையாவள் அல்லது அம்மான் புத்திரியாவதிப்படியாவாள்.

(308) பன்னிரண்டாமாதிபதி 5-ல் இருந்து 5-மாதிபதி சனியுடன் கூடி இரண்டிலிருந்தால் சூதிகா கிரகத்தில் மனைவியரிருவர்

மரிப்பார். மூன்றுந்தாரத்தினிடம் புத்திரனுண்டாவர். இந்த் விதி ஜென்ம லக்கினம் சிம்மம், விருச்சிகமானல் அதிமாகப் பொருந்தும்.

(309) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஏழாமாதிபதி கேது வுடன்கூடி 11-ல் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் மனைவி வம்சத்தில் அரிஷ்டம் நேரிடும். இந்தக் கிரகயோகத்திற்கே 5-ல் ராகு இருந்தால் மைத்துனனுக் கிருதாரமுண்டாகும். ஜாதக னுடைய மூத்த சகோதரனின் மனைவி துஷ்டையாவாள், ஜாதக ருடைய மூத்த சகோதரனுக் கிரண்டு தாரமேற்படும்.

(310) ஜென்ம லக்கினம் கடகமாகி லக்கினத்திற்கு 7-ல் சுக் கிரனும் ஒன்றில் குருவுமிருந்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டால் ஜாதகர் காமியாகி ரகசியத்தில் ஸ்திரீயால் திரவிய லாபமடைவார்.

(311) ஏழுக்குடைய சூரியன் சுய க்ஷேத்திரத்தில் அல்லது நீச்சத்திலிருந்தால் ஏழு தாரமேற்படுவாள்.

(312) ஏழாமாதிபதி சந்திரன் சுக்கிரனுடைய ராசிகளில் சுக் கிரனுடன் கூடியிருந்தால் தார சுகமுண்டாகும்.

(313) ஏழாமிடத்தில் சூரியனிருந்து ஓராமாதிபதியுடனும் கூடியிருந்தால் மறு தாரமேற்படும், 5-ல் இவர்களிருந்தாலுமிப் படியே நடக்கும்.

(314) ஒன்பதாமாதிபதி 7-ல் அல்லது ஒன்றில் இருந்து லக்கினதிபதியால் பார்க்கப்படாதிருந்தாலும் அல்லது 10-ல் இருந்தாலும் தார புத்திர சுக ஸௌக்கியங்களுண்டாகும்.

(315) ஏழாமாதிபதி 8-ல் சூரியனுடன் கூடிப் பாபருடன் பாப ராசியிலிருந்து குருவின் பார்வையு மடைந்திருப்பின் ஏழு தாரம் நேரிடும். குருவுடனிவர்கள் கூடினுலுமிப்படியே நேரிடும்.

(316) ஏழாமிடத்தில் குருவிருந்து அவர் சனியால் பார்க்கப் பட்டாலும், ராகுவுடன் கூடியிருந்தாலும், ராகுவால் பார்க்கப் பட்டாலும், எட்டு தாரமேற்படும், வேறுசிலர் இஷ்டமான தாரம் வாய்க்குமென்றெண்ணுகின்றனர்.

(317) ஏழாமாதிபதி மேஷத்தில் 8-மாதியுடன் கூடி ராகு வால் பார்க்கப்பட்டால் ஜாதகர் எதிர்த்துப் பேசும் மனைவியை யுடையவராவர்.

(318) ஏழாமாதிபதி 11-ல் இருந்து 5-மாதிபதியுடன் கூடி யும் 12-மாதிபதியின் பார்வையு மடைந்திருப்பின் களத்திரம் மோக்ஷமடையும்.

(319) ஏழு 5-மாதிபதிகள் ஒன்றில் இருந்து ராகுவாலும் பார்க்கப்பட்டால் விபசாரம் செய்யும் தாரமுடையவனுவர்.

(320) சத்துரு ராசியில் 7-ல் சூரியனிருந்து சனியுடன் கூடி னும் சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகருடைய மனைவி ர சியத்தில் காம பீடையுடையவளாவள்.

(321) ஏழில் சூரியன் நீச்சாம்சத்திலிருந்து 7-லும் பாபரிருந் தால் பற்பல தேசவாசமும், வெளி தேசமும் உண்டாகும்.

(322) ஒன்பதாமாதிபதி புதனுடன் துலாராசியில் கூடினுல் ஜாதகர் இருதாரமுடையவராவர்.

(323) ஜென்ம லக்கினங்கள் கடகம், சிம்மம் ஆகி ஏழாமாதி பதி 12-ல் இருந்து சுக்கிரன் சூரியனுடன் கூடினுலும், கேதுவுடன் கூடினுலும் 2 தாரம் நேரிடும். முதல் தாரம் 40 வயதில் நாசமா கும். உடனே மறு விவாகம் உண்டு.

(324) நீச்சத்தில் செவ்வாயும் சுக்கிரனுமிருந்து இவர்கள் உச்சாம்சத்திலிருந்தால் பாக்கிய வமிசத்தில் ரூப லக்ஷணமுள்ள வளை மணப்பான். (ரிஷப லக்கினம்)

(325) ஜென்ம லக்கினம் மிதுனமாகி சுக்கிரன் கேதுவுடன் கூடி 11-ல் இருந்து குருவும் செவ்வாயும் 9-மிடத்திலிருந்தால் மனைவியால் விரயமுண்டாகும், மனைவியாலேயே யோகமுமுண்டா கும். மனைவியால் கிலேசமுண்டாகும்.

(326) ஜென்ம லக்கினம் மிதுனமாகிச் சுக்கிரனும் பாபரு டன் கூடி சுக்கிரனுக்கேழிலும் பாபரிருந்து 7-மாதிபதியும் பாப க்ஷேத்திரத்தில் பாபருடன் கூடினுல் முன் ஜென்மத்தில் தன்னை நம்பிய ஆப்த ஸ்திரீயை ஹத்திசெய்த தோஷத்தினுல் தார சுக முண்டாகாது.

(327) ஜென்ம லக்கினம் மிதுனமாகி ஏழாமாதிபதி கேந்திரத்தில் இருந்து சுக்கிரனும் பாபருடன் கூடினால் வழி வழியாக தார லாபமும் தார கிலேசமு முண்டாகும்.

(328) ஜென்ம லக்கினம் மிதுனமாகி ஏழாமாதிபதி கேந்திரத்திலிருந்து பாபருடன் கூடியிருந்தால் வெகு தோஷங்களுண்டாகும். ஐந்து அல்லது ஏழு ஸ்திரீகளை ஜாதகர் ஒன்றின் பின் ஒன்றாக மணப்பார். ஐந்தல்லது ஆறு தாரம் இறந்துவிடும்.

(329) சுக்கிரன் கேந்திரத்தில் இருந்தால் ரூபவதியான மனைவி வாய்ப்பாள்.

(330) ஏழாமாதிபதி கேந்திரத்திலிருந்து சுக்கிரன் 5-ல் ரிஷபத்தில் வர்க்கோத்தம மடைந்தால் சாத்வீகமுள்ள மனைவி வாய்ப்பாள்.

(331) ஜென்மலக்கினம் மகரமாகி ஏழாமாதிபதி,பாபருடன் கூடி 4-ல் ரவியுடன் இருந்து, 7-ல் சனியுமிருந்தால் இருதாரமுண்டாகும். ஏழாமாதிபதி சுபக்கிரகத்துடன் கூடினாலும் சுபரால் பார்க்கப்பட்டாலும் 2-வது தாரம் நேரிடாது, தாரத்திற்கு ரோக பயமுண்டாகும். இந்தக் கிரகயோகத்திற்கே ஜென்ம லக்கினம் மகரமல்லாமல் தனுசு ஆனால் 2 தாரம் நிச்சயமாகும், அல்லது தாரதுவேஷ முண்டாகித் தார வம்சமாவது நாசமடையும், 7-ல் பாபரிருந்தாலும் சர லக்கினத்தில் பிறந்தால் 2-வது தாரம் நேரிடாது.

(332) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி 7-ல் செவ்வாயும் 7-மாதிபதி 12-ல் நீச்சக் கிரகத்துடனும் கூடினால் மறு தார மேற்படும் என்று ஒரு கிரந்தத்திலும் வேறு கிரந்தத்தில் தார மரணம் நேரிடாதென்றும், தார துவேஷம் நேரிடுமென்றும் அல்லது தார வம்சம் அரிஷ்டமுடையதாகு மென்றும் சொல்லியிருக்கின்றது.

(333) ஜென்ம லக்கினம் கன்னியாகி 7-மாதிபதி சூரியனுடன் கூடியும், சுக்கிரன் சனியால் பார்க்கப்பட்டும், 3-ல் ராகுவுமிருந்தால் 2 தாரமுண்டாகும். முதல் மனைவி சந்தானமின்றிக் கணவனுடன் துவேஷமுமடைவாள், இரண்டாந்தாரம் சற்கீர்த்தியும் புத்திரீ புத்திரருமடைவாள்.

(334) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சுக்கிரன் கன்னியா ராசியில் இரண்டாவது அம்சத்திலிருந்தால் பாக்கிய வம்சத்தில் விவாகம் நேரிடும். ரூப லக்ஷணமுள்ள மனைவி வாய்ப்பாள்.

(335) சூரியன், சுக்கிரன், புதன், மூவரும் கூடினும் 7-மாதிபதி நீச்சமடைந்து சுக்கிரன் சூரியனுடன் கூடினும் ஜாதகர் இரு தாரமுடையவர். 2 தாரத்திடமும் புத்திரருண்டாவர். முதல் மனைவி 24-ம் வயதில் பிரசவத்தில் மரிப்பாள், மறுவிவாகம் பிறகு நடக்கும்.

(336) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி 7-மாதிபதி 5-ல் சூரியனுடன் கூடியும், சுக்கிரன் 7-ல் சுபாம்சத்திலும் இருந்தால் பாக்கிய வம்ச ஸ்திரீயை விவாகம் செய்ய நேரிடும். ஷை சுக்கிரனுடன் செவ்வாய் கூடில் மனைவியால் விசாரமும் 2-ந்தாரமும் நேரிடும், அல்லது மனைவி கிரக சங்கையால் பீடையாவது அல்லது கர்ப்ப காலத்தில் சங்க பீடையாவது அடைவாள்.

(337) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி 7-மாதிபதி 2-ல் இருந்து சுக்கிரனுடன் பாபரும் கூடாதிருந்தால் ரூபவதியும், பதி பக்தியுமுடைய மனைவி வாய்ப்பாள்.

(338) ஜென்ம லக்கினம் மீனமாகி 7-மாதிபதி (2-ல்) சூரியனுடன் கூடிச் சுக்கிரன் 4-ல் ராகுவுடனும் கூடி 9-ல் சந்திரனுமிருந்தால் மூத்த மனைவி புத்திரனின்றி மரித்த பின்பு 2-ந் தாரம் நேரிடும்.

(339) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி 7-மாதிபதி சனியுடன் கூடி 4-ல் இருந்து சுக்கிரன் ரிஷப சுயக்ஷேத்திரத்தில் இருந்தாலும் பாபர் மத்தியிலிருந்தால் 2 தாரமேற்படும்.

(340) ஜென்ம லக்கினம் கடகம் ஆகிச் சனி 8-லும், 4-ல் செவ்வாயும், சுக்கிரனுக்கேழில் சனியுமிருந்தால் 2-ந் தாரம் ஏற்படும்.

(341) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி 8-ல் சனி, 7-மாதிபதி நீச்சம், 2-ல் சூரியனிப்படி யிருந்தாலும் தாரம் 2 ஆகும். 35-ல் அல்லது 37-ல் தார நாசம் உண்டு. உடனே மறு விவாகம் உண்டு.

(342) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி 7-ல் கேதுவும் 6-ல் குஜ சுக்கிரருமிருந்தால் 2 தாரமேற்படும்.

(343) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி 7-ல் 7-மாதிபதி யிருந்து நீச்சச் செவ்வாயால் பார்க்கப்பட்டுச் சுக்கிரன் 4-ல் ராகு வுடன் கூடினுல் 2 தாரமேற்படும். 25-ல் புத்திரப் பிரசவத்தில் தாரநாசம் ஆகும். சீக்கிரம் விவாகம் உண்டு.

(344) ஜென்ம லக்கினம் கன்னியாகிச் சுக்கிரனுக்கு 5-ல் சனியிருந்து சுக்கிரனைக் குஜன் பார்த்தால் 2 தாரமேற்படும். 30-ம் வயதில் முதல் தாரநாசம் ஏற்படும். உடனே மறு விவாகம் நேரிடும்.

(345) சந்திரனுக்கேழில் குரு விருந்தால் சாத்துவீகவதி யான மனைவி வாய்ப்பாள்.

(346) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி 7-மாதிபதி நீச்ச மடைந்து, சுக்கிரனும் நீச்சத்தில் நீச்சாம்சத்தில் இருந்தால் தா யில்லாப்பெண்ணை ஜாதகர் மணப்பார்.

(347) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி 7-மாதிபதி உச்சனு கிச் சுக்கிரனும் அவருடன் கூடி சனியும் உச்சத்திலிருந்தால் 2-ந் தாரம் நேரிடுமென்று ஒரு கிரந்தத்திலும் வேறு ஒரு கிரந்தத்தில் பர ஸ்திரீ சங்கமம் நேரிடுமென்றும் சொல்லப்படுகிறது.

(348) ஏழில் சந்திரனிருந்தால் தாய் வமிசத்தினுல் சுகமுண் டாகும்.

(349) சுக்கிரன் பதினொன்றில் இருந்து சூரியனும், புதனும் 11-ல் இருந்தால் 2-தாரம் உண்டு.

(350) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி 7-ல் சனியிருந்து 7-மாதிபதி 2-ல் ராகுவுடன் அல்லது கேதுவுடன் கூடினுல் ஏக தாரமுடையனேயாவான். தன்னூருக்கு வடக்கில் தாயாதியின் சகோதரியின் புத்திரியை மணப்பான். இங்கு குரு சுக்கிரனைப் பார்க்கவேண்டும், இந்தக் கிரக யோகத்திற்கே செவ்வாயும் 5-ல் இருந்தால் 5 அல்லது 7 கர்ப்பம் நஷ்டமுண்டாகும்.

(351) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகிச் சுக்கிரனும், சனியும் கூடி 6-ல் இருந்தால் ஒரு பெண்ணும், ஒருபிள்ளையும் பிறந்தபின்

வயது 28, 29-ல் பிரசவத்தில் மனைவி மரிப்பாள். பிறகு 2-ந் தார மேற்படும்.

(352) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகிச் சுக்கிரன் 7-ல் குரு, புதனிவர்களுடன் கூடியிருந்து 10-லுள்ள சனி இவர்களைப் பார்த்தால் 3 தார மேற்படும்.

(353) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகிப் பூசம் 2-ல் சுக்கிரனும் மகம் ஒன்றில் குருவும் அவிட்டம் 4-ல் சனியுமிருந்தால் விவாகத்தடை யேற்படும். பிறகு தன்னூருக்கு வடக்கில் விவாகம் நடக்கும்.

(354) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஆயில்யம் 4-ல் செவ்வாயும் சுக்கிரனுமிருந்தால் விவாகத்திற்குப்பிறகு சுகமும் லக்ஷ்மீ கடாக்ஷமும் உண்டாகும்.

(355) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஏழாமாதிபதி சுக்கிரன் 7-ல் இருந்தால் ஒரு தாரமே என்று ஒரு கிரந்தமும், 2-தாரமுண்டென்று வேறு கிரந்தமும் கூறுகின்றது.

(356) ஜென்ம லக்சினம் மேஷம் ஆகி ஏழாம் பாவத்தில் ராகு இருந்தால் மனைவிக்குப் பீடையுண்டாகும். இந்த ராகு நின்ற ராசிநாதன் எங்கிருந்தாலும் பாபரால் பார்க்கப்பட்டால் 3 தாரமேற்படும். அப்படிக்கின்றி ஒரு தாரமே நிலைத்தால் அவள் கர்ப்ப தோஷமாவது கிரக சங்கா பீடையாவது அடைவான்.

(357) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி சுக்கிரன் 7-மாதியாகி 12-ல் இருந்தால் 2 அல்லது 3 தாரம் ஏற்படும்.

(358) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகிச் சுக்கிரன், கேது, செவ்வாயிவர்களுடன் கூடி 11-ல் இருந்தால் 3 தாரமுண்டாகும்.

(359) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகிச் சுக்கிரன் 6-மாதிபதியுடனும் கேதுவுடனும் 11-ல் கூடினாலும் 2 தாரம் உண்டாகும்.

(360) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி ஏழாமாதிபதி சந்திரனுடன் கூடி 9-ல் இருந்து சனி 5-ல் இருந்தால் எப்பொழுதும் மனைவி ரோகியாவாள். இந்தக் கிரகயோகத்திற்கே குரு கடகத்தில் இருந்தால் 32-வது வயதில் விவாகம் நடக்கும்.

(361) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி 7-மாதிபதி கேதுவுடன் கூடி இவர்களைக் குரு, சனியுடன் கூடிப்பார்த்தால் மறு மனைவியால் அந்திய காலத்தில் யோகமுண்டாகும்.

350 முதல் இதுவரையில் மேஷ லக்கினம்.

(362) குருவுக்கேழில் கேதுவும் 2-ல் சூரியன் செவ்வாயிவர்களும் இருந்தால் தன் மனைவியே விஷமிடுவள்.

(363) ஒன்றில் அல்லது 8-ல் சுக்கிரனிருந்தாலும் பார்த்தாலும் ஜாதகர் விரகமுடையவராகவும், மனைவி நாசமுடையவருமாவார்.

(364) ஐந்தில் அல்லது 11-ல் ராகுயிருந்தால் ஜாதகருடைய மூத்தவன் மனைவியின் விதவை சகோதரியால் மருந்திடப்பட்டு மூத்தவன் மரிப்பான்.

(365) குரு தனுசில் கன்னியில் 2-ல் அல்லது 7-ல் இருந்தாலும் சனியால் பார்க்கப்பட்டால் 2 தாரம் நாசமடையும். மிதுனத்திற் கேழிலும் தனுசிற்கிரண்டிலும் கன்னியில் 2-லும் தனுசுக் கேழிலும்.

(366) கன்னியில் பிறந்தவர்க்கு 2, 7-லும் தனுசில் பிறந்தவற்கு 2, 7-லும் குரு இருந்தால் 2 தாரம் நாசமடையும். எருக்கஞ் செடியை மணப்பான். இது மகர லக்கினத்திற்குப் பொருந்தும்.

(367) ஏழில் சுக்கிரன் ரிஷப நவாம்சத்தில் இருந்தால் சனியாலும் பார்க்கப்பட்டால் பர ஸ்திரீ சங்கமும், சற்களத்திர சுகமும் இவைகள் பேரில் பிரியமு முடையவன்.

(368) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி புதன் மேஷத்தில் பரணி 2-வது பாதத்தில் காலாக்னி ஷஷ்டியாம்சத்திலிருந்தால் குல ஸ்திரீயை அணைவான்.

(369) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி 8-ல் ராகு இருந்தால் ஜாதகருக்கு 2 தாரமுண்டாகும், 4-ல் சூரியன் இருந்தால் தகப்பனுக் கிருதாரம் உண்டு.

(370) சுக்கிரன் கேதுவுடன் கூடி 10-ல் இருந்தால் ஒரு சகோதரன் மனைவி விபசாரியாவள், சிற்றப்பன் 3 தார முடையவன்.

(371) ஏழாமாதிபதியாகிய சுக்கிரன் 10-ல் இருந்தால் ஒரே தாரமேற்படும், ஷ சுக்கிரனைச் சனி செவ்வாய் ராகு இவர்கள் பார்த்தாலும் சனியுடன் மேற்படி சுக்கிரனிருந்து செவ்வாய் ராகு இவர்களால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் மனைவி ரோகவதியாவாள், துர்சொப்பன பீடையடைவாள், கர்ப்ப சோகத்தினல் முதவில் பீடையுறுவாள், பிறகு சுகியாகிச் சற்புத்திரரை அடைவாள், சேது ஸ்நானம் செய்தால் கெற்ப ஸ்ராவமுண்டாகாது. தகப்பன் ஒரே தாரமுடையவன். சகோதரரிருவர் இருதார முடையவர்களே யாவார்கள்.

(372) லக்கினத்திற்கு 7-வது நவாம்சையில் சனியிருந்து, ராகு செவ்வாயிவர்களால் பார்க்கப்பட்டால் மனைவி ரோகவதியும் துர் சொற்பனமு மடைபவளும் ஆவாள்.

(373) ஏழாமாதிபதி ராகுவால் பார்க்கப்பட்டும் திருவாதிரை 4-வது பாதத்தில் சுக்கிரனிருந்தும் ஜனித்தவருடைய மனைவி துன்மார்க்கத்தன முடையவள், ஜாதகரும் வெகு ஸ்திரீகளின் பாபமுடையவர்.

(374) அசுவனி 2-ல் சந்திரனிருந்து செவ்வாயுடனும் கூடி சந்திரனிருந்தால் ஜாதகர் ஸ்திரீலோலன், சுரதப்பிரியன் ஆவார்.

(375) ஏழாமாதிபதி சூரியனுகி 2 கிரகங்களுடன் கூடியிருந்தால் 2 தாரமேற்படும்.

(376) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி மீனத்திலுள்ள சந்திரன் சனியுடன் கூடினுலும் சனியின் பார்வையை யடைந்தாலும் 18-வது வயதில் விவாகம் ஆகி 36-ம் வயதில் பிரசவத்தில் மனைவி மரிப்பாள், அவளிடம் 2 புத்திரர் தீர்க்கம், 2 தாரமுமேற்படும்.

(377) ஜென்ம லக்கினம் மேஷமாகி லக்கினத்தில் சுக்கிரனிருந்து 2-மிடத்தில் பாபரிருப்பின் அல்லது சூரியன் சனி புதன் கூடியிருப்பின் 2 தாரமுண்டாகும்.

(378) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி 2-மிடத்தில் ராகுவும் சுக்கிரனும் கூடின் ஜாதகர் பரஸ்திரீ கமன முடையவராவர்.

(379) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ஒன்றில் சுக்கிரனும் 7-மாதிபதி நீச்சத்திலுமிருந்தால் 3 தாரமேற்படும்.

ஜேன்ம லக்கினம் கடகம்.

(380) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி 7-ல் பாபரிருந்து அல்லது 7-ல் குரு செவ்வாய் இருந்து சுக்கிரன் ராகுவுடன் கூடி 5-ல் இருந்தால் பர ஸ்திரீ சங்கமத்தினால் மனைவியை விலக்கிவைப்பார்.

(381) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சுக்கிரன் சுபருடன் கூடி 10-ல் இருந்து குரு 7-மிடத்தைப் பார்த்தால் ரூபவதியான நல்ல மனைவி வாய்ப்பாள்.

(382) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி லக்கினத்தில் சூரியனும், செவ்வாயுமிருந்தாலும் சனி லக்கினத்தைப் பார்த்தாலும் தார நாசமேற்படும்.

(383) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி 7-மாதிபதி உச்சத்திலிருந்து லக்கினத்தில் நீச்ச கிரகமிருந்தால் பர ஸ்திரீ கமனமுடையவர், பலவந்தப் புணர்ச்சிப்பிரியர், பரதாரத்தினிடம் அன்பும், தன் மனைவியிடம் நிதான ஆசையுமுடையவர்.

(384) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி 5-ல் செவ்வாயிருந்தால் 2 தாரம் நாசத்தை யடையும்.

(385) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி 7-மாதிபதி 5-ல் இருந்து 3-ல் உள்ள சனியால் பார்க்கப்பட்டால் ஸ்திரீ மூலம் வெகு கலகங்களுண்டாகும்.

(386) ஜென்ம லக்கினம் மேஷமாகி 12-ல் சுக்கிரன் 7-மாதிபதியாகி யிருப்பின் 2 அல்லது 3 விவாகம் நடக்கும்.

(387) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி 12-ல் சந்திரனும் சந்திரனுக்குப் பன்னிரண்டில் சுக்கிரனுமிருந்தால் 2 தாரம் ஏற்படும்.

(388) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி 7-மாதிபதி நீச்சத்திலும் 5-ல் சனியுமிருந்தால் 2 தாரமேற்படும். ஒரே தாரமென்பது சிலர் மதம்.

(389) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி 7-மாதிபதி 2-ல் இருந்து குருவால் பார்க்கப்பட்டு சுக்கிரனும், புதனும் 3-ல் இருந்தால் 2 தாரம் உண்டாகும்.

(390) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி 7-மாதிபதி சனியின் வீட்டில் இருந்தால் பர ஸ்திரீ சங்கமம் நேரிடும். அப்படியில்லாவிடில் தாரம் ரோகவதியாவாள். இது கடக, சிம்ம லக்கினங்கள் தவிற மற்ற லக்கினங்களுக்கும் பொருந்தும்.

(391) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி 7-ல் ராகுவும், சுக்கிரன் செவ்வாயுடன் கூடி 12-லும் இருந்தால் 2 தாரமேற்படும்.

(392 ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி 2-ல் சனி யிருந்தாலும் பார்த்தாலும் சுக்கிரன் 6-லும், 7-ல் 7-மாதிபதி செவ்வாய், புதனிவர்களுடனும் கூடியிருந்தால் மூன்று தாரமுண்டாகும் என்று சிலர் மதம். ஆனல் சற்களத்திர முண்டாவார்கள் ஒரே தாரமென்பது சிலர் மதம்.

(393) ஜென்மலக்கினம் சிம்மம் ஆகி 7-மாதிபதி ஒன்றிலும் சுக்கிரன் 12-மாதிபதியுடன் கூடி 5-லுமிருந்தால் 3 தாரமேற்படும்.

(394) ஏழாமாதிபதி உச்சத்திலும் குரு 2-லும் இருந்தால் சுக்கிரன் நீச்சமானுலும் நல்ல மனைவி வாய்ப்பாள்.

(395) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி 7-மாதிபதி சனியுடன் கூடியிருந்து, 7-யைச் சனி பார்த்தால் சிலர் ஒரே தாரமென்றும், சிலர் 2 தாரமென்றும், காலந்தப்பிப் புத்திரன் பிறப்பானென்றும் சொல்லுகிறார்கள்.

(396) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி சுக்கிரன் 4-லும் 5-ல் சனியுடன் சூரியனும் கூடினல் 2 தாரமேற்படும்.

(397) ஜென்ம லக்கினம் மீனமாகி 3-ல் செவ்வாயிருந்தால் தார வமிச நாசமும், 2 தாரமுமேற்படும். இந்தக் கிரக யோகத்துடன் 9-ல் சுக்கிரனுமிருந்தாலு மிப்படியே யாகும்.

(398) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி 11-ல் சனியும் 3-ல் ரவி சுக்கிரரு மிருந்தால் 2 தாரம் நேரும். மூத்தவள் சந்ததியில்லாதவளாகவாவது, ரோகியாகவாவது ஆவாள்.

(399) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி 7-மாதிபதி 9-மாதிபதியுடன் கூடி 7-ல் இருந்தால் வெளுப்பு நிறமான ஒரே தாரமும் போக ஸ்திரீ சுகமடைவான்.

(400) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி சுக்கிரன் 10-ல், சனி, குஜ கேதுவுடன் கூடி வர்க்கோத்தமத்தில் இருந்து ஒன்றில் 7-மாதிபதியுமிருந்தால் மனைவியால் பாக்கியம், சுகம் வீடு, வாகனம் முதலியன உண்டாகும்.

(401) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி 7-ல் சுக்கிரனிருந்து (மிதுன) சனியால் பார்க்கப்பட்டால் 3 தாரமேற்படும்.

(402) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி 2-மாதிபதி சனியுடன் கூடி 4-ல் இருந்தால் 2 தாரமேற்படும், இந்தக் கிரக யோகத் திற்கே சுக்கிரன் கடகத்தில் அதிமித்திராம்சத்திலிருந்தால் ஒரே தாரமாகும்.

(403) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி சந்திரன் 6-ல் சுக்கிர னுடன் கூடியிருந்து (9-ல் உள்ள) சனி, (3-ல் உள்ள) செவ்வா யிவர்கள் மூலம் பார்வையுற்றாலும், 7-ல் கேது இருந்தால் 2 தார மேற்படும்.

(404) ஜென்மலக்கினம் சிம்மம் ஆகி 7-ல் ரவி புதரும் 7-மாதி பதி 12-லுமிருந்து, 4-ல் உள்ள செவ்வாய் 3-ல் உள்ள குரு இவர் களால் 7-மிடம் பார்வை பெற்றால் மூத்த மனைவி குல்ம ரோக பீடையுறுவாள், 2-ந் தாரத்தை மணப்பான்.

(405) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி 7-மாதி புதனாகி 7-ல் சூரியனுடன் கூடி சுக்கிரன் 5-ல் இருந்தால் மறுதாரமுண்டாகும்.

(406) ஜென்மலக்கினம் கன்னிஆகி 7-ல் குரு சந்திரரிருந்து சுக்கிரன் லக்கினத்திலிருந்தால் தார வமிசத்தினால் விசேஷ பாக் கிய முண்டாகும்.

(407) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி 7-மாதிபதி 8-ல் கேது வுடன் கூடியிருப்பினும் 7-ல் (செவ்வாய்) அல்லது பாபரிருப்பி னும் 7-யைப் பாபர் பார்ப்பினும மறு தாரமேற்படும்.

(408) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி 7-ல் சனியிருந்தாலும் ஓராம் ஆருடத்தில் கேது இருந்தாலும் விவாகத்தடையுண்டாகும் 7-ல் உள்ள சனியுடன் 12-மாதிபதியாகிய மதி கூடில் பர ஸ்திரீ சங்கமம் நேரிடும். காலங்கடந்து விவாகம் நடக்கும்.

(409) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி 7-ல் செவ்வாயிருந் தால் கடுத்த சொல்லுள்ள மனைவி வாய்ப்பாள், 2-ல் சனி யிருந்தா

லுமிப்படியே நடக்கும், பரதார கமன முடையோராவார், தார துவேஷியாவர், பலஜாதி ஸ்திரீகளிடம் போஷிப்பார்.

(410) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி 8-லுள்ள சுக்கிரன் அதிமித்ராம்சத்திலிருந்தால் ஒரே தாரமாகும். ஆயினும் பரஸ்திரீ சங்கமம் நேரும்.

(411) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி 8-ல் சனியிருந்து சூரி யனுல் பார்க்கப்படின் காலங்கடந்து விவாகம் நடக்கும்.

(411-a) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி 7-மாதிபதி நீச்சத்திலிருந்து 3-ல் கேதுவிருந்தால் மறு தாரம் நேரிடும்.

(412) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி சுக்கிரன் லக்கினத் தில் நீச்சனுகி யிருந்தால் பரதார கமனம் செய்வார்.

(413) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி 7-மாதிபதி 5-லும் 7-ல் கேதுவுமிருந்தால் 2 தாரம் ஏற்படும்.

(414) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகிச் சுக்கிரன் 10-ல் இருந்தால் 2 தாரம் நாசமாகும். ஷை சுக்கிரனுடன் ராகுவும் கூடில் மூத்தவள் ரோகியாவாள்.

(415) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்றில் சுக்கி னிருந்து ரவி புத குருவுடன் கூடி, சந்திரனும் பார்க்கப்பட் டால் ரூபமுள்ள 2 அல்லது 3 களத்திரம் விவாகம் ஆகும்.

(416) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி சுக்கிரன் ஒன்றில் தனித்திருந்தால், யாராலும் கூடாமலும் பார்க்கப்படாமலு மிருந்தால் ஒரு தாரம் வெகு ரூபவதியாய் வாய்ப்பாள்.

(417) ஜென்ம லக்கினம் கன்னி ஆகி 7-ல் செவ்வாயிருந்து ஓராமாதியால் பார்க்கப்பட்டால் ஒரு தாரமே விவாகம்செய்வார், தாரத்தினுல் பாக்கியமுண்டாகும்.

(418) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி 7-மாதிபதி 3-ல் செவ் வாயுடன் கூடிச் சுக்கிரனும் சூரியனுடன் கூடில் மறு தார மேற் படும்.

(419) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி ஒன்றில் சுக்கிரனிருந் தால் ஜாதகர் பர ஸ்திரீ ரதனுவர். காமியும், விஷய லோலனு மாவார்.

(420) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகி மீனத்தில் ரவி சுக்கிர ரிருந்து சந்திரன் 11-ல் (கும்பத்தில்) இருந்தால் சில கிரந்தத்தில் ஒரு தார மென்றும் வேறு கிரந்தத்தில் இரு தார மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரே தாரமானால் அவள் உள்ளுக்குள் ரோகியாவாள்.

(421) ஜென்ம லக்கினம் ஆகி மிதுனம் 7-ல் ராகு சந்திரரும் ஒன்றில் சனி கேதுவும் இருந்தால் 2 தாரம் ஆகும்.

(422) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி சுக்கிரன் நீச்சத்தி லும் 7-ல் ராகுவுமிருந்தால் 2 தார மேற்படும்.

(423) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகிச் சூரியன் தார ஆரு டத்தில் அலிக்கிரகத்துடன் கூடினாலும் சுக்கிரன் 3-ல் கேதுவுடன் கூடினாலும் பார்க்கப்பட்டாலும் தார சுகமுண்டாகாது.

(424) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி 7-ல் சந்திரனும் சிம்மத்தில் சுக்கிரனுமானால் 12 அல்லது 14 அல்லது 15-ல் விவா கம் நடக்கும். வேறு கிரந்தத்தில் 16, 17, 18-ம் வயதுகளில் விவாகம் நடக்குமென்று உள்ளது.

ஜென்ம லக்கினம் ரிஷபம்.

(425) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி 7-மாதிபதி 11-ல் சுக்கிரனுடன் கூடியிருந்து லக்கினத்தில் சனியிருந்தாலும், 11-ல் 7-மிடத்தோன் (செவ்வாய்) இருந்து குருவால் பார்க்கப்பட்டா லும் 3 தாரம் உண்டு. முதல் மனைவி சக்தியில்லாத பாவி, 2-ம் தாரம் யோகசாலி; 3-ந் தாரம் புத்திர பாக்கிய மற்று மரிப்பாள்.

(426) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி 7-ல் (விருச்சிகத்தில்) சந்திரனிருந்தால் 3 தாரமேற்படும், சந்திரனைச் சனி பார்த்தால் முதல் தாரம் தரித்திரமடையும்.

(427) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி 7-ல் சந்திரன் சனி செவ்வாய் மூவரும் கூடியிருப்பின் 2 தார மேற்படும். நீச்ச ஸ்திரீ சேர்க்கை யுடையவராவர். பிறர் மனைவியையும் ரகசியமாய்ச் சேர்வார்.

(428) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகிச் சுக்கிரனும், குஜனும் ஒரே ராசியில் இருந்தால் எங்கிருந்தாலும் 2 தார மேற்படும்.

பாலிய விவாகம். சிலக் கிரந்தம் ஒரே தாரமென கூறுகிறது, பர ஸ்திரீ கமன மேற்படும்.

(428-a) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி 12-ல் செவ்வாயிருந்து ரவி, புதன், சனி இவர்களால் பார்க்கப்பட்டால் ஒரு தாரமென்று சிலரும், 2-தார மென்று சிலரும், பாலிய விவாகம் என்றும், தாரம் ஒன்று ஆயின் அவள் மலடியாவாள் என்றும் சொல்லுகிறார்கள்.

(429) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஏழாமிடத்தில் சுக்கிரனிருந்து சனியுடன் கூடினாலும் பார்க்கப்பட்டாலும் ஸ்திரீயால் தனமுண்டாகும்.

(430) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஏழாமாதிபதி லக்கினத்தில் கேதுவுடன் கூடியிருந்தால் கருப்பு நிறமுள்ள மனைவியும் ஒரு தாரமுண்டாகி பர ஸ்திரீ கமனியாவார். வேறு கிரந்தத்தில் 2-தார முண்டென்று தெரிகிறது.

(431) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஏழாமாதிபதி உச்சமானால் பாக்கிய வமிசத்தில் மனைவி வாய்ப்பாள். இந்தக் கிரகயோகத்துடன் 7-ல் கேதுவும் 2-மிடத்தில் பாபருமிருந்தால் மனைவி மரித்தபின் பர ஸ்திரீ கமன தோஷமுண்டாகும்.

(432) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி பூராடம் 3-வது பாதத்தில் சுக்கிரனிருந்தால் ஒரே தாரமாகும்.

(433) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி ஏழாமாதிபதி 4-ல் இருந்தால் 50 வயதில் ஒராந்தாரம் மரித்தபின் புனர் விவாகமடைவார்.

(434) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி 7-மாதிபதி 9-லும், சந்திரன் சனியுடன் கூடி புதனும் சுக்கிரனும் கூடினால் நல்ல குணமுள்ள மனைவி ஒருவளே வாய்ப்பாள், ஜாதகர் போக ஸ்திரீகளிடம் பிரியமுள்ளவர்.

425 முதல் 434 வரை ரிஷப லக்கினமே.

ஜென்ம லக்கினம் மிதுனம்.

(435) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகிச் சுவாதி ஒன்றிலாவது 4-லாவது சனியிருந்தால் விவாக காலத்தில் கலஹமேற்படும்.

(436) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகிச் சுக்கிரன் 11-லும், 2-ல் செவ்வாயுமிருந்தால் 2 தார மேற்படும். இருவரும் விதவை களாவார்கள். 2-ந் தாரத்திற்கு அந்தியத்தில் கண்ணில் கெடுதல் நேரும்.

(437) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி நீச்சஞன செவ்வாய் 2-ல் இருந்தால் தூர ஸ்திரீயைப் புணர்வார்.

(438) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி 12-ல் சுக்கிரன் ராகுவுடன் கூடில் பிராம்மண ஸ்திரீ சேர்க்கையுடையவராவர்.

(439) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகிக் குரு 7-ல் இருந்து செவ்வாய் குருவைப் பார்த்தால் 19-வது வயதில் நல்ல தாரம் வாய்ப்பாள்.

(440) ஜென்ம லக்கினம் மிதுனம்ஆகி 7-மாதிபதி உச்சத்திலிருந்தால் சந்திரன் குருவைப் பார்த்தால் வெளுப்பு நிறமுள்ள மனைவி வாய்ப்பாள்.

(441) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி 7-ல் பாபரிருந்து 7-மாதிபதி சனியால் பார்க்கப்பட்டால் மறுதாரத்தினுல் பலனடைவார். ஆனுல் ஒரே தாரமென்பது சிலர் மதம்.

(442) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி ஒன்றில் சந்திரனும் 7-ல் கேதுவல்லது ராகுவும் இருந்து சுக்கிரன் நீச்சமானுல் விவாகத்திற்கே தடையுண்டு. காலங்கடந்து விவாகம் நடக்கும்.

(443) ஜென்ம லக்கினம் மிதுனம்ஆகி 7-மாதிபதி பாபராசியிலிருந்து சந்திரனும் பாபரால் பார்க்கப்பட்டால் தாரம் 2ஆகும் சுபர் ராசிகளானுல் ஒரே தாரம்.

(444) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி 7-மாதிபதியும் பாபருடன் கூடி சந்திரனும் பாபருடன் கூடினுல் மறுதாரத்தினுல் பலனுண்டாகும். ஆயினும் ஒரே தாரமென்பது சிலர் மதம்.

குறிப்பு :—சந்தேகமாக ஒரு தாரம், இரண்டு தாரம் இரண்டிற்கு மேற்பட்ட தாரம் ஜாதகருக்கு வாய்க்கும் என்று பல கிரந்தங்களில் சொல்லி இருக்கிறது என்று சொல்லி சந்தேகத்தைக் கிளப்பி அதைத் தீர்க்காமல் விட்டிருக்கும் அயிட்டங்கள் விஷயமாக அறியவேண்டிய விஷயத்தைக் கீழே சொல்லப்படும். ஒரு சந்தேகம் உள்ள அயிட்டத்தில் சொல்லியதுபோலவே ஒரு தாரங்

தான் சம்பவிக்குமா அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தாரம் சம்பவிக்குமா என்பதை நிர்ணயிப்பதற்கு ஜென்ம லக்கின ரீதியாயும், சந்திர லக்கின ரீதியாயும், ஏழு, இரண்டு, ஒன்பது, பதினொன்று; எட்டு இந்தப் பாவங்களையும் இந்தப் பாவாதிபதியையும் சுக்கிரனையும் நன்றாய் ஆராய்ச்சி செய்யவேண்டும். இப்படி ஆராய்ச்சி செய்யும்போது குறித்த தாவா அயிட்டத்திற் சொல்லிய கிரக யோகம் அல்லது கிரக அமைப்பிற்கு அதிகமாகப் பரிசோதனை செய்யும் ஜாதகத்தில் மூலத்திரிகோணம், உச்சம், ஆட்சி, நட்பு ராசி, பகை ராசி, நீச்ச ராசி, நட்பு கிரக சம்பந்தமும் பார்வையும், பகைக் கிரக சம்பந்தமும் பார்வையும், அஸ்தங்கதம், கேந்திரகோணம், துஸ்தானம் என்ற ஆறு, எட்டு, பன்னிரண்டாம் ஸ்தானங்கள் ஆகிய இந்த பல அம்சங்களில் ஏதாகிலும் அதிகமான அம்சங்கள் இருந்தால் இந்த அதிகமான அம்சங்களைக்கொண்டு அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டும். இது தான் ஜோதிடருடைய சாமர்த்தியமாகும்.

(445) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி 7-மாதிபதி 8-ல் நீச்சத்திலிருந்தாலும், 5-ல் சனி சுக்கிரர் கூடினாலும் அல்லது 7-ல் ரவி குஜர் கூடினாலும் ஒரே தாரமாகும். விவாகமான பின்பு சதிபதிகள் விரோதப்பட்டுப் பிரிந்து நின்று மனைவி யவ்வனத்தின் கடைசியில் கணவனுடன் சேர்வாள்.

(446) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி 7-மாதிபதி 7-ல் இருந்து சுக்கிரன் சனி ரவி கூடி 9-ல் இருந்தால் விவாகம் 37-ல் சூத்திரப் பிரபுவால் நடக்கும்.

(447) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி 6-ல் சனியும், ஒன்றில் ரவியும் 11-ல் குருவுமிருந்தால் 36 வயதில் விவாகமும் அதற்கு முன் ஜார ஸ்திரீ சேர்க்கையுமுண்டாகும்.

435 முதல் 447 வரை மிதுனம்.

ஜேன்ம லக்கினம் கடகம்.

(448) ஜென்ம லக்கினம் கடகம் ஆகிச் சனி 12-ல் இருந்தால் இருதாரம், இந்தக் கிரக யோகத்துடன் லக்கினத்தில் ராகு விருந்தாலும் இருதார மேற்படும்.

(449) ஜென்ம லக்கினம் கடகம் ஆகிச் சதயம் 3-லாவது அனுஷம் 4-லாவது, ரோகிணி 2-லாவது, பூரம் ஒன்றிலாவது சனி

யிருந்து சுக்கிரன் ஸ்திர ராசியில் இருந்தால் நல்ல களத்திர முண்டாகும்.

(450) ஜென்ம லக்கினம் கடகம் ஆகிக் குருவும் செவ்வாயும் 7-ல் இருந்து, சுக்கிரன் ராகுவுடன் கூடியிருந்தால் மனைவி கடுத்த சொல்லுள்ளவள் அல்லது புருஷனைவிட மிஞ்சியவள், ஜாதகன் பரஸ்திரீ கமனியாவர்.

(451) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி 7-மிடத்தைக் குரு பார்த்தும், சுக்கிரன் புதனுடன் மேஷத்திலும் இருந்தால் ரூபலக்ஷணம் நிரம்பியுள்ள கிருஹஸ்தன் வீட்டுப் பெண் மனைவியாவாள். சிலர் வெகு பேச்சுடையவளென்றும் சிலர் மிருதுவாய்ப் பேசுவாளென்றும் சொல்லுகிறார்கள்.

448 முதல் 451 வரை கடக லக்கினம்.

ஜென்ம லக்கினம் சிம்மம்.

(452) ஜென்ம லக்கினம் சிம்மமாகிச் சுக்கிரன் அனுஷம் 4-ல் இருந்தாலும் கேந்திரத்தில் இருந்தாலும் நல்ல மனைவி வாய்ப்பாள்.

(453) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி 7-மாதிபதி ஒன்றில், இருந்தாலும் 11 அல்லது 3-ல் அல்லது 7-ல் இருந்தாலும் 27 வயதுக்கு மேல் மறு தாரம் ஏற்படும்.

(454) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி 7-மாதிபதி 3-ல் இருந்து 5-ல் சந்திரனிருந்தால் 8-வது வயதில் விவாகம்நடக்கும்.

(455) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி 7-மாதிபதி 3-ல் இருக்க, தனுசில் ராகு இருந்தாலும் 6-ல் (மகரத்தில்) சுக்கிரனிருந்தாலும் பாலிய விவாகம் நடக்கும்.

(456) ஜென்ம லக்கினம் சிம்மம்ஆகி 7-மாதிபதி 4-மாதிபதியுடன் கூடி 11-ல் இருந்து 7-யைக் குரு புதனிவர்களும், நீச்சசெவ்வாயும் பார்த்தால் முதல் தாரத்திற்கு அபவாதம் நேரிட்டபின் அவளை விலக்கிவிட்டு மறுமண மடைவார். நானு ஜாதி ஸ்திரீரதன் ஆவார்.

(457) ஜென்மலக்கினம் சிம்மம் ஆகி 7-ல் செவ்வாயிருந்தால் மனைவிக்குப் பீடைமட்டும் உண்டாகும், இந்தக் கிரக யோகத்திற்கே லக்கினத்தில் சுக்கிரனிருந்தால் மறுதார முண்டாகும்.

(458) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி 7-மாதிபதி 12-ல் இருந்து சுக்கிரன் கேதுவோடு கூடி 3-ல் இருந்தால் 2 தார மேற்படும்.

(459) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி 7-ல் கேதுவும் சுக்கிரன் மகரத்தில் உச்ச செவ்வாயுடனும் கூடினுல் 2 தாரமேற்படும்.

(460) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி 7-மாதிபதி ஒன்றிலும் 7-ல் சூரியனுமிருந்து சூரியனுடன் ராகுவும் கூடினுல் முன் ஜென்மத்தில் விதவையுடன் கூடிய தோஷமுண்டாகும், அதனுல் மனைவிக்கு இச்சென்மத்தில் தலைவலியும், மூலரோக பீடையும் ஏற்படும். இப்பீடை 7 அல்லது 9 வருஷமிருக்கும்.

(461) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி 7-ல் ரவி, புத, சுக்கிரர் ராகுவோடு கூடியிருந்தால் முன் 460-வது அயிட்டத்தில் சொன்ன பலனும், சுய ஜாதி விதவை சேர்க்கையும், ரோகபீடையும், வாத பீடையுமுண்டாகும்.

452 முதல் 461 வரை சிம்ம லக்கினம்.

ஜென்ம லக்கினம் கன்னி.

(462) ஜென்ம லக்கினம் கன்னியாகி 7-மாதிபதியும் சூரியனும் கூடி 11-ல் இருந்தாலும் 3-ல் ராகு விருந்து சுக்கிரன் சிம்மத்திலிருந்து சனியாலும் பார்க்கப்பட்டாலும் 2-ந் தாரம் வாய்க்கும்.

(463) ஜென்ம லக்கினம் கன்னியாகிக் குருவும், சந்திரனும் 7-ல் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டு சுக்கிரன் 9-ல் இருந்தால் தாய் வமிசத்துப் பெண்ணை மணப்பார், பாலிய விவாகம் உண்டு, 13 வயதில் விவாகமென்று சிலர் மதம்.

(464) ஜென்ம லக்கினம் கன்னியாகி 7-மாதிபதி 8-லும் சுக்கிரன் உச்சத்திலுமிருந்தால் பாக்கிய வமிசப் பெண்ணை மணப்பார், 2 தாரமாகும்.

(465) ஜென்ம லக்கினம் கன்னியாகி 7-மாதிபதியும், சுக்கிரனும் ஸ்திர ராசியிலும், ஸ்திர அம்சங்களிலுமிருந்தால் ஒரே தாரமேற்படும், பரதாரகமன முடையோனுவர்.

(465-a) ஜென்ம லக்கினம் கன்னியாகி 2, 7-மாதிபதிகள் கூடியிருப்பின் ஈசானியதிக்கில் அழகிய தாசி சேர்க்கையடைவார். மகத்திலிருக்கிறார்கள்.

(466) ஜென்ம லக்கினம் கன்னியாகி 5-ல் குரு சுபாம்சத்தில் இருந்தால் ஐந்து அல்லது ஆறு முதல் அனேக ஸ்திரீகளை அடைவான்.

(467) ஜென்ம லக்கினம் கன்னியாகி 7-ல் சந்திரனிருந்துசுக்கிர, ராகுவுடன் கூடியிருந்தாலும், பார்க்கப்பட்டாலும் 2 தாரம் நேரிடும்.

(468) ஜென்ம லக்கினம் கன்னியாகி 7-மாதிபதி 9-லும் 2-மாதிபதி 5-லும் சந்திரன் 2-லுமிருந்தால் அம்மான் பெண்ணை மணப்பார்.

(469) ஜென்ம லக்கினம் கன்னியாகி 7-ம் பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்து 7-மிடத்தைச் செவ்வாய் பார்த்தால் காலதாமதமாகி விவாகம் நடக்கும், மனைவி சமான்னிய அழகுடையவளாவள்.

(470) ஜென்ம லக்கினம் கன்னியாகி 2-ல் சுக்கிரனிருந்து சனியுடனும் கூடினுல் சோர ஸ்திரீகளுக்கு நாயகனுகி வரத்துக்கு மேல் வரத்துண்டாகி உற்சாக மடைவார்.

462 முதல் 470 வரை கன்னி லக்கினம்.

ஜென்ம லக்கினம் துலாம்.

(470-a) ஜென்ம லக்கினம் துலாமாகி 7-மாதிபதி 3-ல் வர்க்கோத்தமத்திலிருந்து சுக்கிரன் உச்சத்திலும் இருந்து சனி 7-மிடத்தைப் பார்த்தாலும் குரு, ராகுவுடன் கூடி 2-மிடத்தில் இருந்தாலும் ஜாதகனுக்கிரு மனைவியரேற்படுவர்.

(480) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி 7-மாதிபதி ஒன்றிலும் சுக்கிரன் 3-லும், 7-ல் ராகுவும் இருந்து 5-ல் சனி இருந்தால் ஜாதகனுக்கு இரு மனைவியரேற்படுவர். மூத்த மனையாளைத் தன் சகோதரியின் எத்தனத்தினுல் மணப்பார். மூத்தவள் கர்ப்பாதான காலத்தில் கலஹத்தினுல் நின்று விரோதப்படுவாள், பிறகு 8 அல்லது 9 வருஷம் கழித்து 2-வது விவாகம் ரகசியமாக நடக்கும்.

(481) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி 7-ல் செவ்வாயிருந்தால் இருதாரமாகும். சூரியன், சனியின் அம்சத்தில் இருந்தால் தாய் முறை உடையவளைச் சேர்வார்.

(481-a) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஒன்றில் சூரியனும் சுக்கிரனிருந்து 7-ல் பாபர் (செவ்வாய்) இருந்தால் 20 வயதில் விவாகம்.

(482) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி 7-ல் சனியும் 7-மாதிபதி நீச்சமுமடைந்து சுக்கிரன் சுபர் பார்வையுடனிருந்தாலும் 2 தார முண்டாகும், மேற்படி சுக்கிரனுடன் செவ்வாய் கூடியிருந்தால் உடனே மறு விவாகம் நடக்கும்.

(483) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி 7, 11-மாதிபதிகள் கூடி ஒன்றிலிருந்தாலும் 7-ல் ராகு இருந்தாலும் சுக்கிரன் நீச்சனுகி (12-ல்) கன்னியில் இருந்தாலும் விவாகத்தடை யுண்டாகும். விதவைகள் மாதவிடாயாகியுள்ள ஸ்திரீகள், பல ஜாதி ஸ்திரீகள் ஆகிய இப்படிப்பட்ட ஸ்திரீகளைச் சேர்வார்.

(484) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி 7-மாதிபதி சனியால் பார்க்கப்பட்டால் பாலிய விவாகம் உண்டு. மனைவிக்குப் பாலியத்தில் அம்மை ஜுரத்தினுல் ஒரு கண் பார்வைதான் ஏற்படும்.

(485) ஜென்ம லக்கினம் துலாம் ஆகிச் சுக்கிரன் 7-லும், 7-மாதிபதி 2-லும் இருந்தால் சிவந்த நிறமுள்ள மனையாள் வாய்ப்பாள், பல ஸ்திரீகளுக்கு நாயகனுவார், தாசி சங்கமுமுண்டு.

(486) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி 7-ல் சுக்கிரனிருந்தால் பல ஜாதி ஸ்திரீகளை அனுபவித்து பலவிதரோகங்களுமடைவார். 7-மாதிபதி 5-ல் இருந்தால் பலதடவைகளில் விவாகத் தடையேற்பட்டு காலந்திரத்தில் விவாகம் நடக்கும்.

(487) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி 7-மாதிபதி 5-ல் ரவியுடன் கூடி 7-ல் சந்திரனுமிருந்தால் 2 தார மேற்படும். மூன்று தாரமென்று சிலர் மதம்.

(470-a முதல் 487 வரையிலும் துலாம்.)

ஜென்ம லக்கினம் விருச்சிகம்.

(488) விருச்சிகம் ஜென்ம லக்கினமாகி 7-மாதிபதி நீச்சத்திலிருக்க 7-யைச் சனி பார்த்தால் ஒரே தாரமேற்படும். இரண்டு தாரம் ஆகுமென்று சிலர் மதம்.

(489) ஜென்ம லக்கினம் விருச்சிகமாகி 7-ல்சுக்கிரனும் 6-ல் குருவுமிருந்தால் ஒரே தாரம் வாய்க்கும், போக ஸ்திரீ சுகியாவர்.

(490) ஜென்ம லக்கினம் விருச்சிகமாகி 7-ல் செவ்வாயிருந் தால் விவாகத்திற்குப் பின் சுகமுண்டாகும்.

(491) ஜென்ம லக்கினம் விருச்சிகமாகி 7-மாதிபதி 10-ல் இருந்து 7-ல் ராகுவிருந்தால் 2, 3 தடவைகளில்எத்தனம் செய்து விவாகம் தடைபட்டுப் பிறகு நடக்கும். பிசாசம் போன்றவள், கணவனை விரோதித்துக் கொள்வாள். 25-வது வயதில் விவாக மடைவான், 2, 3 விவாகமுண்டாகும். சிலர் மதம் பிரகாரம் ஒரே தாரம் உண்டு, ஆனால் ஜாதகர் பர ஸ்திரீ ரதனுவர். செவ் வாயாலிவர் (சுக்கிரன்) பார்க்கப்படின் ஜன்ம தேசத்திலேயே பாக்கியமுள்ள பாக்கிய வமிசப் பெண் மனைவியாவாள்.

(492) ஜென்ம லக்கினம் விருச்சிகமாகி 7-ல் சந்திரன் இருந் தாலும், 11-ல் சனி சுக்கிரர் கூடினாலும், 4-ல் சனி வர்க்கோத்தம மடைந்தாலும் தாரத்தினல் பாக்கிய மடைவார். மாமனுருக்கிரு தாரம் ஆகும். ஸ்திரீயால் பாக்கியமுண்டு, 13 அல்லது 15 வய தில் விவாக மடைவார்.

(493) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி 7-ம் ஆருடாதி பதி 12-லிருந்தாலும் 7-ம் ஆருடம் சனியால் பார்வை யடைந்தா லும் (பாலிய விவாகம் உண்டு). உபநயன காலத்தில் விவாகம் உண்டு. தார சுகம் குறைவாகும். வீட்டு விலக்கமுள்ள ஸ்திரீ கள் மற்றும் பல ஸ்திரீகள் சேர்க்கையுடையவர். 3 தாரமேற்ப டும், அம்மான் மகளை மணப்பர்.

(494) ஜென்ம லக்கினம் விருச்சிகமாகி 7-மாதிபதி லக்கின கேந்திரத் திரிகோணங்களிலிருந்தாலும், சந்திரன் 7-ல் இருந்தா லும் ஒரே தாரம் உண்டாகும்.

(495) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி 3-ல் சனி, ராகு செவ்வாயிவர்களிருந்து சூரியனுடன் சுக்கிர புதனும் கூடி, குரு 5-லும இருந்தால் மனைவி ரோகியாவாள், கர்ப்ப நஷ்டமுடைய வள், ஜாதகருக்கு 2 அல்லது மூன்று தாரமுண்டாகும். மனைவி கர்ப்பத்தில் பீடையடைவாள், சங்கா தோஷமுள்ளவள், ஜாதகர் காலாந்தரத்தில் புத்திர லாபமுடையோர் ஆவர்.

488 முதல் 495 வரையிலும் விருச்சிகம்.

ஜென்ம லக்கினம் தனுசு.

(496) ஜென்ம லக்கினம் தனுசாகி 7-மாதிபதி சுக்கிரனுடன் கூடி 5-ல் இருந்து 3-ல் சனி, செவ்வாயினால் பார்க்கப்பட்டாலும் சனி, செவ்வாயோடு கூடியிருந்தாலும் பதினேழு வயதில் கலியாணம் நடக்கும். பல ஜாதி ஸ்திரீகளை சேர்வார். கிரந்தி நோயுண்டாகும், ஸ்திரீயால் கலஹமுண்டாகும்.

(497) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி 5-ல் குருவும் சுக்கிரனுமிருந்து 7-ல் ரவி புதரிருந்தால் 2 தாரமுண்டாகும்.

(498) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி 7-மாதிபதி ஒன்றில் சுக்கிரனுடன் கூடியிருந்து லக்கினம் செவ்வாயால் பார்க்கப்பட்டால் 19 அல்லது 20 வயதில் விவாகம் நடக்கும்.

(499) ஜென்ம லக்கினம் தனுசு பிற்பாதி ஆகி லக்னத்தில் மேற்சொல்லியபடி யிருந்தாலும் லக்னத்தில் சுக்கிரனிருந்தாலும் அதி பாலிய விவாகம் ஆகும்.

(500) ஜென்மலக்கினம் தனுசு ஆகிச் சந்திரனும், சுக்கிரனும் கூடி 9-ல் இருந்தால் 2 தாரமேற்படும். இந்த கிரக யோகத்திற்கே கடகத்தில் புதனுமிருந்தாலும் 2 தாரமேயாகும்.

(501) ஜென்மலக்கினம் தனுசு ஆகி 2-ல் புத சுக்கிர குஜ சூரியாதி நால்வருமிருந்தால் ஒரு தாரம் கருப்பு நிறமுள்ளதாயிருக்கும்.

(502) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி 7-மாதிபதி 9-ல் இருந்தாலும், 12-ல் இருந்தாலும், ஒன்றில் இருந்தாலும் 7-ம் பாவம் அல்லது மூன்றும் பாவத்திலிருந்தாலும், 2 அல்லது 5-ல் அல்லது 11-ல் இருந்தாலும் மூன்று விவாக யோகமுண்டு.

(503) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி 4-ல் புத சுக்கிரரிருந்து, 7-மிடம் சனியால் பார்க்கப்பட்டாலும். குரு, சந்திரர் கூடிப் பத்திலிருந்தாலும் ஏக தாரமே யுண்டாகும்.

(504) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி 7-மாதிபதி கேந்திரத்திலிருந்து 7-மிடம் சுபரால் பார்க்கப்பட்டால் மூன்று தாரமுண்டாகும். மேலும் போகஸ்திரீகளும் சேருவர்.

(505) ஜென்ம லக்கினம் தனுசு ஆகிக் கும்பாம்சத்தில் சுக்ரனும் சிம்மாம்சத்தில் புதனுமிருந்தால் ஜென்ம தேசத்திலேயே வடக்கில் விவாகம் நடக்கும்.

(506) ஜென்ம லக்னம் தனுசு ஆகிச் சுக்கிரன் 4-ல் கேது வுடன் கூடினாலும் 10-ல் இருந்தாலும் சகோதரன் மனைவியை யணைவார். ருது ஸ்திரீகளையும் சேருவார், சூரியன் இதற்கே 7-வது அம்சத்தில் இருந்தால் 23 வயதில், யவ்வன வயதில், தார சோகமுண்டாகும், 24-ன் கடைசியில் மறு விவாகம் நேரும்.

496 முதல் 506 வரை தனுசு லக்கினம்.

ஜென்ம லக்கினம் மகரம்.

(507) ஜென்ம லக்கினம் மகரமாகி 7-மாதிபதி சனியுடன் கூடி 4-ல் இருந்து சுக்கிரன் சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் 2-ந் தாரமேற்படும்.

(508) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி 5-ல் சனி சுக்கிரரிருந்து 7யைச் சனி பார்த்தால் 2 தாரம் நேரிடும்.

(509) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி 7-ல் குரு இருந்தால் 3 தாரம் ஆகும்.

(510) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி 7-மாதிபதி நீச்சத்தில் இருந்தாலும் சுக்கிரன் அதிமித்திராம்சத்திலுமிருந்து 7-மாதிபதி செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஒரே தார முடையவனாவார்.

507 முதல் 510 வரை மகரம்.

ஜென்ம லக்கினம் கும்பம்.

(511) ஜென்ம லக்கினம் கும்பமாகி 7-மாதிபதி நீச்சத்திலி ருந்து, 7-ல் செவ்வாயுடன் ராகு கூடினால் பாலிப விவாகம் நடக் கும் நானாவித ஜாதி ஸ்திரீ ரதனாவர்.

(512) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகி 7-மாதிபதி சதயம் 4-ல், கிருத்திகை 4-ல், கேட்டை 4-ல் இந்த நக்ஷத்திர பாதங்களில் இருந்து, குருவும் சுக்கிரனும் கூடி இருந்தால் ஒரே தார மடை வார். அன்னிய ஸ்திரீயால் தன லாபமுண்டாகும்.

(513) ஜென்ம லக்கினம் கும்பம் ஆகிச் சுக்கிர புத சூரியனி வர்கள் 6-லிருந்தாலும், 11-லிருந்தாலும், சனி 9-லும் இருந்தால் அதிபாலிய விவாகம் ஏற்படும். மறுதாரமும் நேரிடும்.

511 முதல் 515 வரை கும்பம்.

(514) ஜென்ம லக்கினம் மீனமாகி ஜெனித்து 7-மாதிபதி 9-லும் சுக்கிரன் 8-லு மிருந்தாலும் மேற்படி 7-மாதிபதியுடன் ராகுவும் கூடி 7-ல் செவ்வாயிருந்தால் 21 அல்லது 22 வயதில் தாயற்ற பெண்ணை மணப்பார், மனைவி கருநிறம், இவளுடன் சில காலம் வாழ்வான். பிறகு நதியிலல்லது கிணற்றில் வீழ்ந்திறப்பாள். பல ஜாதி ஸ்திரீகள் பலவித ஸ்திரீகள் ஆகிய இவர்களை அணைபவனுவர், மறு வருஷத்தில் மறு மணம் அடைவார்.

(515) ஏழாமாதிபதி 7-லிருந்து குருவால் பார்வை யடைந்தால் 10 அல்லது 12 வயதில் விவாகம் நடக்குமென்றும் இன்னஞ் சிலர் இன்னம் பாலிய விவாகமென்றும் சொல்லியிருக்கின்றனர்.

(516) ஏழாமாதிபதி துலாம்சத்தில் ஸ்திர ராசியில் இருந்தால் 35 அல்லது 39-ல் முதல்தார மரிஷ்டமடைவாள். பிறகு 2-வது தாரம் நேரிடும். ஏழாமாதிபதியாகிய புதன் தனுசு ராசியில் துலா நவாம்சத்திலிருந்தால் தன்னூருக்குத் தெற்கில் விவாகம் நடக்கும். சிலர் இதற்கும் ஒரே தாரமென்றும் சிலர் 2 தாரமென்றும் சொல்லுகின்றனர்.

(517) ஏழாமாதிபதி நீச்சமடைந்து 7-மிடம் சனியால் பார்க்கப்பட்டால் மனைவி மரித்த பின் சன்னியாசமடைவார். சிலர் சன்னியாச யோகமேற்படுமென்றும் சன்னியாச யோகமுடையவராகவல்லது தார நாசமுடையவராக ஆவாரென்று சொல்கின்றனர்.

(518) சுக்கிரன் உச்சத்திலும் 7-ல் சனியுமிருந்தால் 7-மாதிபதியும் நீச்சமடைந்திருந்தால் தார சுகமுண்டாகாது. ஞானியாவர், பரஸ்திரீ கமனமுமுடையவராவர்.

(519) ஜென்ம லக்கினம் மிதுனமாகி லக்கினத்தில் சந்திரனும், 7-ல் செவ்வாயுமிருந்தால் ஜாதகருக்கு விவாக விக்கினமுண்டாகும்.

(520) ஏழாமாதிபதியாகிய சூரியன் லக்கினத்தில் இருந்து செவ்வாய், புதனிவர்களுடனுமிருந்து சுக்கிரன் சிம்மாம்சத்தில் மீனத்திலுமிருந்தால் ஜாதகர் ஒரே தாரமடைவார். சிலர் இரு தாரமென்று சொல்லுகின்றனர். முதல் தாரத்தின் மூலமாக 2-வது விவாகத்திற்கு எத்தினம் செய்து நின்றுவிடும், ஆயினும் பல ஜாதி ஸ்திரீ ரதனுவர்.

(521) சந்திரனுக்கு 5-ல் செவ்வாயும் 9-ல் சனியுமிருந்தால் பரஸ்திரீ கமனத்தால் தன நஷ்டமுண்டாகும்.

(522) ஏழாமாதிபதி 2-ல் உச்சனுகி சுக்கிரன் 12-ல் சூரிய புதருடன் கூடி சுக்கிரன் வர்க்கோத்தமத்தில் இருந்தால் காலாந்திரத்தில் இருதாரமுண்டாகும்.

(523) ஜென்ம லக்கினம் சிம்மமாகி 7-ல் சனி சந்திரரிருந்து 12-ல் சுக்கிர குஜரிருந்தால் 2 தாரமேற்படும். மேற்படிச் சுக்கிரன் நீச்சாம்சத்திலும் சனி ரிஷபாம்சத்திலு மிருந்தால் ஜாதகன் 2 தாரங்களுக்கும் கர்மம் செய்வான்.

(524) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி 7-மாதிபதி 3-ல் வர்க்கோத்தமத்தில் இருந்து குடும்ப ஸ்தானமான 2-ல் ராகு, கேதுவுடன் குரு கூடியிருந்தாலும் 7-மிடத்தை 5-ல் சனி இருந்து பார்த்தால் 2 தார மேற்படும்.

(525) ஏழாமாதிபதி 4-ல் உச்சனுகி சனி, சுக்ர, ராகு,கேதுக்களுடன் கூடிச் செவ்வாய் நீச்சாம்சத்திலும் கேதுவுடன் கூடினுல் காலாந்திர விவாகம் ஜன்ம பூமிக்கு மேற்கில் நடக்கும்.

(526) சுக்கிரன் கேதுவுடன் 2-ல் இருந்து சிம்மாம்சத்தில் இருந்தால் மனைவி துஷ்ட சுபாவ முடையவளாவள், ஷெ சுக்கிரனைச் சனி பார்த்தால் அன்னிய ஸ்திரீ சங்கம முடையவர், மனைவி மூட கர்ப்பத்தினுல் ஒன்று, ஒன்றரை அல்லது 3 வருஷம் வரை கஷ்டமுண்டாகிப் பிறகு சூதக வாயு வியாதியுற்று மருந்தினுல் தாய், தகப்பனுல் குணமடைவாள்.

(527) ஜென்ம லக்கினம் கடகமாகி 2-மாதிபதி 8-லும், புத சுக்கிரர் 7-லும் சனி 4-லுமிருந்து சந்திரன் 11-ல் இருந்தால் 2 தாரமுண்டாகும்.

(528) ஜென்ம லக்கினம் மேஷம் ஆகிச் சுக்கிரன் நீச்சத்திலிருந்து அந்த ஸ்தானுதிபதியாகிய புதன், சனியுடன் கூடி 6-ல் இருந்தால் முதல் மனைவி பிரசவத்தில் ஜாதகனுடைய 38-வது வயதில் மரிப்பாள். பிறகு 2-வது விவாகம் நடக்கும்.

(529) ஜென்ம லக்கினம் சிம்மமாகி 7-ல் ரவி, ராகு, புதனிவர்களிருந்து லக்கினத்தில் சனி, கேதுக்களிருந்தால் ஜாதகன் ஜன்மாந்திர சத்துருதோஷம் காரணமாகவும், பிராமணப் பிரம்மசாரியாதி தோஷமும், முன் ஜன்மத்தில் விதவைகளையும் சேர்ந்த தோஷமும் காரணமாக களத்திரம் கண்ட ரோகமடைந்தும் பலவிதரோகத்தாலும் நாநாவிதத்திலும் 7 அல்லது 9 வருஷம் வெகு தனம் செலவும் நேரிடும் இந்தக் கிரக யோகத்திற்கே ரோக ஸ்தானத்தைக் குரு பார்த்தால் சேது ஸ்நாநத்தினுல் சுகமும்,குணமும் உண்டாகும், ஜாதகர் இச்சென்மத்திலும் விதவைகள் பலஜாதி பல தரப்பட்ட ஸ்திரீகள் முதலியவர்களைச் சேர்வார்.

(530) ஏழாமாதிபதி ரவி, சுக்கிரர் கூடி லக்கினத்திலுருந்தாலும் 2-மாதி 6-லும் லக்கினுதிபதி 9-லும் இருந்தாலும் இருதாரமடைவார்.

(531) ஜென்ம லக்கினம் மகரமாகி 7-மாதிபதி 6-ல் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டும் சுக்கிரன் 11-ல் இருந்து 2-லுள்ள சனியால் பார்க்கப்பட்டு இருந்தாலும் 7-மாதிபதியாகி சந்திரன் மகராம்சத்திலும் சுக்கிரன் தனுசாமிசத்திலு மிருந்தால் 11-ல் அல்லது 12-ல் முதல் தார விவாகமும், 35-ல் முதல் மனைவி மரணமும் 37 வரை விவாகத் தடையும், 38-ல் அல்லது 39-ல் 2-ந் தார விவாகமும் நேரிடும்.

(532) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி 7-மாதிபதி லக்கினத்திலும சுக்கிரன் லக்கினத்திலல்லது 3-ல் இருந்து 7-ல் ராகு இருந்து 7-யைச் சனியும் பார்த்தால் முதல் கலியாணத்திற்கு 2, 3 தடவைகளில் எத்தனப்பட்டும் தடையுண்டாகி முதல் தாரம் விவாகமான பின்பு சில காலம் கர்ப்பதான காலம் முதல் விரோதத்தினால் விலகி நின்று பிறகு அவளுடைய பிரியத்தினலேயே எட்டு ஒன்பது வருஷத்தின் பிறகு விவாகம் நடக்கும்.

(533) ஜென்ம லக்கினம் கன்னியாகி 7-மாதிபதியாகிய குரு களத்திர ஸ்தானத்திற்குப் பாக்கிய ஸ்தானமான 7-க்கு 9-ல் அதாவது லக்கினத்திற்கு மூன்றில் இருந்தால் விவாகமான பின்பு உத்தியோக லாபமுண்டாகும். பலாத்காரமாக உத்தியோகலாபமுண்டாகும்.

(534) ஜென்ம லக்கினம் கடகமாகி 6-ல் சனி இருந்து ஆயில்யம் 4-ல் லக்கினத்தில் சுக்கிரன் செவ்வாயுடன் கூடியிருந்தால் முதல் தாரம் பிரசவித்து இறந்த பின்பு 2-ந்தார மேற்படும்.

(535) ஜென்ம லக்கினம் மகரமாகி லக்கினத்தில் 7-மாதிபதி இருந்து, சுக்கிரனுனவர் சூரியன் கேது இவர்களுடன் 9-ல்இருந்து குருவால பார்க்கப்பட்டால் ஜாதகர் ஒரே தார முடையவனுவர், சுக்கிரன் கேதுவுடன் கூடிய பலனுக பின் வயதில் மறு விவாகமின்றித் தன் வர்க்க ஸ்திரீயைச் சேருவார்.

(536) ஜென்ம லக்கினம் சிம்மமாகிச் சுக்கிர சூரியர் 4-ல் இருந்தால் இருதார முண்டாகும். இந்த கிரக யோகத்திற்கே சனி 7-ல் இருந்து நீச்ச செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் இதே பலன் தானுண்டாகும், மூத்த மனைவி மாமனார் மாமியுடன் விரோதமுடையவள், அவள் இறந்த 2-ம் மாதத்தில் மறு விவாகமுண்டாகும்.

(537) ஜென்ம லக்கினம் கன்னியாகிக் குரு 12-ல் இருந்து சுக்கிரன் 7-ல் அல்லது 8-ல் இருந்து சனி 7-மிடத்தைப் பார்த்தாலும் 7-ல் சந்திரனிருந்தாலும் முதல் தாரம் அம்மான் புத்திரியும் அவளுடைய ஆஸ்தி லாபமும், பிறகு 33-லாவது 34-லாவது 2-ந் தார லாபமும், உதாரமும் தீர்க்காயுளுடனிரு மனைவியருடனுமிருந்து புத்திர புத்திரீ சுகமுமடைவார்.

(558) ஜென்ம லக்கினம் கன்னியாகி 9-ம் பாவத்திற் கேமா மாதிபதியாகிய செவ்வாய் 9-க்கு 6-ல் அதாவது லக்கினத்திற் கிரண்டில் இருந்தால் சகோதரன் மனைவியால் அடிக்கடி குடும்ப கலகங்களுண்டாகும், இந்தக் கிரக யோகத்திற்கே 7-மிடம் சனியாலும் செவ்வாயாலும் பார்க்கப்பட்டால் வழி வழியாகக் களத்திர விரோதம் உண்டாகும், இதன் விபரமாவது மேற்படி களத்திரம் துச்சரிதையாவது அல்லது சூத்திரரால் உபதேசிக்கப்பட்ட சூன்னிய மந்திரமாவது கற்று அதனால் இக்கலஹாதிகளுண்டாகும். இந்தக் களத்திரம் வாய்த்த 10 அல்லது 12-ம் வருஷத்தில் ஜாதகனுடைய தகப்பன் மரிப்பான்.

(539) ஜென்ம லக்கினம் துலாமாகி 7-ல் செவ்வாயிருந்து 8-ல் அதாவது களத்திர ஸ்தானத்திற்கு இரண்டாமிடத்தில சுக்கிரனுமிருந்து மேற்படி சுக்கிரனுக்கு 4-ல் ராகுவுமிருந்தால் ஜாதகன் மனைவி ரூப லக்ஷணமுடையவளும், புத்திர உற்பத்தி காலத்தில் நேத்திர பீடையுமடைந்து பிறகு குணமுமடைவாள். இதற்குக் குரு மேற்படி ராகுவைப் பார்க்கவேண்டும்

(540) ஜென்ம லக்கினம் விருச்சிகம் ஆகி 11-ல் ராகுவுடன் சுக்கிரன் கூடியிருந்து சுக்கிரன் மிதுனம்சத்திலும், ராசியில் குரு 7-லுமிருந்து 7-யைச் சனி பார்த்தால் ஜாதகன் விவாகமின்றி பிரம்மசாரியாகி யிருப்பான்.

(541) சுக்கிரன் ராகுவுடன் கூடியிருந்து அம்சத்தில் ராகு ஏழில் இருந்தால் பாம்பைப் பார்த்தலால் அவளுக்கு ஆபத்து ஏற்படும் அல்லது பாம்பு கடித்திறப்பாள்.

(542) ஜென்ம லக்கினம் கும்பமாகி 7-மாதிபதி 12-ல் அதாவது 7-மிடத்திற் காறுமிடத்தில் அஷ்டமாதிபதியுடன் கூடியிருந்து 7-ல் செவ்வாயும் கேதுவும் கூடினால் முதல் தாரம் விஷபேதியால் மரித்த பின்பு 2-வது விவாகம் நடக்கும்.

(543) ஜென்ம லக்கினம் மகரமாகி மேஷத்தில் குருவும் கேதுவும் கூடியிருந்து ரிஷப நவாம்சத்தில் சுக்கிரனுடன் கூடியிருந்தால் 2 தாரமேற்படும். முதல் மனைவி பிரசவ காலம் முதல் நோயுற்று சம்போகமற்று, அதனால் 7 அல்லது 9 வருஷம் வரையில் பர ஸ்திரீ போகமுடையவராகி 25 அல்லது 26-ல் 2-ந் தாரமுமடைவார், இவனுடைய முதல் தாரம் 42-வது வயதில் மரிக்கும்.

(544) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி 7-மாதிபதி 8-ல் சுக்கிரனுடன் கூடியிருந்து சுக்கிரன் நீச்சத்திலுமிருந்தால் 2 தாரமேற்படும், ஜாதகா முதல் தாரம் விவாகமான ஒரு வருஷத்தில் கர்ப்பாதானமும், 2-ம் வருஷத்தில் பிரசவத்தில் அவள் மரணமும்

அடைவார். இந்த கிரகயோகத்திற்கே 7-மாதிபதி 12-ல் இருந்தால் நீச்ச தோஷத்தினுல் மறு விவாகத்திற்கு தடையுண்டாகும். சந்திரனைக் குருவும் சனியும் பார்த்தால் முதல் தார மிறந்த 5 அல்லது 6-வது வருஷத்தில் இடதுகால் ஊனமுள்ள அல்லது நொண்டியான தகப்பனற்ற பெண்ணை மணந்து அவள் சகோதரியான விதவையின் தனத்தை விவகாரத்தினுல் அடைவான்.

(545) ஜென்ம லக்கினம் கும்பமாகி 7-மாதிபதி 4-ல் தன புஞ்சமாதிகளுடன் கூடினுல் வெகு லக்ஷ்மீ கடாக்ஷமுள்ள மனைவி வாய்ப்பாள்.

(546) ஜென்ம லக்கினம் கடகமாகி 7-மாதிபதி 11-ல் சுக்கிரனுடைய வீட்டில் சனியின் அம்சத்தில் கும்பத்திலுள்ள சுக்கிரனுடன் கூடியிருந்து கும்பத்தில் மகர நவாம்சத்திலுள்ள குருவால் மேற்படி ஸ்தானம் அம்சத்தில் பார்க்கப்பட்டால் ஒரே தார முண்டாகும், பல ஜாதி ஸ்திரீகளையு மணைவார்.

(547) ஜென்ம லக்கினம் சிம்மமாகி 7-மாதிபதி 8-ல் குரு ராகுக்களுடன் கூடியிருந்து சுக்கிரன் 12-ல் சந்திரனுடன்கூடினுல் ஒரே தார முண்டாகும்.

(548) ஜென்ம லக்கினம் கன்னியாகி 7-மாதிபதி 8-ல் சனியுடன் கூடியிருந்து சுக்கிரன் 10-ல் 12-மாதிபதியுடன் கூடின் 2 தாரம் நேரிடும். முதல் தாரம் 5 அல்லது 6 வருஷத்தில் 3 பிரசவம் (2 பெண், 1 புருஷப் பிரஜையும்) பிரசவித்த பின்னுல் பிரசவத்தில் மரிப்பாள், பிறகு மறு விவாகம் நடக்கும், அதற்கு 2, 3 இடங்களில் 2, 3 தடவைகளில் எத்தனப்பட்டு 2 அல்லது 3 வருஷம் சென்ற பிறகு மூத்த 2-வது சகோதரியின் பிரயத்தனத்தினுல் விவாகம் நடக்கும்.

(549) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி 9-மிடத்திற்கு ஏழுக்குடையவர் 9-ல் சிம்மத்தில் ராகுவுடன் கூடி லக்கினத்திற்கு 3-ல் உள்ள செவ்வாயால் பார்க்கப்பட்டால மூத்த சகோதரன் மனைவி விதவையானவளைச் சம்போகிப்பார். சந்தானம் காரணமாக மூன்று மனைவிகளை மணப்பார், நான்காவதாக ஸ்மார்த்தப் பெண்ணையு மணப்பார்.

(550) ஜென்ம லக்கினம் துலாமாகி 4-ல் செவ்வாய் கேதுவுடன் கூடியும் குரு ராகுவுடன் கூடி 10-லும், சுக்கிரன், புதன் கூடி 11-லு மிருந்தால் பற்பல ஜாதி, நாஞஜாதி சுயவர்க்கம் புதிய சகல ஸ்திரீகளையும் 18 வயது முதல் 50 வயதுவரை போகிப்பார். இடையிடையில் தன் மனைவியுடனும் கூடுவான்.

(551) ஜென்ம லக்கினம் கன்னியாகி, 8-மாதிபதி சுக்கிரனுடன் கூடினுலும், குருவுடன் கூடினுலும் முதலில் ஒரு பெண்

விவாகத்திற்குத் தடைப்பட்டுப் பிறகு அவனே மணப்பான். இந்தக் கிரக யோகத்திற்கே 7-மிடத்தை அம்சத்தில் சனி, செவ்வாய் பார்த்தாலும், ராசியில் பார்த்தாலும விவாகம் தடைப்படும். தகப்பனிறந்த 10 வருஷத்திற்குப் பிறகு விவாகம் நடைபெறும்.

(552) ஜென்ம லக்கினம் மகரமாகி 7மாதிபதியான சந்திரன் உத்திரட்டாதி 5-வது பாதத்தில் இருந்து லக்கினத்தில் சுக்கிரன் ரவி, ராகு, புத, குஜருடன் கூடினல் வெகு விவாகமின்றி (சுய ஜாதியில்) உள்ள கன்னியா ஸ்திரீயும், பிராம்மண ஸ்திரீயும், ஜார ஸ்திரீயும், வேசி ஸ்திரீயும் ஆகி இவர்களையும் சேர்ந்து வெகு காமியாயும், வெகு போகியாயும் காமாதுரனுக யிருப்பார், சிலர் வெகு மேன்மையான தாரமுண்டென்று கூறுகின்றனர்.

(553) ஜென்ம லக்கினம் மகரம் ஆகி 7-மாதிபதி 9 லிருந்து சுக்கிரன் 7-ல் இருந்தால் மூன்று தாரமுண்டாகும். இந்தக் கிரக யோகத்திற்கே ஏழாமாதிபதியான சந்திரன் 12-ல் உள்ள சனியாலும், செவ்வாயாலும் கூடி அல்லது பார்க்கப்பட்டாலும் குரு 6-ல் மேற்படி செவ்வாயுடன் கூடியுமிருந்து ஷை சனியாலும் பார்க்கப்பட்டால் 2 தாரம் கர்ப்பத்துடன் வயற்றில் சிசு மரித்து மரிப்பார். பிறகு அம்மான் புத்திரியை மணந்து வாழ்வர்.

(554) ஜென்ம லக்கினம் கன்னியாகி 4-ல் சுக்கிரனும் 7-ல் சனியும் 11-ல் அல்லது 9-ல் குருவுமிருந்தாலும் ஜாதகனுடைய முதல் மனைவி பிரசவம் வெளிப்படாமலேயே மரிப்பாள். பிறகு ஜாதகன் அவளுடைய சகோதரியை 25-வது வயதில மணப்பார். அவளுமிப்படியே மரிப்பாள். பிறகு முதல் தாரத்தின் சிற்றப்பன் புத்திரியை மணப்பார், வெகு தாரங்களுமடைவார்.

(555) ஜென்ம லக்கினம் மேஷமாகி 7-ல் குரு, புத, சுக்கிரிருந்து சனியால் பார்க்கப்பட்டால் 3 தார மேற்படும்.

(556) ஜென்ம லக்கினம் மகரமாகி 7-மாதிபதி சந்திரன் 10-ல் வர்க்கோத்தமத்தில் இருந்து சுக்கிரன் 8-ல் செவ்வாயுடன் கூடிச் சனியால் பார்க்கப்பட்டால் இருதாரம் ஏற்படும். முதல் தாரமிருக்கும்போதே 2-ந் தாரமேற்படும்.

(557) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி 10மாதிபதி சுக்கிரன் 3-ல் வர்க்கோத்தமம் பெற்று 7-ல் உள்ள சனியால் பார்க்கப்பட்டால் பல ஸ்திரீகளின் சேர்க்கையால் மனைவிக்கு ரோகமுண்டாகும் ஒன்று முதல் 5 இடம் வரையில் விவாக எத்தனஞ்செய்து விவாகத் தடை ஏற்படும், விவாகமே வெகு காலங்கடந்து ஆகும்.

(558) ஜென்ம லக்கினம் துலாமாகி 7-மாதிபதி 7-க்கு 8-ல் அதாவது 2-ல இருந்து சுக்கிரன் 3-ல் சுப சத்துரு ராசியில் இருந்து சனியுடன் கூடி. அம்சத்தில் இம்மூவரும் துலாத்தில்

கூடின்ஜாதகர் தன் மனைவியைத் த. ர இனப்பிரபுக்களில் பிரசித்த பிரபுவினிடம் போகத்திற்கிசையச் செய்வர், அதனல் ஜாதகருக்குப் பிரசித்த சம்பத்தும்; உத்தியோகமும், சகல சம்பத்துமுண்டாகும் இடையில் தானும் மனைவியிடம் கூடுவார்.

(559) ஜென்ம லக்கினம் கடகம் ஆகிச் சனி களத்திர ஸ்தானத்திற்கிரண்டில் அதாவது 8-ல் இருந்து 11-ல் சுக்கிரன் ராகுவுடன் கூடில் ஜாதகன் ஒரு தாரமே உடையவர், இந்தக் கிரக யோகத்திற்கே விவாக காலததில் கலகமுண்டாகும, 4 அல்லது 5 வேசிகளை சேருதலுடையவராவர்.

(560) ஜென்ம லக்கினம் கடகம் ஆகிச் சனி 7-க்குப் பத்தில் அதாவது லக்கினத்திற்கு 4-ல் உச்சனுகிச் சுக்கிரன் லக்கினத்தில் இருந்து சனியால் பார்க்கப்பட்டு, 7-ல் செவ்வாய் பார்வை யிருந்தால் 2 அல்லது 3 தார யோகம் இருந்தாலும் ஜார ஸ்திரீ சேர்க்கையால் ஒரே தாரமுண்டாகும.

(561) ஜென்ம லக்கினம் கடகமாகிச் சனி 8-ல் வர்க்கோத்தமமடைந்து 5-ல் சுக்கிரன் சந்திரனுடன் கூடி இருந்து குருவால் சனி சுக்கிராதிகள் பார்க்கப்படின் ஒரே தாரம் ரூபலக்ஷணமுள்ளவளாக வாய்ப்பாள்.

(561-a) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி 7மாதிபதி சுய க்ஷேத்திரத்தில் 7ல் இருந்தாலும், நீச்சத்திலிருந்தாலும் சுக்கிரன் 9ல் சனி குஜ சூரியருடன் கூடியிருந்தால் 2, 3 இடங்களில் விவாக எத்தனம் செய்து தடைப்பட்டுப் பிறகு விவாகம் நடக்கும்.

(562) ஜென்ம லககினம் மிதுனம் ஆகி சுக்கிரனும் சனியும் ஒன்ருய்க் கூடி 9ல் இருந்தால் 37 வயதில் விவாகம் நடக்கும்.

(563) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி 9மிடத்துக் கேழுக்குடைய சனி மேற்படி 9க் கேழுக்குப் பன்னிரண்டில் அதாவது லக்கினத்திற்கிரண்டில் உச்ச குஜனுடன் கூடியிருந்தால் ஜாதகன் தகப்பனிரு தாரமடைவான், இந்தக் கிரகயோகத்திற்கே சுக்கிரன் மீனத்திலும், குரு தனுசிலுமிருந்து நவாம்சத்தில் சுக்கிரன் குருவுடன் கூடி நீச்சாம்சத்திலிருந்தால் வெகு காமியாகி 7 வருஷம் வரை சூத்திர விதவையைச் சேருவார்.

(564) ஜென்ம லக்கினம் கும்பமாகி 7மாதிபதி 11ல் சனியுடன் கூடினுல் இருதார மேற்படும். சனி, சுக்கிரன், புதன், ரவி இவர்கள் 11ல் இருந்தாலுமிப்படியே யாகும்.

(565) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி 7மாதிபதி 7ல் குருவுடன் கூடியிருந்தால் ஜாதகர் 3 தாரமடைவார். 2ந் தாரம் திடமும் துஷ்டத்தன்மையும் உடையவள், சதா புருஷனுடன் சண்டையிடுபவளாவள், இவளால் புருஷன் சுகக்குறைவும், வியாகூலமுமடை

வார். இந்தக் கிரகயோகத்திலே 3ல் சனியும் 8ல் குஜ சுக்கிருமிருப்பின் முதல் தாரம் பிரசவத்தில் இறப்பான், 2ந் தாரம் முன் சொன்னபடி துஷ்டையாவள், இவள் மூன்றுந்தாரத்திற்கு துர்மந்திர துவேஷம் செய்விப்பாள், இதற்குப்பரிகாரமாக பிரதிப் பிரயோகத்தை 7 வருஷத்திற்குள் செய்யாவிடில் இவளும் மரித்து விடுவாள்.

(566) ஜென்ம லக்கினம் கன்னியாகி 7-மாதிபதி 11லிருந்து 8மாதிபதியுடனும் கூடியிருக்க 9ல் சுக்கிரனும் 7ல் ராகுவுமிருந்து சனியால் சுக்கிரன் பார்க்கப்பட்டாலும் அம்சத்தில் சுக்கிரனுச்சாம்சத்தில் இருந்து சூரியனுடனும் கூடினல் 30 வயதிற்கு மேல் விவாகமும் அடைவார், இருதார முண்டென்று சிலர் மதம்.

(567) ஜென்ம லக்கினம் கன்னியாகி குரு லக்கினத்தில் ரிஷபாம்சத்திலும் சந்திரன் மீனத்திலும் 6ல் ராகு வர்கோத்தமத்திலுமிருந்தால் ரூப லக்ஷணமுள்ள மனைவியால் சுகமடைவார்.

(568) ஜென்ம லக்கினம் சிம்மமாகி 6, 7க்குடைய சனி லக்கினத்தில் ராகுவுடன் கூடி சூரியனுடைய க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் மனைவி ரக்த சோகையால் 21 வயது முதலாக 7 வருஷம் வரை தேக துர்ப்பலமுடையவளாவள், சாந்தி செய்தால் குணமடைவாள். இந்தக் கிரக யோகத்திற்கே சுக்கிரன் 11ல் குஜனுடன் கூடியிருந்தால் ஒரே தாரமடைவார், தாரம் ரூபலக்ஷன முடையவளாவள், பதிபக்தி யுடையவள், பதிவிரதை, ஜாதகர் வீணில் சம்சயப்பட்டுப் பிறகு சந்தேகம் நீங்கி சுகமடைவார்.

(569) ஜென்ம லக்கினம் ரிஷபமாகி தார ஆருடாதிபதி குரு ஆகி இவர் 5லிருந்து, சுக்கிரன் லக்கினத்திலிருந்து சந்திரனல் பார்க்கப்பட்டாலும், தாராரூடத்தைக் குரு பார்த்தாலும் ஒரே தாரம் ஏற்படும், இரண்டு தாரமென்பது சிலர் மதம்

(570) ஜென்ம லக்கினம் ரிஷபமாகி 7மாதி தன் உச்சத்திலிருந்தாலும் சந்திரன் சனியுடன் கூடியிருந்து சுக்கிரன் குடும்பாதியுடன் கூடினலும் ஜாதகர் ஒரே தாரமுடையவராவர், போக ஸ்திரீ பிரியராவர்.

குறிப்பு :—இந்த ஏழாம் பாவம் என்ற களத்திர பாவம் விஷயமாக இரண்டாம் மலரில் அதிகமாகக் கொடுக்கப்படும்.

முற்றிற்று.